REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 5 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN 92 தினகரன்

வருட. 92 இல. 212 | Thursday 05, September, 2024 | 16 பக்கங்கள் | 50/-




# புதிய பாதுகாப்பு சாதனங்களுடன் 50 இலட்சம் கடவுச்சீட்டுகள்

## 15 ஆம் திகதிக்குள் 50,000 கடவுச்சீட்டுகள் கிடைக்கும்; நெரிசல் நிலை உடன் சீராகும்




புதிய பாதுகாப்பு சாதனங்களுடன் கூடிய 50 இலட்சம் கடவுச்சீட்டுகள் கோரப்பட்டுள்ளதாகவும், இந்த கடவுச்சீட்டுகள் விரைவில் இலங்கைக்கு பெற்றுக்கொள்ளப்படுமெனவும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் 50,000 கடவுச்சீட்டுகள் பெற்றுக் கொள்ளப்படுமெனவும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொண்டதன்பின்னர், தற்போதைய நெரிசல் நிலை தவிர்க்கப்படும்.

கடவுச்சீட்டுகளின் தினசரி விநியோகம் 1,000 ஆக இருக்க வேண்டுமென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.



03 TNA எம்.பிக்கள் பெரும்பாலானோர் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு
சந்தித்து பேசியதில் தெரிந்தது



03 ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கும் புதிய ஜனநாயக முன்னணி
ரவிக்குமார் தலைமையில் அறிவிப்பு

### எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்

## நாட்டின் பிரதான 04 முச்சக்கரவண்டி சங்கங்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு



ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக இலங்கையின் நான்கு பிரதான முச்சக்கர வண்டி சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம், தேசிய Taxi app முச்சக்கரவண்டி தொழிற்துறை சங்கம், ஐக்கிய பயணிகள் போக்குவரத்து சேவை வல்லுநர்கள் சங்கம், மேல் மாகாண முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் என்பன ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்துள்ளன.

முச்சக்கரவண்டி சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் நேற்று (04) காலை கொழும்பு காலிமுகத்திடல் போராட்ட பூமியில் ஒன்றுகூடியதுடன், தங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க வேண்டுமென விடுத்த கோரிக்கையை அடுத்து அந்த இடத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கடந்த 25 வருடங்களாக நான்கு நிறைவேற்று ஜனாதிபதிகளின் கீழ் தீர்க்கப்படாத முச்சக்கரவண்டி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் தொடர்பான பிரச்சினைக்கு 24 மணித்தியாலங்களில் தீர்வை வழங்கியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்த முச்சக்கர வண்டி சாரதிகள், கடந்த காலத்தில் தங்களின் தொழில்களை மேற்கொள்ள 06

### அரசியலில் புதிய திசையை நோக்கி

## புதிய அரசியல் கூட்டணி இன்று பத்தரமுல்லயில் ஆரம்பம்

அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரன



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெருந்தொகையான பிரதிநிதிகளின் பங்கேற்புடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் மற்ற அரசியல் கட்சிகள் இலங்கை அரசியலில் புதிய திசையை நோக்கிய பரந்த புதிய அரசியல் கூட்டணியின் அறிமுகம் இன்று (05) நடைபெறவுள்ளதாக சுகாதார 06



03 கெஹெலியவின் மனு மீதான தீர்ப்பு ஒக். 03க்கு ஒத்திவைப்பு

### எரிவாயு, எரிபொருள் வரிசையை ஒழித்த அரசு

## கடவுச்சீட்டு வரிசைக்கு ஒருமாத காலத்துள் தீர்வு

புதிதாக 7,50,000 கடவுச்சீட்டுகள் உடனடியாக அச்சிட தீர்மானம்



புதிய பாதுகாப்பு சாதனங்களுடன் கூடிய 50 இலட்சம் கடவுச்சீட்டுகள் கோரப்பட்டுள்ளதாகவும், இந்த கடவுச்சீட்டுகள் விரைவில் இலங்கைக்கு பெற்றுக்கொள்ளப்படுமெனவும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் 50,000 கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளுமெனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. 06

### அரசாங்க அதிகாரிகளுக்கான

## வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்க விரைவில் நடவடிக்கை

நிச்சயம் கிடைக்குமென வஜிர உறுதி




அரசாங்க அதிகாரிகளுக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் சுமார் 75,000 அனுமதிப் பத்திரங்கள் கடந்த ஐந்து வருடங்களாக தேங்கிக்கிடப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன நேற்று (4) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தின் விதிமுறைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் நிதியமைச்சு சர்வதேச நாணய 06

## பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள் இணையமூடாக பெறுவதற்கு வசதி

வெளிவிவகார அமைச்சினூடாக ஆரம்பம்




பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களை இணையத்தினூடாக பெற்றுக்கொள்ள புதிய முறையை பதிவாளர் நாயக திணைக்களம் வெளிவிவகார அமைச்சினூடாக ஆரம்பித்துள்ளது.

இப்புதிய நடைமுறை தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி 06

## டிசம்பர் மாத இறுதியில் டெங்கு நோய் பரவல் தீவிரமடையலாம்

PHI சங்கம் எச்சரிக்கை



நாட்டின் தற்போதைய காலநிலை நிலவரத்துக்கமைய, எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் டெங்கு நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடுமென பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, தற்போதைய மழையுடனான காலநிலையையடுத்து டெங்கு நுளம்பு 06

## பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் பேகம் காலிதா சியா விடுதலை



பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் காலிதா சியா (Khaleda Zia) மேலும் ஐந்து வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு இவர் வெவ்வேறு திகதிகளில் பிறந்தநாள் கொண்டாடி மோசடியில் ஈடுட்டதாகவும், 06

## 09 மாகாணங்களிலும் நிலையான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள்

ஐ.ம.ச. அரசில் முன்னெடுக்கப்படும் – சஜித்



யுத்தத்தால் பாதிப்படைந்த வடக்கு,கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திக்காக நிலையான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு இதுவரை இருந்த ஜனாதிபதிகளால் முடியாமல் போயுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். 06

## ஜனாதிபதி ரணிலும் சஜித்தும் ஒன்றிணைய வேண்டும்

சுயாதீன MP ஆக செயற்படப் போவதாகவும் அறிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஒன்றிணைய வேண்டுமென வலியுறுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பியும் இராஜாங்க அமைச்சருமான அருந்திக பெர்னாண்டோ, இன்றிலிருந்து (நேற்றிலிருந்து) தான் சுயாதீன எம்.பியாக செயற்படப் போவதாகவும் அறிவித்தார். 06

### ரூ. 1,700 சம்பள உயர்வு விடயத்தில்

## பெருந்தோட்ட தொழிலாளர்களை இ.தொ.கா ஒருபோதும் ஏமாற்றாது

10 ஆம் திகதி தீர்வு கிடைக்கும்



பொகவந்தலாவ நிருபர்

மலையக பெருந்தோட்ட தொழிலாளரின் 1,700 ரூபா சம்பள விடயத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்ட தொழிலாளர்களை ஒருபோதும் ஏமாற்றாதென 06

### அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றுக்கு

## உச்ச கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயம்



அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் உச்ச கட்டுப்பாட்டு விலைகளை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 162 முதல் 184 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளை சீனி 235 முதல் 264 ரூபா வரையிலும், ஒரு கிலோ பருப்பு 270 முதல் 303 ரூபா வரையிலும் விலை 06

## தமிழரை ஒன்றிணைத்ததாக மக்கள் தீர்ப்பளிக்க வேண்டும்

தமிழ் பொதுவேட்பாளர் அறைகூவல்



சீரழிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை ஒன்றிணைக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அமையவேண்டுமென தமிழ் தேசிய கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. 06

## NPP ஆட்சியமைத்தால் முஸ்லிம்களுக்கு ஆபத்து

இம்ரான் மஹரூப் MP எச்சரிக்கை



தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களின் நலன் வெகுவாகப் பாதிக்கப்படுமென திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார். கிண்ணியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

தேசிய மக்கள் சக்தியில் பாராளுமன்ற உறுப்பினராக வரக் கூடிய செல்வாக்குள்ள முஸ்லிம்கள் 06

## வரி விதிப்புகளால் மட்டும் நாட்டை மீட்க முடியாது

அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டும் – நாமல்



வரி விதிப்பதும் சொத்துக்களை விற்பதும் மட்டுமே அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான ஒரே வழி எனில் நாட்டு மக்களால் நிம்மதியாக வாழ முடியாதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிவித்திகல பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும்போது இதனைக் குறிப்பிட்டுள்ளார். 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் அபிவிருத்தி 06





# ஏனைய தலைவர்களைப் போலன்றி, வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டே நான் மேடைக்கு வருகின்றேன்

## இரத்தினபுரி 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் ஜனாதிபதி

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான பரிந்துரைகளை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் இருந்து நீக்கிக் கொள்ளுமாறும், தான் அதனை நிறைவேற்றி முடித்து விட்டதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பெல்மடுல்ல வாராந்த சந்தை வளாகத்தில் நேற்றுமுன்தினம் (03) நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டதாவது:**

"அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பான அறிக்கையை உதய செனவித்ன இன்று என்னிடம் சமர்ப்பித்தார். நாம் அளித்த மற்றொரு வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளோம். நாம் வாக்குறுதி அளிப்பதற்காக மேடைகளில் ஏறுவதில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டுத்தான் மக்கள் முன்னிலையில் சொல்கிறேன். தங்கள் விஞ்ஞாபனங்களில் உள்ள சம்பள உயர்வு குறித்த வரிகளை நீக்கி விடுமாறு ஜே.வி.பியிடமும் ஐ.ம.ச. இடமும் கேட்டுக் கொள்கிறோம்.

2023 இல் வாழ்க்கைச் செலவு உயர்ந்து இருந்தது. தற்பொழுது ரூபா பலப்படுத்தப்பட்டது. வருமானம் அதிகரிக்கப்பட்டது. 2024 இல் பல நிவாரணங்கள் வழங்கியுள்ளோம். அரச ஊழியர்களின் சம்பளம், கொடுப்பனவு என்பன அதிகரிக்கப்பட்டுள்ளன. வாழ்க்கைச் செலவு குறைந்துள்ளது. இதனுடன் எமது செயற்பாடுகளை நிறுத்தப் போவதில்லை. ரூபா மேலும் பலமடையும்.

இரண்டொரு வருடங்கள் செயற்படுவதால் மாத்திரம் நாட்டில் முழுமையான ஸ்திரநிலை ஏற்படாது. எமது திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். மொத்தத் தேசிய உற்பத்தியை மேலும் அதிகரிக்க வேண்டும். பணம் அச்சிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. இருக்கும் வருமானத்தை கொண்டு செலவுகள் மேற்கொள்ளப்படுகிறன.

அரசதுறை மட்டுமன்றி தனியார் துறை சம்பளத்தையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஐ.ம.ச மற்றும் தே.ம.ச என்பன வருமானத்தைக் குறைத்து செலவை குறைப்பதாக குறிப்பிட்டுள்ளன. கோட்டாபய ஆட்சியில் செய்தது போன்று செயற்பட்டு மீண்டும் வரிசையில் இருக்க வேண்டுமா? உண்மை நிலையை கூறியே ஆட்சியை மீளப்பெற வந்துள்ளோம். 4 வருடங்கள் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. கடந்த காலத்தில் தொழில்களை மக்கள் இழந்தனர். ஒரு இலட்சம் தொழில்வாய்ப்புகள் அடுத்த வருடம் வழங்கப்படும்.



### அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான யோசனையை தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்து நீக்கிவிடுங்கள்; அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுவிட்டது - ஐ.ம.ச மற்றும் ஜே.வி.பிக்கு ஜனாதிபதி தெரிவிப்பு



பல்வேறு நாடுகளுடன் பேசி பயிற்றப்பட்ட தொழிலாளர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். பிங்கிரிய, திருகோணமலை, ஹம்பாந்தோட்டையில் முதலீட்டு வலயங்களை ஆரம்பிக்க இருக்கிறோம். சுரங்கத் தொழிலாளர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சூரிய சக்தி திட்டங்களை ஆரம்பிக்கவும் டிஜிட்டல் பொருளாதாரத்தை முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளோம். எதிர்வரும் 10 வருடங்களில் எமக்குத் தேவையான அந்நிய செலாவணியை உருவாக்காவிடின் நெருக்கடி நிலை ஏற்படும். குறைந்த வருமானம் பெறுவோருக்கு சிறந்த கல்வி, சுகாதாரம் வசதிகளை வழங்கவும் வருவாயை அதிகரிக்கவும் புரட்சிகரமான திட்டங்களை முன்னெடுக்க இருக்கிறோம்.

பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும். முதன் முறையாக பெண்களை வலுப்படுத்தும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக முறையிட கல பொலிஸ் நிலையங்களிலும் பிரிவு ஆரம்பிக்கப்படும். வேறு எந்த கட்சியாவது பெண்களுக்காக இத்தகைய நடவடிக்கை எடுத்துள்ளதா? சமூக நியாய ஆணைக்குழு ஒன்றை உருவாக்க இருக்கிறோம். அரசியல் முறைமையையும் மாற்ற இருக்கிறோம். ஏனைய கட்சிகள் மோசடி பற்றி பேசினாலும் உலகில் தலைசிறந்த மோசடி தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் சில சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். திருடர்களைப் பிடிப்பதற்கான நிறுவனங்களை பலப்படுத்த வேண்டும். அரசியல்வாதிகளால் திருடனைப் பிடிக்க முடியாது. அது பொலிஸாரினதும் நீதிமன்றங்களினதும் பணியாகும்.

முகங்களைப் பாராது கொள்கைக்காகவே மக்கள் வாக்களிக்க வேண்டும். சஜித்தினால் வெல்ல முடியாது. சஜித்திற்கு வாக்களித்து அநுரவை பலப்படுத்தாதீர்கள். செப்டம்பர் 21 ஆம் திகதி காஸ் சிலிண்டருக்கு வாக்களியுங்கள். தவறினால் காஸும் இல்லை. எதிர்பார்க்கும் மாற்றமும் நடக்காது."

**இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புற:**

"எதிர்க்கட்சியினர் 5000 ரூபாய்க்கு உரம் தருவதாக கூறுகிறார்கள். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே 4000 ரூபாவிற்கு உரம் வழங்குவதாக உறுதியளித்திருக்கிறார். அடுத்த வாரத்திலிருந்தே அதனை நடைமுறைப்படுத்தப் போகிறோம். இந்த நிலையில் எதிர்கட்சித் தலைவர் புதிதாக செய்ய வேண்டுமா?





அதேபோல இரத்தினபுரியில் மாணிக்கக்கல் தொழிற்துறையைப் பலப்படுத்துதற்கான திட்டங்களை செயற்படுத்தவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். அணிந்து கொள்ள ஆடை இல்லை என்று பஞ்சம் பாடும் ஜேவிபினர் அரசியல் பிரசாரத்துக்கு பெருமளவில் செலவிடுவது வேடிக்கையானதாகும்.

நாட்டில் வரிசை யுகத்தை நீடிக்கச் செய்ய ஒரு குழு முயற்சித்த போது அதிலிருந்து மக்களை விடுவிக்க வழி செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நாட்டு மக்கள் ஆதரவளிக்க வேண்டியது அவசியமாகும்."

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திசாநாயக்க:

"ஜனநாயக வழிக்கு வருவதாக அறிவித்த ஜே.வி.பி 1988 தேர்தலின் போது தேர்தலில் போட்டியிடுவது மரணதண்டனைக்குரிய குற்றம் என அறிவித்தது. தேர்தல் கடமை மேற்கொண்டால் அதற்கான தண்டனை மரணம் என மாவட்ட செயலாளர்கள் எச்சரிக்கப்பட்டதோடு, வாக்களிப்போருக்கு மரணம் பரிசளிக்கப்படும் என பொது மக்களுக்கும் அறிவிக்கப்பட்டது. தேர்தலின் பின்னர் ஐ.தே.க எம்.பிகள் அனைவரும் விலக வேண்டும் என்றனர். அன்று ஜே.வி.பி வன்முறைக்கு முகங்கொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க. சட்டம் ஒழுங்கை பேண முக்கிய பங்காற்றினார் ரணில் விக்கிரமசிங்க.

1000 இற்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து விலகிச் சென்றுள்ளனர். ஜே.வி.பிக்கு எதிராக பல்கலைக்கழக தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்த மாணவர்கள் துரத்தித் துரத்தி அடிக்கின்றனர்.

இன்றும் அந்த நிலைமை காணப்படுகிறது. ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்து விட்டதாக நல்லவர்கள் போல நடித்தாலும் இன்னும் பழைய போக்குடனே உள்ளது. கடந்த போராட்டத்தின் போது அரச உடமைகளை உடைத்து எம்.பிகளின் வீடுகளுக்குத் தீவைத்து சொத்துக்களை திருடியதாக பிடிபட்டவர்களில் அதிகமானவர்கள் அநுர குமாரவின் ஜே.வி.பி கட்சியனர் தான். "

**பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன:**

"உலகில் எந்த நாடும் இவ்வாறு ஒன்றரை வருடத்தில் மீண்டது கிடையாது. அவுஸ்திரேலிய முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிஸன் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தார். வங்குரோத் தடைந்த நாடென்று நினைத்து வந்தேன். ஆனால் அதிசயக்கும் வகையில் அனைத்தும் மாறி வழமை நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஆனால் எதிரணியினர் ஜனாதிபதியை பகிரங்கமாக விமர்சிக்கின்றனர்".

**அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி:**

"சந்திரிக்கா ஆட்சியில் 39 ஜே.வி.பி எம்.பிகள் இருந்தனர். சகல மாவட்டங்களிலும் ஜே.வி.பி தான் முதலிடம் பெற்றனர். இரத்தினபுரியில் மாத்திரம் நான் முதலிடம் வந்தேன். என்னுடன் 4 பேர் அமைச்சரவையில் இருந்தனர். பல இராஜாங்க அமைச்சர் இருந்தனர். 10 ஆயிரம் குளங்கள் கட்டுவதாக நாடுபூராவும் போஸ்டர் ஒட்டினார்கள். எதனை அநுர குமார கட்டினார்?

அன்றிருந்த ஜனாதிபதியும் திறைசேரியில் இருந்த காலவதியான பொருளாதார நிபுணர்களும் வரியைக் குறைத்ததால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. அநுரவும் சஜித்தும் மாறி மாறி வாக்குறுதிகளை அள்ளி வழங்குகிறார்கள். பொய் வாக்குறுதி அளிக்கும் தலைவர்களன்றி யதார்த்தமான தலைவர்களே நாட்டுக்குத் தேவை. வேட்பாளர் பட்டியலில் உண்மை பேசும், நாட்டை மீட்கக் கூடிய, பொருளாதரத் திட்டமுள்ள ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமே"




பெல்மதுளையில் இருந்து
லோரன்ஸ் செல்வநாயகம்

---

# மன்னாருக்கான போக்குவரத்தை மையமாக வைத்து பாரிய அபிவிருத்தித் திட்டம்

## ஐ.ம.ச வேட்பாளர் சஜித் பிரேமதாச



மன்னாருக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் மற்றும் இந்தியாவுக்கும் இடையிலான போக்குவரத்து தொடர்பை மையமாக வைத்து பாரிய அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்க முடியும் எனவும் சுற்றுலாத்துறை மற்றும் உற்பத்தி தொழிற்துறையை உருவாக்கி பலமிக்க அபிவிருத்தியை கொண்டு வர முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் வெற்றிப் பேரணி தொடரின் 32 ஆவது கட்டம் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "யுத்தத்தினால் பெருமளவு பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக வளமான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு கடந்த காலங்களில் இருந்த எந்த ஒரு தலைவராலும் முடியாமல் போயிருக்கின்றது.

எனவே நான் ஜனாதிபதியான உடனே வடக்கு, கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு, யுத்தத்தின் பின்னரான பாரிய அபிவிருத்திக்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்டி, வடக்கையும் கிழக்கையும் மையமாகக் கொண்ட பாரிய அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம்.

ஏனைய மாகாணங்களுக்கும் அதன் பிரதிபலன் செல்லக்கூடிய வகையில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்போம். சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2022 ஆம் ஆண்டு மேற்கொண்ட கணக்கெடுப்பின் ஊடாக, அந்தந்த மாகாணங்களில் தேசிய உற்பத்திக்காக அவர்கள் வழங்குகின்ற பங்களிப்பையும் கணக்கிட்டு இருக்கின்றார்கள்.

விவசாயிகளுக்கும், மீனவர்களுக்குமான சலுகைகளாக 50 கிலோ கிராம் உடைய உர மூடை ஒன்றை சலுகை விலை அடிப்படையில் 5000 ரூபாவிற்கு வழங்குவதோடு, விவசாயிகளின் விவசாய கடனை இரத்து செய்வோம் என எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



QR CODE முறையூடாக முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் நிவாரண அடிப்படையில் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுப்போம். சகல வசதிகளையும் கொண்ட விவசாய நடவடிக்கைகளுக்காகவும் சகல வசதிகளையும் கொண்ட மீன்பிடித் தொழிலுக்காகவும் சக்தியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். சட்ட விரோதமான முறையில் எமது கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்கள் குறித்து இராஜதந்திர முறையில் தீர்வினை பெறவும் நடவடிக்கை எடுப்போம்.

கடந்த அரசாங்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தை மீண்டும் உருவாக்குவோம். வீட்டுக்கடன்களை வழங்கி வீடமைக்கும் யுகத்தை உருவாக்குவோம்.

இன, மத, குல, வகுப்பு பேதங்கள் இன்றி காணிகள் இல்லாதவர்களுக்கு காணிகளை வழங்கும் கம் உதாவ திட்டத்தை மீண்டும் கொண்டு வருவோம். பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கு முதலிடம் வழங்கப்படுவதோடு, இளைஞர்களுக்காகவும் விசேடமான வேலை திட்டங்களை முன்னெடுப்போம்.

மன்னாருக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான போக்குவரத்து தொடர்பை மையமாக வைத்து பாரிய அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுக்க முடியும். சுற்றுலாத்துறை மற்றும் உற்பத்தி தொழிற்துறை உருவாக்கி பலமிக்க அபிவிருத்தியை கொண்டு வர முடியும்" என்றார்.

---

# பொருளாதாரத்தைச் சீர்செய்வதிலும் இனவாதம் ஒழிப்பதிலும் முன்னுரிமை

## தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க



இலங்கையின் உருக்குலைந்த பொருளாதாரத்தைச் சீர்செய்து நிலைப்படுத்துவதற்கும் இனவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்குமே தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் அதி முன்னுரிமை கொடுத்துச் செயற்படும் என்று ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரான அநுரகுமார திசாநாயக்க கூறினார்.

வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் வழங்கிய அவர், பழைய அரசியல் ஒழுங்கில் இருந்து விலகி இலங்கை 'ஒரு மறுமலர்ச்சி திட்டத்துக்கு' தயாராகிறது என்றும், மக்கள் மாற்றத்துக்காக வாக்களிக்கப் போகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

"மக்கள் இப்போது உயர்ந்த எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறார்கள். நாம் எவ்வாறெனினும், இந்த ஆர்வக் கிளர்ச்சியையும் சக்தியையும் நம்பிக்கையையும் நேர்மறையான மாற்றத்துக்காக ஆக்கபூர்வமான வழியில் செல்ல வைக்கவேண்டும்.

பொருளாதாரத்தைச் சீர்செய்து நிலைப்படுத்தி அது சகலருக்கும் பயன்தருவதை உறுதிப்படுத்த வேண்டும். இனவாதமற்றதும் மதச்சகிப்புத்தன்மை கொண்டதுமான நாடொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். சமூகநீதிக்கான பாதையொன்றை வகுக்கவேண்டும். அதையே நான் வெற்றி என்று கருதுவேன்.

தேசிய மக்கள் சக்தியை விமர்சிப்பவர்கள் இரு பூச்சாண்டிகளைக் காட்டுகிறார்கள். ஒன்று 1970 களிலும் 1980 களிலும் ஜே.வி.பி. முன்னெடுத்த ஆயுதக் கிளர்ச்சி. மற்றையது கட்சியின் அரச சோசலிச கொள்கை மூலத்தை அடிப்படையாகக் கொண்டு அதன் பொருளாதார முகாமைத்துவம் பற்றியது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொருளாதாரத்தில் தனியார்துறையின் பாத்திரத்தை மாற்றியமைத்து விடக்கூடும் என்றும் தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்தில் முன்னெடுக்கப்படும் சந்தைக் கட்டுப்பாட்டு தளர்வு மற்றும் வர்த்தக தாராளமயமாக்கலை தீவிரமாக நடைமுறைப்ப டுத்துவதற்கு பதிலாக பட்ஜெட் பற்றாக்குறையை விஸ்தரிக்கக்கூடியதாக நலன்புரித்திட்டங்களுக்கு செலவினங்களை அதிகரிக்கும் என்றும் விமர்சகர்கள் அஞ்சுகிறார்கள்.

உண்மையில், மற்றையவர்களின் நலன்புரித் திட்டங்களுடன் ஒப்பிடும் போது எமது நலன்புரித் திட்டத்தினால் அரசுக்கு மிகவும் குறைந்த செலவே ஏற்படும். பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கு எங்களிடம் திட்டங்கள் இருக்கின்றன. எந்த புதிய வரிகளையும் விதிக்காமல் வருவாயை அதிகரிப்பதற்கு செயற்திறன்மிகுந்த வரி சேகரிப்பு முறைமை கடைப்பிடிக்கப்படும்.

ஜனநாயக அரசியலில் எமது கட்சிக்கு இருக்கும் ஈடுபாட்டை 35 வருடங்களாக நாம் வெளிக்காட்டி வந்திருக்கிறோம். சகலருமே மிகவும் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக எமது பொருளாதார நோக்கை நாம் விளக்கிக் கூறியிருக்கிறோம். எமது எதிரிகளினால் கிளப்பப்படுகின்ற இந்த அச்சங்கள் எல்லாம் கடந்த காலத்தைப் பற்றியவை. எதிர்காலத்தில் அது வாக்காளர்கள் மத்தியில் எடுபடப்போவதில்லை " என்று அநுரகுமார திசாநாயக்க அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
லுஹர் - 12.12
அஸர் - 03.16
மஃரிப் - 06.18
இஷா - 07.28

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 20
ராகுகாலம் : மாலை : 1.35 - 3.05வரை
சுபநேரம் : காலை : 07.35 - 09.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

சுமந்திரன், சாணக்கியனைத் தவிர

# TNA எம்.பி.க்கள் பெரும்பாலானோர் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு

## அவர்களை சந்தித்துப் பேசியதில் தெரிந்தது - மதுர விதானகே



தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி.க்களை இன்று காலை (நேற்று )சந்தித்தேன். சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரை தவிர ஏனையோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளனர். இதனை அவர்களே என்னிடம் உறுதிப்படுத்தினரென அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான இரு ஒழுங்குவிதிகள், கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான இரு கட்டளைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

தமிழரசுக் கட்சி எம்.பி சாணக்கியனின் உரையை தமிழ் மற்றும் சிங்கள மொழியில் கேட்டேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதை வார்த்தையால் சொல்லாவிடினும், அவரது மனதில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாடு இருப்பதை அவதானிக்க முடிகிறது என்றார்.

இதன்போது எழுந்த சாணக்கியன் எம்.பி, எனது உரையை செவிமெடுத்தவர்களுக்கு அதன் அர்த்தம் விளங்கும் நீங்கள் மாறுப்பட்ட அர்த்தம் கற்பிக்க வேண்டாம் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய மதுர விதானகே, தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி.க்களை இன்று காலை (நேற்று)

06

சாவகச்சேரி வைத்தியசாலை சம்பவம்

## போலித் தகவல் பரப்பிய சந்தேக நபருக்கு 13 வரை விளக்கமறியல்

சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவு



யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்களின் விடுதிக்குள் நுழைந்த சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டதுடன் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் போலித் தகவல்களை பரப்பி தவறாக வழிநடத்தினாரென்ற குற்றச்சாட்டில் கைதான அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசாவை

06

## பாடசாலை மாணவர்களுக்கு தேசிய போஷாக்கு கொள்கை

விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி அமைச்சர்



பாடசாலை மாணவர்களுக்கென தேசிய போஷாக்கு கொள்கையொன்று நடைமுறைப்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நேற்று (04) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் , 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை தாம் கல்வி அமைச்சராக இருந்த போது அந்தக் கொள்கை நடைமுறை முன்னெடுக்கப்பட்டதாக குறிப்பிட்ட அவர், இன்றும் பாடசாலைகளில் சுற்றறிக்கையின் பிரகாரம் இக்கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் கூறினார்.

ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய உணவு குறித்து முடிவெடுக்க முடியாது. ஊட்டச்சத்து நிபுணர்களின் ஆலோசனையின்படி, சுகாதார அமைச்சுடன் இணைந்து மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உணவு தொடர்பில் திட்டமிடப்பட்டு மதிய உணவு வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பஹியங்கல ஆனந்த சாகர தேரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார



வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை பற்றிய பொய்யான அறிக்கையொன்றை வெளியிட்ட பஹியங்கல ஆனந்த சாகர தேரருக்கு எதிராக முன்னாள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

ஆதாரமற்ற அறிக்கையினை வெளியிட்டமையினால் தமது நற்பெயருக்கு ஏற்பட்ட கலங்கத்துக்கு 500 மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு மனுஷ நாணயக்கார தனது சட்டத்தரணிகள் மூலம் ஆனந்த சாகர தேரருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

முன்னாள் அமைச்சரின் உறவினருக்கு சொந்தமான வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு ஆட்களை அனுப்பி பெருந்தொகையான பணத்தை அவர்கள் ஈட்டியுள்ளதாக ஆனந்த சாகர தேரர் தெரிவித்த அறிக்கையில் எந்த அடிப்படை உண்மையும் இல்லை எனவும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## கெஹெலியவின் மனு மீதான விசாரணை ஒக். 03 க்கு ஒத்திவைப்பு



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த மனு மீதான உத்தரவு வெளியிடுவதை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

தரமற்ற தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, தன் மீதான வழக்கு விசாரணைகள் நிறைவு செய்யப்படும் வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் சுகாதார அமைச்சர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மீதான உத்தரவு நேற்று (04) அறிவிக்கப்படவிருந்தது.

06

# ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கும் புதிய ஜனநாயக முன்னணி





ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்க புதிய ஜனநாயக முன்னணி முன்வந்துள்ளது.


இது தொடர்பாக கொள்ளுப்பிட்டியில் நேற்று (04) ஊடகவியலாளர் சந்திப்பு, புதிய ஜனநாயக முன்னணியின் தலைவரும் முன்னாள் கொழும்பு மாநகர உறுப்பினருமான என்.ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் ஜனநாயக முன்னணியை சேர்ந்த முக்கிய பல உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக செயற்படவிருப்பதாக தெரிவித்தனர். ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு ஜனநாயக முன்னணியின் தலைவர் பதிலளித்து கருத்து தெரிவிக்கையில், 69 இலட்சம் வாக்குகளை பெற்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு திடீரென வெளியேறினார். அந்த கால கட்டத்தில் நாடு பொருளாதார ரீதியில் பெரும் பின்னடைவை கண்டிருந்தது. இவ்வாறான சூழ்நிலையில் இன்று ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடும் சஜித் பிரேமதாசவோ தேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் அநுரகுமார திசாநாயக்க நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை.

இக்கட்டான அந்தக் காலப்பகுதியில் துணிச்சலுடன் நாட்டினதும், மக்களினது நலன் கருதி நாட்டை பொறுப்பேற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. குறுகிய காலத்திற்குள் நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுத்து அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்கின்றார். சகல மக்களின் நலனுக்காகவும் அவர் செயல்படுகின்றார். விசேடமாக மலையக மக்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வை காண்பதில் தீவிரமாக செயல்பட்டு வருகின்றார். நிச்சயம் அறிவித்தபடி தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க வழிவகை செய்வார் என்பது

06

கட்டணம் செலுத்தப்பட்டு பிரசுரிக்கப்படும் விளம்பரமாகும்




பெருமைமிக்க ஓர் அரச சேவைக்காக

நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நான் நடவடிக்கை மேற்கொள்வேன்.

- அடிப்படை சம்பளத்தில் குறைந்தபட்சம் 24% அதிகரிப்பு
- வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை ரூ.25,000 வரை உயர்த்துதல்
- குறைந்தபட்ச சம்பளத்தை ரூ.57,500 ஆக உயர்த்துதல்
- நிரந்தர வதிவிடத்திற்கு அமைவாக பணியிடத்தை வழங்குதல்
- தொழில்சார் கண்ணியத்தை ஏற்டுத்தும் திட்டம்
- அந்தந்த தொழிலின் தனித்துவத்தை பாதுகாக்கும் வகையிலான சம்பளத் திட்டம்
- வருடாந்தம் சம்பள படிமுறைகளை உயர்த்துதல்
- வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பதவி உயர்வுகள் மற்றும் மதிப்பீடுகள்
- குறைந்த வட்டியில் வீடுகள் அல்லது வீடமைப்புக் கடன்கள்
- வெளிமாவட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு ஊக்கத்தொகை
- சம்பளத்தின் பத்து மடங்கை ஐந்து நாட்களில் கடனாகக் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அவசர கடன் திட்டம்
- அக்ரஹார காப்புறுதித் தொகையை ஆண்டுதோறும் அதிகரித்தல்
- பிள்ளைகளின் உயர் கல்விக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் சலுகைக் கடன் திட்டம்
- அரசியல் செல்வாக்கு இல்லாமல் சுதந்திரமாக தனது கடமைகளைச் செய்யக்கூடிய ஒரு கண்ணியமான அரச சேவை

இது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான தேர்தலாகும். நாட்டை கட்டியெழுப்பக்கூடிய மதிப்பிற்குரிய மற்றும் வினைத்திறன்மிக்க அரச சேவைக்காக என்னுடன் கைகோர்த்துக் கொள்ளுங்கள்.

சஜித் பிரேமதாச
ஐக்கிய மக்கள் கூட்டணி

සජිත් ප්‍රේමදාස
சஜித் பிரேமதாச
Sajith Premadasa

X

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 20ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 30

**குறள் தரும் சிந்தனை**

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்

*பொறுமையின் உறைவிடமாக இருப்பவரைத்தான் நிறைவான மனிதர் என்று உலகம் புகழும்.*

## ஜனாதிபதித் தேர்தல் சட்டவிதிகளை மதித்துச் செயற்படுவது அவசியம்

இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டின் தலைவராக விளங்கக்கூடிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாபதிபதி தேர்தலுக்கு சுமார் இரு வாரங்களே உள்ளன. இந்நிலையில் ஜனாதிபதிகத் தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது.

நாடெங்கிலும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிரதான அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் நாளுக்கு நான்கு ஐந்து என பிரதான கூட்டங்களை நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலும் நடத்துகின்றனர். ஒவ்வொரு அபேட்சகரும் வாக்காளர்கள் மத்தியில் வெவ்வேறு விதமான வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர்.

இதன் விளைவாக இத்தேர்தல் தொடர்பில் மக்கள் அதிகம் கவனம் செலுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இத்தகைய நிலைமை கடந்த காலங்களில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின் போது ஏற்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் இத்தேர்தலை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்தி முடிப்பதில் தேர்தல்கள் ஆணைக்குழு உச்சபட்ச கவனம் எடுத்து செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தல் சட்ட விதிமுறைகளை மதித்து நடக்குமாறு வலியுறுத்தியுள்ள தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க இத்தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறுபவர்கள் கடும் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும் என்றுள்ளார்.

இருந்தும் கூட இத்தேர்தல் சட்ட ஏற்பாடுகளை மீறும் செயற்பாடுகளும் பதிவாகும் நிலைமை உருவாகியுள்ளது. இவ்வாறான சூழலில் கண்டியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்குபற்றியவர்களுக்கு விஷேட உணவு வழங்க அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அச்சமயம் தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகள் அந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்திற்கு திடீரென சென்றதோடு உணவுத் தொகுதியையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் தென்மாகாண சபையின் இரண்டு நிறுவனங்களது தலைவர்கள் தேர்தல்கள் சட்டத்தை மீறும் வகையில் அவர்களது பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அவர்களை நீக்கியமைக்கான காரணத்தை உடனடியாக வழங்குமாறு கோரி இருக்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு.

அதேநேரம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள எந்தவொரு அரசியல்வாதிக்கும் அதிகாரிக்கும் கட்சிசார் ஏனைய நபர்களுக்கும் தேர்தல் காலத்தில் அரச மற்றும் அரச நிறுவனங்களுக்கு சொந்தமான உல்லாச விடுதிகள், வாடி வீடுகள் மற்றும் விடுமுறை விடுதிகளை வழங்குவதும் தடுக்கப்பட்டுள்ளது. அத்தகைய இடங்களில் தங்கியிருப்பதற்கு இடத்தை ஒதுக்கிக் கொள்ளும் அபேட்சகர்களும் அவர் சார்ந்த நபர்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. அதற்கு இடமளிக்கக் கூடாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இவை இவ்வாறிருக்க, அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டடங்களிலும் அக்கட்டடங்கள் அமைந்துள்ள வளாகங்களிலும் தேர்தல் பிரசார பதாகைகள், போஸ்டர்களை காட்சிப்படுத்துவதும் கூட தடை செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் இத்தேர்தல் பிரசார நடவடிக்கையின் போது ஒரு வாக்காளருக்காக ஒரு அபேட்சகர் செலவிட வேண்டிய தொகையையும் தேர்தல்கள் ஆணைக்குழு வறையறை செய்துள்ளது. அந்த வரையறையை விடவும் அதிகமாக செலவு செய்வதும் கூட தேர்தல் சட்டமீறலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணத்தினால்தான் ஜனாதிபதி தேர்தலின் பின்னரான 21 நாட்களுக்குள் ஒவ்வொரு அபேட்சகரும் தங்களது தேர்தல் செலவு விபரங்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு சட்ட ரீதியாக வலியுறுத்தப்பட்டு இருக்கிறது.

இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் அபேட்சகர்களின் ஜனாதிபதித் தேர்தல் செலவு விபரங்கள் பத்திரிகைகளிலும் இணைய தளங்களிலும் பின்னர் வெளியிடப்படும்.

அந்த செலவு விபரங்களில் தவறுகள், முரண்பாடுகள் காணப்படுமாயின் எந்தவொரு குடிமகனும் எந்த வேளையிலும் அதற்கு எதிராகப் பொலிஸில் முறைபாடு செய்ய முடியும். அதன் ஊடாக சட்ட ரீதியிலான நடவடிக்கையை நீதிமன்றத்தின் மூலம் முன்னெடுக்க சட்ட ரீதியில் வாய்ப்பளிக்கப்பட்டு உள்ளது.

இத்தகைய நீதிமன்ற வழக்கு விசாரணையின் ஊடாக ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் வாக்காளருக்காக செலவிடவென நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையை விடவும் அதிக தொகை செலவிட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அந்த அபேட்சகரின் குடியுரிமை மூன்று வருடங்களுக்கு இரத்து செய்யப்படும். அத்தோடு அவர் பதவியை இழக்கவும் முடியும். அதற்கான சட்ட ஏற்பாடுகளும் உள்ளன.

ஆகவே ஜனாதிபதித் தேர்தல் சட்ட திட்டங்களை மதித்தும் அதற்கு ஏற்பவும் செயற்படுவது ஒவ்வொரு அபேட்சகரதும் வாக்களர்களினதும் பொறுப்பாகும். அது நாட்டின் தேர்தல் ஜனநாயகப் பாரம்பரியங்களை மேலும் பலப்படுத்தி வலுப்படுத்துவதற்கு அளிக்கப்படும் பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# ஜனாதிபதியாக ரணில் வெற்றிபெற்றாலேயே நாட்டில் வரிசையுகம் மீண்டும் தோன்றாது!

## 'ஜனாதிபதி - 2024 ரணில் செயலணியின்' கிழக்கு மாகாண பொறுப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் வழங்கிய பேட்டி




'ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் நாட்டுக்கு நல்லது. அவ்வாறு அவர் வெற்றி பெறாவிட்டால் மக்கள் மீண்டும் வீதிக்கு வருகின்ற நிலைமை ஏற்படும். அவர் வெற்றி பெற்றாலேயே நாட்டில் மீண்டும் வரிசையுகம் தோன்றாதிருக்கும்' என்று 'ஜனாதிபதி_ 2024 ரணில் செயலணியின்' கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான தலைவரான கணபதிப்பிள்ளை மோகன் தெரிவித்தார்.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தினகரனுக்காக அவரைப் பேட்டி கண்டபோது மோகன் இவ்வாறு தெரிவித்தார்.

**நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை உங்களிடம் இருக்கின்றதா?**

நிச்சயமாக ஜனாதிபதி வெற்றி பெறுவார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் நாட்டுக்கு நல்லது. நாட்டு நலனுக்காகவே ஜனாதிபதி போட்டியிடுகின்றார். மற்றவர்கள் தங்களது சுயநல அரசியலுக்காகப் போட்டியிடுகின்றனர். நாடு பொருளாதாரரீதியில் அதலபாதாளத்தில்வீழ்ந்திருந்த போது புறங்காட்டி ஓடி ஒழிந்தவர்கள், இன்று வீரம் பேசுகின்றனர். அவ்வேளையில் துணிச்சலாக நாட்டைப் பொறுப்பேற்று இரு வருடங்களில் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பிய தலைவராக ஜனாதிபதியே உள்ளார்.

நாட்டு நலனுக்காகவே சேவை செய்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. தேர்தலில் அவர் வெற்றி பெறாவிட்டால் நாடும், நாட்டு மக்களும் மீண்டும் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடையும் ஆபத்து ஏற்படும். மீண்டும் வரிசையுகம் ஆரம்பமாகும். ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் கைவிடப்பட்டால் பாதிக்கப்படப் போவது மக்கள்தான். ஆகவே மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இன்று அதிகளவான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். அரசியல் கட்சிகளும் ஆதரவளிக்கின்றன. பொதுமக்களும் பெருமளவில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என்பது உறுதியாகியுள்ளது. ஜனாதிபதியை எதிர்த்தவர்களை எல்லாம் இன்று அவரது பக்கம் உள்ளனர். இதனால் சொல்கிறேன் அதிகூடிய வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார்.

**தமிழ் பொதுவேட்பாளர் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

நாம் தமிழ்த்தேசியத்தை நேசிப்பவர்கள். எனது சிறுபருவத்தில் காசி ஆனந்தனின் மேடையில் பேசியுள்ளேன். அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் தேசியம்தான் எனது உயிர். இன்று நேற்று வந்தவர்கள் எல்லாம் புதிது புதிதாக தமிழ்த் தேசியத்தைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தமிழ்த்தேசியத்தை வைத்து தேர்தல் கேட்பது பிழையான விடயமாகும். ஏனென்றால் இப்போது இருக்கின்ற பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் மக்கள் இருண்ட யுகத்திற்கு செல்வதா? வேளிச்சத்திற்கு வருவதா? என்ற பிரச்சினையே ஓடிக்கொண்டிருக்கின்றது.

இந்தநேரத்தில் தமிழ்த்தேசியத்தை சவாலுக்குட்படுத்தினால் நாம் தோல்வியடைவோம். பொதுவேட்பாளர் தோற்றால் தமிழ்த்தேசியம் தோற்றுப் போய் விடும். 'தமிழ் மக்களின் ஆணை உங்களுக்குக் கிடைக்கவில்லை. இனி தமிழ்த்தேசியத்தைப் பற்றியோ 13 ஆம் அரசியல் திருத்தம் பற்றியோ பேச வேண்டாம்' என்ற ஒப்புதல் எடுப்பதற்கான வேலைத்திட்டமே இதுவாகும். இது ஒரு சதி வேலைத்திட்டம் என நான் நினைக்கிறேன். புத்திசாலித்தனமானவர்கள் இந்த நேரத்தில் தமிழ்த்தேசியத்தை சுரண்டுவதற்கு வரமாட்டார்கள். இதன் பிண்ணனியில் வேறு ஒரு சதி இருக்கின்றது.

தமிழ்த்தேசியம் எமது உயிர், அபிவிருத்தி எமது உணவு என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம். இந்த நேரத்தில் தமிழ்த்தேசியத்தை பேசுபவர்கள் யார்? இன்று தமிழ்த்தேசியத்தின் மிச்சம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால் எதுவுமே இல்லை. இப்போது தமிழ்த் தேசியத்தை விற்று அரசியல் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் கேட்டார்களா பொது வேட்பாளர் வேண்டும் என்று? இது யாரோ ஒருவருடைய தேவையைப் பூர்த்தி செய்யும் நாடகமாகும். இவர்களுக்குப் பின்னால் இருந்து இயக்கும் பொதுஅமைப்புக்களுக்கு எங்கிருந்து பணம் வருகிறது? இந்த பொது அமைப்புக்கள் யார்? தமிழ் மக்களை சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தங்களது சுயநலத்திற்காக குழப்பி, குட்டையில் மீன்பிடிக்கும் இவ்வாறானவர்களிடமிருந்து தமிழ் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

**இலங்கை தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசாவை ஆதரிக்க முன்வந்திருப்பது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

இலங்கை தமிழரசுக் கட்சியின் கதையைக் கேட்குமளவிற்கு இன்று தமிழ் மக்கள் இல்லை. அக்கட்சியின் தலைமைகளுக்கு இடையிலே ஒற்றுமையில்லை. தலைவர் ஒரு கதை, செயலாளர் ஒரு கதை, உறுப்பினர்கள் ஒரு கதை என பேதலித்துத் திரிகின்றார்கள், கூட்டமைப்பு சிதறுண்டு கிடக்கிறது. அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலுடன் தமிழரசுக் கட்சி மேலும் பிளவு பட்டு காணாமல் போய்விடும்.

பேட்டி: செ. துஜியந்தன்
(பாண்டிருப்பு நிருபர்)

# பாலியல் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை!

## மசோதா நிறைவேற்றினார் மம்தா பானர்ஜி



பாலியல் குற்ற வழக்குகளில் மரணம் ஏற்பட்டால், குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்கும் வகையில், 'அபராஜிதா' மசோதா எனப்படும், பெண்கள் பாதுகாப்பு தொடர்பான மசோதா மேற்கு வங்கத்தில் நிறைவேற்றப்பட்டது. சட்டசபையில் எதிர்க்கட்சியான பா.ஜ.க, ஆளும் திரிணமுல் காங். இடையே கடும் வாக்குவாதத்துக்கு மத்தியில், இந்த மசோதாவை நேற்றுமுன்தினம் நிறைவேற்றினார் முதல்வர் மம்தா பானர்ஜி.

மேற்கு வங்கத்தின் கொல்கத்தாவில் உள்ள அரசு மருத்துவக் கல்லுாரி மருத்துவமனையில், பயிற்சி பெண் மருத்துவர் சமீபத்தில் பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக மாணவர்கள், மருத்துவர்கள் உள்ளிட்டோர், 26 நாட்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விவகாரம் ஆளும் திரிணமுல் காங்கிரசுக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது.

பாலியல் குற்ற வழக்குகளில் விரைவாக விசாரணை நடத்த வேண்டும், குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை அளிக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதல்வர் மம்தா இரண்டு கடிதங்களை எழுதியிருந்தார்.

இந்நிலையில், அபராஜிதா மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான மேற்கு வங்க கிரிமினல் சட்டங்கள் மற்றும் திருத்தங்கள் மசோதாவை, முதல்வர் மம்தா சட்டசபையில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்தார்.

இந்த மசோதாவின்படி, பாலியல் குற்றங்களில் உயிரிழப்பு ஏற்படுத்தினால், குற்றவாளிகளுக்கு துாக்குத் தண்டனை விதிப்பது, 21 நாட்களுக்குள் பொலிஸ் விசாரணையை முடிப்பது, விரைவு நீதிமன்றங்கள் அமைப்பது, விசாரணைக்காக மாவட்ட அளவில் பணிக்குழுக்கள் உருவாக்குவது உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

"பெண்கள் பாதுகாப்பு தொடர்பாக பிரதமர் மோடிக்கு இரண்டு கடிதங்கள் எழுதினேன். ஆனால், ஏற்கனவே உள்ள சட்டங்களில் கடுமையான பிரிவுகள் உள்ளதாக கூறிஉள்ளனர். புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள மூன்று கிரிமினல் சட்டங்களில், பெண்கள் பாதுகாப்புக்கான போதிய அம்சங்கள் இல்லை. இந்த ஓட்டைகளை அடைக்கும் வகையிலேயே, இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்று முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். இந்த மசோதாவில் குறிப்பிட்டுள்ளபடி, மத்திய சட்டங்களில் உரிய திருத்தங்கள் செய்ய வேண்டும். இந்த மசோதா சட்டமாகும்போது, அதன் வெற்றி தெரியும். இது நாடு முழுதுக்கும் முன்மாதிரி சட்டமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

# மலையகத்தில் விளையும் உருளைக்கிழங்குக்கு நியாயவிலை நிர்ணயிக்குமாறு கோரிக்கை

மலையகத்தின் வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவுகுட்பட்ட சில்மியாபுரம், பொரகஸ், பாதிநாவெல, ரேந்பொல, குருத்தலாவ, அலுகொல்ல, போகாக்கும்புற மாத்திர மன்றி கெப்பெட்டிப்பொல, ரத்தம்ப, அம்பகஸ்தோவ, பொரலந்த போன்ற பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் தமது பிரதான வாழ்வாதார தொழிலாக விவசாயத்தையே நம்பியுள்ளனர்.

தங்களால் செய்கை பண்ணப்படும் மரக்கறி வகைகளுக்கும், உருளைக்கிழங்கிற்கும் நியாயமான விலையின்றி தாங்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி வருவதாக அவர்கள் கூறுகின்றனர். அரசாங்கம் வழங்கிய உரமானியம் மூலமும், விவசாயத் திணைக்கள ஆலோசனைகளுக்கு அமைவாகவும் உருளைக்கிழங்கு உற்பத்தியில் நல்ல விளைச்சல் கிடைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்குக்கு அரசாங்கம் நியாயமான விலையை நிர்ணயித்து சந்தைப்படுத்தல் வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் அவ்விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தற்போது உருளைக்கிழங்கு அறுவடை இடம்பெற்று வருகின்றது. இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் விலை வெகுவாகக் குறைத்துள்ளமையினால் உள்நாட்டு உருளைக்கிழங்கின் விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



உள்ளூரில் உற்பத்தியாகும் உருளைக்கிழங்கை 120_ 140 ரூபா விலையில் மொத்த வியாபாரிகள் கோள்வனவு செய்து வருவதாகவும், இத்தொகையானது தமது உற்பத்திச் செலவை ஈடுசெய்ய போதாமல் உள்ளதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். உள்ளூரில் உற்பத்தியாகும் உருளைக்கிழங்கிற்கு நியாயமான விலையை நிர்ணயித்து சிறந்த சந்தை வாய்ப்பினைப் பெற்றுத் தர வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்.ஏ.எம். ஹசனார்
(ஊவா சுழற்சி நிருபர்)

# பாணந்துறை அல்பஹ்றியா தேசிய பாடசாலையில் இருபெரும் விழாக்கள்

களுத்துறை கல்வி வலயத்தில் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளில் ஒன்றான பாணந்துறை தொட்டவத்தை அல்பஹ்றியா மத்திய கல்லூரியின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவும், 2024 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவுமான இரு பெரும் நிகழ்வுகள் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

பாடசாலையின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அதிபர் எம்.ஐ.எம்.ரிஸான் தலைமையில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விஷேட அதிதியாக பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. கே. சன்ஜீவ லக்மால் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக சட்டத்தரணி எம்.எப்.எப். ஸுஹ்றியா கலந்து கொண்டார்.

பாடசாலையின் தலைமை மாணவர் தலைவர்களாக (Head Prefect) எம்.டீ.எம். ரஷீத் மற்றும் எம்.எம்,எப்.அஸ்மாவும் பிரதி தலைமை மாணவர் தலைவர்களாக எம்.ஏ.எம்.அனஸ் மற்றும் எம்.எம்.எப். இல்மாவும் தெரிவாகினர்.

மாணவர் தலைவர்களாகத் தெரிவானவர்களுக்கு அதிதிகளால் சின்னம் சூட்டப்பட்டது. இந்த நிகழ்வுடன் இணைந்ததாக பாடசாலையின் போக்குவரத்துப் பிரிவினருக்கும் சின்னங்கள் சூட்டி வைக்கப்பட்டன. இதேவேளை அல்பஹ்றியா தேசியப் பாடசாலையின் பரிசளிப்பு விழா _ 2024, வேறவத்தை மகீஸா மஹால் மண்டபத்தில் அதிபர் எம். ஐ.எம்.ரிஸான் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் என்.டீ.நஸுமுதீன், கௌரவ அதிதிகளாக களுத்துறை கல்வி வலய தமிழ் மொழிமுலப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சஞ்ஜீவ லக்மால் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் உறுப்பினர்கள், பஹ்றியன் பிரிமியர் லீக் (FPL) அமைப்பிலுள்ள மாணவர்கள் குழாம் உறுப்பினர்கள் மற்றும் பெற்றோரும் கல்வி ஆர்வலர்களும் இதில் கலந்து கொண்டனர். மாணவர் குழாம் வாரியாகவும் மற்றும் பழைய மாணவர்கள், சமூகநல அமைப்புகள், நலன்விரும்பிகளினாலும் கல்லூரியின் பாரிய பரிசளிப்பு விழாவுக்கான அனுசரணை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






எம்.எஸ்.எம். முன்தஸிர்
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

# நான்கு பிரதான முச்சக்கரவண்டி சங்கங்கள் ஜனாதிபதி ரணிலுக்கு தேர்தலில் ஆதரவு

## ஆயிரம் முச்சக்கர வண்டி சாரதிகள் காலிமுகத்திடலில் ஒன்றுகூடினர்: சந்திப்பதற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு



## நான்கு நிறைவேற்று ஜனாதிபதிகளால் 25 வருடங்களாக தீர்க்கப்படாத முச்சக்கரவண்டி தொழிற்துறையை ஒழுங்குபடுத்தும் பிரச்சினைக்கு ஒரேநாளில் தீர்வு வழங்கிய ஜனாதிபதிக்கு பாராட்டு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக இலங்கையின் நான்கு பிரதான முச்சக்கரவண்டி சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம், தேசிய Taxi app முச்சக்கரவண்டி தொழில்துறை சங்கம், ஐக்கிய பயணிகள் போக்குவரத்து சேவை வல்லுநர்கள் சங்கம், மேல்மாகாண முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் என்பன ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்துள்ளன.

முச்சக்கரவண்டி சங்கங்களை பிரதிநித்துவப்படுத்தும் சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் நேற்று (04) காலை கொழும்பு காலிமுகத்திடல் போராட்ட பூமியில் ஒன்றுகூடியதுடன், தங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க வேண்டும் என விடுத்த கோரிக்கையை அடுத்து, அந்த இடத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

கடந்த 25 வருடங்களாக நான்கு நிறைவேற்று ஜனாதிபதிகளின் கீழ் தீர்க்கப்படாத முச்சக்கரவண்டி தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் தொடர்பான பிரச்சினைக்கு 24 மணித்தியாலங்களில் தீர்வை வழங்கியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி தெரிவித்த முச்சக்கர வண்டி சாரதிகள், கடந்த காலத்தில் தங்களின் தொழில்களை மேற்கொள்ள முடியாமல் பல நாட்களாக எரிபொருள் வரிசையில் தவித்ததாகவும் அந்த நிலையில் இருந்து ஜனாதிபதியே தங்களை மீட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மீண்டும் அவ்வாறானதொரு நிலைமைக்கு முகம்கொடுக்க தாம் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2025 ஆம் ஆண்டு முதல் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக கடனில் தவிக்கும் முச்சக்கரவண்டி சாரதிகளின் கடனை மீளச்செலுத்துவதை மறுசீரமைக்க அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக சந்தர்ப்பம் வழங்குவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "முச்சக்கர வண்டித் தொழில்துறையை சரியான கட்டமைப்பிற்குள் நாம் ஒழுங்கமைக்க வேண்டும். முச்சக்கரவண்டித் தொழில்துறை எதிர்கொண்டிருந்த ஒழுங்குமுறைப் பிரச்சினையை நாம் ஏற்கனவே தீர்த்துவிட்டோம். முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளோம்.

முச்சக்கர வண்டித் தொழிலுக்கு இன்னும் முறையான அமைப்பொன்று அவசியம். ஒவ்வொரு மாகாணத்திலும் இச்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் மற்றும் மாகாண சபை பிரதிநிதிகள் கொண்ட குழுக்களை நியமித்து இங்கு எதிர்கால முன்னேற்றத்திற்கு புதிய நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கிறோம். அடுத்த சில ஆண்டுகளில், எரிபொருள் மட்டுமன்றி மின்சார முச்சக்கரவண்டிகளும் தேவைப்படுகிறன. இந்தச் செயற்பாடுகள் அனைத்திலும் கவனம் செலுத்தி எமது எதிர்கால முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர:

"முச்சக்கர வண்டி சேவையின் தரம் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தின் தலையீடு இன்றியமையாதது. அந்த குறைபாடுகளை நீக்க அரசாங்கத்தின் மேற்பார்வை முக்கியமானது. 25 ஆண்டுகளுக்கும் மேலாக இது தொடர்பில் கோரிக்கை முன்வைத்து வருகிறோம். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரச்சினையை முன்வைத்து 24 மணித்தியாலங்களுக்குள் அதனை நிறைவேற்றிவிட்டார்.

மேலும் அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலமும் எங்களின் பிரச்சினைகளை சரியாக புரிந்து கொண்டுள்ளார். எனவே, முச்சக்கரவண்டி சேவையை NVQ4 தரத்திற்கு கொண்டு வருவதுடன், NVQ சான்றிதழ் வழங்குதல், ஓய்வூதிய சமூக பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட முச்சக்கரவண்டி சாரதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து, கொவிட் தொற்றுநோய் நிலைமையினால் கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டி சமூகத்திற்கு நிவாரணம் வழங்குதல் என்பன தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுத்துள்ளார்.

இந்த விடயங்களில் ஜனாதிபதியின் தலையீடு இலட்சக்கணக்கான முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்குச் செய்யும் சேவை என்றே கூற வேண்டும். எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றிக்கு நாம் பங்களிப்போம்."

தேசிய Taxi app முச்சக்கரவண்டி தொழிற்துறை சங்கம் தலைவர் ஜெஸ்மின் லங்கா: "46 வருடங்களாக இந்நாட்டில் முச்சக்கரவண்டித் தொழில் முறைசாரா முறையில் இயங்கி வந்தது. நமது தலைவர்கள் 25 ஆண்டுகளாக அதன் ஒழுங்குபடுத்தல் தொடர்பில் போராடினார்கள்.



அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர: "நான்கு முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க ஒன்றுகூடினோம். முச்சக்கர வண்டி போக்குவரத்துச் செயற்பாடுகளின் எதிர்காலப் பயணம், தரம் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசாங்கத்தின் தலையீடு அவசியமாக காணப்பட்டது.

25 ஆண்டுகளுக்கும் மேலாக அதற்கான கோரிக்கை வைத்து வருகிறோம். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒரு முறை மட்டுமே பிரச்சினையைக் கூறினோம். அவர் 24 மணித்தியாலங்களுக்குள் தீர்வை வழங்கினார். எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்வோம்".

தேசிய Taxi app முச்சகரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மின் லங்கா ;

"46 வருடங்களுக்கு மேலாக நாட்டில் முச்சக்கரவண்டித் தொழில் முறைசாரா விதத்தில் இயங்கி வருகிறது. 25 ஆண்டுகளாக அதனை ஒழுங்குபடுத்த போராடினோம். இந்த நாட்டின் 04 நிறைவேற்று ஜனாதிபதிகளால் தீர்வு தர முடியாமல் போன பிரச்சினையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்த்து வைத்தார்.

இப்போது Taxi App மூலம் வியாபாரம் செய்கிறோம். அதனால் இந்த தொழில் முறைசாராமல் காணப்பட்டது. இதனால், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனால் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு தருவதாக அமைந்திருக்கிறது.

கடந்த காலத்தில் வாரக்கணக்கில் எரிபொருள் வரிசைகளில் இருந்தோம். இன்று எமக்கு போதுமான எரிபொருள் கிடைக்கிறது.

அதனால், எங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் இந்த நாட்டின் பிரச்சினைகளை ஜனாதிபதியால் மட்டுமே தீர்க்க முடியும். இல்லையெனில் மீண்டும் எரிபொருள் வரிசையில் காத்திருக்க வேண்டும்.

ஜே.வி.பி. மேடைகளிலும் இதுபோன்றதொரு Taxi App முறை அறிகப்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிள்களை அறிமுகப்படுத்தி முச்சக்கர வண்டி சேவைக்கு பாதகம் விளைவிக்கும் செயற்பாடுகளையே அவர்கள் முன்னெடுக்க பார்க்கின்றனர்".

ஐக்கிய மக்கள் போக்குவரத்துச் சேவை சங்கத்தின் செயலாளர் ரகுமான் பள்ளேய், "ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளோம். ஏனெனில், அவர் முச்சக்கர வண்டித் தொழிலின் பாதுகாப்பிற்காக வர்த்தமானி வெளியிட்டார். அவரின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்".

(ஊடகப் பிரிவு)
Ranil 2024 இயலும் ஸ்ரீலங்கா

# ஜனாதிபதி தேர்தல்; கஃபே அமைப்பால் வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சி திட்டம்






(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மாவட்டங்களுக்கு கஃபே அமைப்பின் ஊடாக வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சி திட்டத்தை நேற்று முன்தினம் முதல் கஃபே அமைப்பு நடைமுறைப்படுத்துவதாக கஃபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து ஒரு மாவட்டத்துக்கு இருவர்படி 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட பின்னர் அவர்களது மாவட்டங்களுக்கு சென்று வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.இந்த பயிற்றுவிப்பின் மூலம் தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி, தேர்தல் தினம் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் கடமை அதேபோன்று வாக்களிக்கின்ற முறைமை, வாக்களிப்பில் இளைஞர்களின் ஆர்வத்தை அதிகரிப்பது எவ்வாறு, விவசாய மற்றும் கடற்றொழில் பிரதேசங்களில் இருக்கக்கூடிய வாக்காளர்களின் வாக்களிப்பு வீதத்தை எவ்வாறு அதிகரித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் அவர்களது மாவட்டங்களுக்கு சென்று நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன் அம்மாவட்டங்களில் குறைந்தது 10 வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சி திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி



(திராய்க்கேணி தினகரன் நிருபர் )

ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சிநெறி அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு பொலிஸ் கெடட் பிரிவின் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சிந்தக குணரத்னவின் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண கலந்து கொண்டார்.

இப்பயிற்சிநெறியில் அல் ஹம்றா மகா வித்தியாலய மாணவர்கள் 35 பேர் கலந்து கொண்டதுடன், அவர்களுக்கான சான்றிதழ்களை பிரதம அதிதி வழங்கி வைத்தார்.

# 'மரக்கல மீகாமன்' புனைகதை நூல் வெளியீட்டு விழா






(தோப்பூர் குறூப், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்)

பர்ஹான் முஸ்தபா எழுதிய 'மரக்கல மீகாமன்' ரொபர்ட் நொக்ஸின் வரலாற்று புனைகதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மூதூர் பேர்ள் கிரேன்ட் மண்டபத்தில் நடைபெற்றது.

நடுத்தீவு வலுவூட்டல் மற்றும் நலன்புரி சங்கத்தால் இந்நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலாநிதி றவூப் ஸெய்ன் கலந்து கொண்டார். நூல் திறனாய்வாளராக எழுத்தாளரும் ஆய்வாளருமான சிறாஜ் மஸ்ஹூர் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

பெருந்திரளான வாசகர்களும் இவ் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வுக்கு அஷ்ஷேஹ் என். சியாத் (நழீமி) தலைமை தாங்கியதோடு, வெளியீட்டு அமைப்பின் தலைவர் எஸ்.எம்.முஜீப் இந்நிகழ்வை நெறிப்படுத்தினார். வி.எம். ஹசீன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

நூலின் முதல் பிரதியை நூலாசிரியரின் அன்னை சபியா உம்மா மற்றும் அவரது பாரியார் ஹிதாயா பர்ஹான் வழங்கி வைக்க தொழிலதிபர் வைத்தியர் வை.ஜெஸ்மின் பெற்றுக்கொண்டார்.

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர் )

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு பாதணிகள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் புத்தகப்பைகள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

ஸதகா புளட்டின் நலன்புரி நிறுவனத்தின் அனுசரணையில் இம்மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸதகா புளட்டின் நிறுவன பணிப்பாளரும் பொறியியலாளருமான எம்.சீ.கமால் நிஸாத் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரண பொதிகளை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர், ஆசிரியர் ஏ.எம்.எம் ஸாஹிர், பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ரீ.ஏ.மனாப், பகுதிதலைவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் பெற்றோராகிய பலரும் கலந்து கொண்டனர்.

# நிந்தவூரில் மாற்றுத்திறனாளிக்கு உதவி

(நிந்தவூர் குறூப் நிருபர்)

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் இந்த ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதிப் பங்களிப்பின் மூலம் நிந்தவூர் பிரதேச செயலக பிரிவில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு நிதி உதவி வழங்கி வைக்கப்பட்டது.இம்மாற்றுத்திறனாளியானவர் இலகுவாக அணுகக்கூடிய வகையில் மலசலகூடத்தை நிர்மாணிப்பதற்கே நிதி உதவி நேற்று செவ்வாய்க்கிழமை நிந்தவூர் பிரதேச செயலகத்தில் வழங்கி வைக்கப்பட்டது. மேற்படி பயனாளிக்கான நிதி உதவியை நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீப் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.குணரத்னம், அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.சித்தி ஜெமீலா, கிராம அலுவலக உத்தியோகத்தர் ஏ.எல்.எம். நளீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மக்களை அச்சுறுத்தும் வன்முறை அரசியலை தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்

## வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன




மக்களை அச்சுறுத்தும் வன்முறை அரசியலை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஹோமாகம உடுவன பிரதேசத்தில் அண்மையில் (02) இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்

இலங்கை அரசியலில் மிரட்டல் மூலம் ஜனநாயகத்தின் அடிப்படைகளை மீறிய வரலாறு எமக்கு உண்டு. 1989ல் முதன்முறையாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டேன். தேர்தல் அறிவிக்கப்பட்ட போது மக்கள் விடுதலை முன்னணி தடை செய்யப்பட்ட அமைப்பாக இருந்தது. போலி பாராளுமன்றத்தை புறக்கணிக்க வேண்டும் என்று நாடு முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஜே.ஆரை கொன்று விடுவோம். இந்திய குரங்கு படையை விரட்டுவோம் எனவும் ஒட்டினார்கள். அடுத்ததாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு மரண தண்டனை என்றார்கள். போலி பாராளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கச் சொன்னார்கள். முதலில் வாக்களித்த ஐந்து பேர் கொல்லப்பட்டனர். அவர்கள் கூறியது போல், வாக்களிக்கச் செல்லும் நிராயுதபாணிகளையும் அப்பாவிகளையும் கொன்றனர். இறந்த பிறகு, இறந்த உடலை முழங்காலுக்கு கீழாகக் கொண்டு சென்று அடக்கம் செய்ய உத்தரவிடப்பட்டது. இந்தப் பெரும் பயங்கரவாதத்தின் நன்மை ரணசிங்க பிரேமதாசவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சென்றது.காரணம், பயங்கரவாதத்திற்கு அஞ்சிய பொது மக்கள் தமது வீடுகள், வணிக வளாகங்கள், வாகனங்கள், தோட்டங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தனர். 1989ஆம் ஆண்டு கொழும்பினால் இவ்வளவு பயங்கரமான பயங்கரவாதத்தை நடத்த முடியவில்லை.

எனினும், கொலை அரசியலும் அதன் அரசியல்வாதிகளும் படிப்படியாக ஜனநாயகக் கவசத்தை அணிந்து கொண்டு ஜனநாயக நீரோட்டத்தில் இக்காலத்தில் பிரவேசித்தனர். அவர்கள் சமுதாயத்தில் உன்னதமானவர்களாகவும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் தோன்றினர். ஆனால் துப்பாக்கிகள் மே 9, 2022 இல் மீண்டும் உயரத் தொடங்கின. கடுமையான போராளிகள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அத்துகோரலையை நெடுஞ்சாலையில் இழுத்துச் சென்று கொன்றனர். 12 மணித்தியாலங்கள் கடப்பதற்குள் 72 பாராளுமன்ற உறுப்பினர்களை கொடூரமான முறையில் கொன்றனர்.

### ஜனாதிபதி ரணிலும் சஜித்தும்...

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே தனது இந்த தீர்மானத்தை அறிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய பாராளுமன்றத்தின் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரான இறுதி அமர்வாக இன்றைய தினம் இருக்கும். ஜனாதிபதியாக எவர் பதவியேற்றாலும் அவரால் பாராளுமன்றம் கலைக்கப்படலாம். ஜனநாயகத்தின் சாவு மணி மற்றும் ஜனநாயகத்தின் அழிவு இதுவாகவும் இருக்கலாமென்றும் கருதுகின்றோம். நாட்டை சீரழித்த குழுவே சகல மக்களின் மூளைகளையும் கழுவி, 75 வருடங்களாக இந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள் எதனையும் செய்யவில்லை என கூறி நாட்டை அழிவை நோக்கி கொண்டு செல்வதை போன்றே நான் கருதுகின்றேன்.

நாங்கள் மக்களுக்கு சேவை செய்யும் எண்ணத்துடனேயே வருகின்றோம். முடிந்தளவுக்கு மக்களுக்கு சேவை செய்துள்ளேன். நான் எதனையும் செய்யவில்லை என்று எவராலும் கூற முடியாது. சிலர் முன்னெடுத்த கொள்கைகளால் நாட்டில் சில பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. நாட்டை அழிவை நோக்கி கொண்டு செல்ல முயற்சிக்கும் நேரத்தில் ஜனநாயகத்தை பாதுகாக்கும் தலைவர்கள் இருந்தால், இனியும் குரோதமான, பழிவாங்கல் அரசியலுக்கு இடமளிக்கக்கூடாது. இந்த நாட்டை சீரழிக்க முயற்சிக்கும் குழுவினரின் வேலைத்திட்டங்களை தோற்கடிக்கக் கூடியவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். செப்டம்பர் முதலாம் திகதி தற்போதைய ஜனாதிபதியின் வெற்றிக்காக புத்தளம் மாவட்டத்தில் சிலாபத்தில் பாரிய கூட்டத்தை நடத்தினோம். பல்வேறு கட்சிகள் இணைந்தே இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம். ஆனால் அவருக்காக உதவும் ஐக்கிய தேசியக் கட்சியினரிடமிருந்து எவ்வித ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை. அவர் நாட்டுக்காக எதனையாவது செய்வார் என்ற நோக்கத்திலேயே அவருக்கு ஆதரவளிக்க நினைத்தோம். அதன்படி அவரின் வேலைத் திட்டங்களுடன் பயணிக்க நினைத்தோம். ஆனால் இதில் வேறு சக்திகள் செயற்படுவதாக நினைக்கின்றோம்.அழுக்கடைந்த குழுவை கொண்டுவர வேறு ஏதாவது வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவா? என்றும் நினைக்கின்றோம்.இதனால் ஜனநாயகத்தை நேசிக்கும் அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களாக இருந்தால் இருக்கும் ஆபத்தை புரிந்துகொண்டு செயற்படுங்கள். நாங்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய சந்தர்ப்பமாக இது இருக்கின்றது. இப்போது இளைஞர்களின் மனங்களை மாற்றி நாட்டை அழிவு நோக்கி கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர். தோற்றால் வீட்டுக்கு போவது ஜனநாயகமே. அதனை விடுத்து தோற்ற பின்னர் வீடுகளுக்கு தீ வைக்கவும், பாராளுமன்றத்திற்கு தீ வைக்கவும் முயற்சிக்கப்படுகின்றது. இந்த அழிவுச் செயற்பாட்டு குழுவை தோற்கடிக்க முடிந்தவர்களுடன் நான் கலந்துரையாடல்களை நடத்துவேன். இன்றிலிருந்து(நேற்றிலிருந்து) நான் சுயாதீன எம்.பியாக செயற்படப் போகின்றேன்.அழிவு தெரிகின்றது. இந்த நேரத்தில் முடிந்தால் எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதியும் ஒன்றிணையுங்கள் என்றார்.

### பெருந்தோட்ட தொழிலாளர்களை...

தெரிவித்த இ.தொ.கா. பொதுச் செயலாளரும் நீர்வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், எதிர்வரும் 10ஆம் திகதி பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமென்றும் குறிப்பிட்டார். ஹாங்குரான்கெத்த பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், பெருந்தோட்டதொழிலாளர்களுக்குசம்பளநிர்ணயசபையின் ஊடாக 1,350 ரூபா வழங்குமாறு பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலதிகமாக உற்பத்திக்கேற்ற கொடுப்பனவாக 350 ரூபாய் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இது தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. 1,350 ரூபாவை பெற்றுக்கொடுக்க தெரிந்த எமக்கு 350 ரூபாவை பெற்றுக்கொடுப்பது ஒரு பெரிய விடயமல்ல. மலையக மக்களின் காணி உரிமை தொடர்பான அநேகமானோர் பேசிக்கொண்டுயிருப்பார்கள். ஆனால் அவை எதுவுமே நடைமுறைக்கு வந்ததில்லை. இ.தொ.கா.1,447 காணி உறுதி பத்திரங்களை தயாரித்துள்ளோம். தேர்தல் காலப்பகுதியின் காரணமாக அதனை மக்களுக்கு ஒப்படைக்க முடியாது. தேர்தல் நிறைபெற்றவுடன் அதனை எமது மக்களுக்கு வழங்குவோம். மக்களின் வாக்குகளை பெறுவதற்காக நான் ஒரு போதும் பொய் கூறியதில்லை. இ.தொ.கா.வை பொருத்தவரையில் பெண்களுக்கு அதிகமான முக்கியதுவைத்தை வழங்கியுள்ளது. 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் சம சம்பளத்தை பெற்றுகொடுத்தது என்பது சிலருக்கு தெரியாது. பெண்களின் பாதுகாப்பு தொடர்பாக யாப்பு ஊடாக சட்ட மூலத்தை கொண்டு வந்ததும் இ.தொ.கா. ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் கீழ் உருமய என்ற காணி உறுதி பத்திரம் 20 இலடச்சம் பேருக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. நான் எந்த இடத்திலும் 1,000 ரூபா 1,700ரூபா எனது இறுதி இலக்கு என்று கூறவில்லை. நாட் கூலி முறை கட்டாயம் மாற்றியமைக்க வேண்டும். அதனை மாற்றியமைக்க கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் தேவைப்படுகிறது. மக்களோடு நாம் கலந்துரையாடியபோது 1,500 ரூபா சம்பளம் போதுமென கூறுகிறார்கள். கிடைத்ததை பற்றியே நாம் பேசவேண்டும்.பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அதிகமான சம்பளம் எனது அமைச்சின் ஊடாகவே பெற்றுக்கொடுக்கப்பட்டது விமர்சனம் செய்பவர்கள் முடிந்தால் எமது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 10 ரூபாவை அதிகமாக பெற்றுத்தர முடியுமா? என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

### புதிய அரசியல் கூட்டணி...

மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் புதிய அரசியல் கூட்டணியை ஆரம்பிக்கும் நோக்கில் இந்த கூட்டணி வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் வலியுறுத்தியுள்ளார். பத்தரமுல்லையில் நேற்று (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு கருத்து தெரிவித்த ரமேஷ் பத்திரன மேலும் கூறியதாவது, இலங்கையில் நடுநிலை அரசியல் சித்தாந்தங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பல கட்சிகளின் பங்கேற்பினால் உருவாக்கப்பட்ட பரந்த கூட்டமைப்பு இன்று காலை 09:00 மணிக்கு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் பல கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இந்த கூட்டணியை கட்டியெழுப்புகின்றனர். எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய அரசியல் கூட்டணியை தொடங்குவதே இலக்கு. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் எதிர்காலத்தில் எடுக்கும் அரசியல் நிலைப்பாடு தொடர்பில் இந்நாட்டு மக்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட்டனர். அவர்கள் இடதுசாரி நடுநிலைவாதிகள். இவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் அதே நடுநிலையான அரசியல் கருத்தை முன்வைத்து இலங்கை மக்களுக்கு சேவையாற்ற பாடுபடுவார்கள். அதற்கு அரசியல் மேடை தேவைப்பட்டது.

அந்த மேடையை உருவாக்கும் நோக்கில் இந்த பரந்த கூட்டணியை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. எதிர்வரும் தேர்தல்களில் ஒரே மாதிரியான யோசனைகள் மற்றும் கொள்கைகளுடன் குழுவாக இணைந்து செயற்படுவதே இதன் இலக்கு என்றார்.

### NPP ஆட்சியமைத்தால்...

யாருமில்லை. அவர்கள் கூறுவது போல ஆட்சியமைத்தாலும் அவர்களது அமைச்சரவையில் பொறுப்புள்ள முஸ்லிம்கள் யாருமிருக்க மாட்டார்கள். இதனால் முஸ்லிம்கள் நலன் சார்ந்த விடயங்கள், பண்பாடு, கலாசாரம் சார்ந்த விடயங்களை பேச அங்கு யாரும் இருக்க மாட்டார்கள். இது முஸ்லிம் மக்களுக்கு பாரிய இழப்புகளை ஏற்படுத்தும். ஜனாதிபதி கோட்டாபயவின் அமைச்சரவை மூலம் இதனை நாம் தெளிவாக அறிந்து கொண்டோம். முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது, கோட்டாபயவின் அமைச்சரவையில் எடுத்துக் கூறி அதனைத் தடுக்கக் கூடியவர்கள் எவருமே இருக்காமை நமக்கு நல்ல உதாரணமாகும். இது போன்ற நிலைமையே தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தாலும் உருவாகும். தேசிய மக்கள் சக்தியிலுள்ளவர்களுக்கு முஸ்லிம் கலாசார பண்பாட்டு விடயங்கள் தெரியாது. இஸ்லாம் சிறுவர்களை திருமணம் செய்யுமாறு வலியுறுத்தவதாக பிமல் ரத்நாயக்க கூறியுள்ளார்.

இதே போல அக்கட்சியிலுள்ள இன்னும் சிலரும் இஸ்லாம் பற்றிய சரியான புரிதல் இல்லாமல் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். சிலவேளை முஸ்லிம்களை தமது கட்சியில் உள்வாங்கியுள்ளோம் என்று காட்டுவதற்காக முஸ்லிம் பெயர் தாங்கிய சிலரை தேசியப் பட்டியல் ஊடாக அவர்கள் உள்வாங்கலாம். அதுவும் ஆபத்தானது தான். கடந்த காலங்களில் அவர்கள் உள்வாங்கிய முஸம்மில் முஸ்லிம்கள் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களை நாம் இன்னும் மறக்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் முஸ்லிம்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இதனைக் கருத்தில் கொண்டு முஸ்லிம்கள் தமது வாக்குகளை அளிக்க வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு அடுத்தவர் வார்த்தைகளை நம்பி ஏமாந்து விடக்கூடாது. நமது கையால் நமது கண்களை குத்திக் கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கிட விடக்கூடா தென்றார்.

### நாட்டின் பிரதான 04 முச்சக்கரவண்டி...

முடியாமல் பல நாட்களாக எரிபொருள் வரிசையில் தவித்ததாகவும் அந்த நிலையில் இருந்து ஜனாதிபதியே தங்களை மீட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். மீண்டும் அவ்வாறானதொரு நிலைமைக்கு முகம் கொடுக்க தாம் தயாரில்லை யனவும் அவர் தெரிவித்தனர். இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2025 ஆம் ஆண்டு முதல் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டார். பொருளாதார நெருக்கடியின் காரணமாக கடனில் தவிக்கும் முச்சக்கரவண்டி சாரதிகளின் கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைக்க அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக சந்தர்ப்பம் வழங்குவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

### வரி விதிப்புகளால் மட்டும்...

செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதுமாத்திரமன்றி, இளைஞர்கள் பலர் வேலைவாய்ப்புகளை இழந்ததுடன், வர்த்தகங்களும் பாரியளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளன. கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக மாயையொன்றை தோற்றுவித்து எமது அரசாங்கம் சதியால் வீழ்த்தப்பட்டது. இன்று வரிசைகள் ஒழிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும், கடவுச்சீட்டு வரிசை தொடர்ந்தும் நீண்டுக்கொண்டே சென்றது. அதனைக் கட்டுப்படுத்த ஒருபுறம் நடவடிக்கை எடுக்கும்போது, விமான நிலையத்தில் விசாவுக்கு வரிசையொன்று ஏற்பட்டுள்ளது. மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவில் வரிகளை விதிப்பதால், நாட்டையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் ஒருபோதும் மீட்டெடுக்க முடியாதென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

### வாகன அனுமதி பத்திரங்களை...

நிதியம் மற்றும் உலக வங்கியிடம் தகவல்களை முன்கூட்டியே சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் கூறினார். அரசாங்க அதிகாரிகளுக்கான வாகன அனுமதிப் பத்திரத்திரங்கள் சமகால ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் நிச்சயமாக வழங்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். அவர்கள் நாட்டில் மிகவும் ஆதரவற்ற குழுவாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அரசியல்வாதிகளின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு உட்பட்டு அடிபடும் யுகத்தை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதாகத் தெரிவித்த அவர் பொது மக்கள் வரிசைகளில் இருந்த நிலையில் விழும் யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்த ஜனாதிபதிக்கு நாட்டு மக்கள் நன்றியுடன் செயல்படுவார்கள் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

### உச்ச கட்டுப்பாட்டு...

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ஒரு கிலோ 180 முதல் 232 ரூபாய் வரையிலும், 400 கிராம் பால் மாவின் விலை 910 முதல் 1050 ரூபாய் வரையிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

### பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள்...

தெரிவிக்கையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இச் சேவைகளுக்கான தேவையால் அதிக மக்கள் கூட்டம் மற்றும் ஒரே இரவில் வரிசைகள் திரண்டன. இந்த சிக்கலை தீர்க்க, அரசாங்கம் இணையத்தினூடாக பெற்றுக்கொள்ளும் EChanneling புதிய முறையை அறிமுகப் படுத்தியுள்ளது.

## இன்றைய பலன்கள்

### (05.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.

**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.

**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.

**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சில வற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.

**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.

**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.

**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சில வற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.

### TNA எம்.பி.க்கள்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தேன். பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரை தவிர ஏனையோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டில் உள்ளார்கள்.இதனை அவர்களே குறிப்பிட்டனர் அவர்களின் பெயர்களை குறிப்பிட நான் விரும்பவில்லை. பலமான அரச தலைவரை தெரிவு செய்வதை தடுப்பதற்கு சர்வதேச மட்டத்தில் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்காக பெருமளவிலான நிதி செலவழிக்கப்படுகிறது.ஆகவே மக்கள் சிந்தித்து ஜனாதிபதித் தேர்தலில் தீர்மானம் எடுக்க வேண்டியது அவசியம் என்றார்.

### போலித் தகவல் பரப்பிய... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

செப்டம்பர் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா, வைத்தியசாலை விடுதிக்குள் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளாரென தெரிவித்து நேற்று முன் தினம் இரவு பொலிஸாருக்கு முறைப்பாடளிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் வைத்தியசாலை விடுதி அறைக்கு வெளியே வைத்தியரை அழைத்தபோதும், வைத்தியர் வெளியே வராததால் சந்தேகமடைந்த பொலிஸார் விடுதி அறையை உடைத்து உள்ளே சென்றனர். இந்நிலையில் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் அங்கு சென்ற பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். இதனையடுத்து சம்பவ இடத்தில் நின்ற மு.தம்பிராசாவையும் காணொளியை எடுக்க முயன்ற இருவரையும் பொலிஸார் கைது செய்தனர். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைக்கு பின்னர் மூவரையும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

### கெஹெலியவின் மனு... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், தீர்ப்பை அறிவிப்பது ஒக்டோபர் 03ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்படுவதாக தலைமை நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்று அறிவித்தது.

### ஜனாதிபதி ரணிலுக்கு... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

திடமான நம்பிக்கையாகும். இதில் சில பின்னடைவுகள் ஏற்பட்டிருந்த போதிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் கிடைக்கும் என்பது உறுதி. இது மாத்திரமன்றி மலையக தோட்டங்களை கிராமங்களாக்கும் அவரது முயற்சியும் வெற்றி பெறும் என்று அவர் தெரிவித்தார்.

### தமிழரை ஒன்றிணைத்ததாக...

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு தமிழ்மக்களிடையே பெரும் ஆதரவு பெருகிவருகிறது. அதை பார்த்து சிலர் பொறாமைப்படுகின்றனர். சிலர் எரிச்சல் படுகின்றனர். சிலர் எச்சரிக்கை செய்கின்றனர். அவ்வாறானவர்களை சிரிப்போடு கடந்து செல்வோம். அவர்களின் பெயர்களை கூறி அவ்வாறானவர்களை பிரபல்யப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. தவறுகள் என்பது எல்லோரிடமும் இருக்கின்றது. தவறு இழைத்தவர்கள் அத்தனைபேரும் வருகின்ற 22 ஆம் திகதி தமிழ் மக்கள் அளிக்கும் முடிவைப்பார்த்து திருந்துவார்கள். சீரழிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை ஒன்றிணைக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அமையவேண்டும் என்றும் அவர்கேட்டுக்கொண்டார்.

### கடவுச்சீட்டு வரிசைக்கு...

கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், தற்போதைய நெரிசல் நிலை தவிர்க்கப்படும். கடவுச்சீட்டுகளின் தினசரி வழங்கல் 1,000 ஆக இருக்க வேண்டுமென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

### டிசம்பர் மாத இறுதியில் டெங்கு...

பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். டெங்கு நோய் அதிகளவில் பதிவாகும் பகுதிகளில் தற்போது நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. எனவே, இந்த நிலைமை தொடருமாயின் வருட இறுதியில் நாட்டில் டெங்கு நோய் பரவல் தீவிரமடையக் கூடும். அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கோரியுள்ளார்.

### பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ...

பங்களாதேஷ் விடுதலைப் போரில் உயிர்நீத்த வீரர்கள் பற்றி தவறாக பேசியததாகவும் கொலை மிரட்டல் விடுத்தது உள்ளிட்ட நான்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### 09 மாகாணங்களிலும் நிலையான...

மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.




# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் ஆதரிக்க முன்வர வேண்டும்

(மாத்தளை சுழற்சி நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் ஆதரிக்க முன்வர வேண்டுமென விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுயேட்சை வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் 'இயலும் ஸ்ரீலங்கா மக்கள்' சந்திப்பு ஒன்று மாத்தளையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாடு ஸ்திரமற்று காணப்பட்ட போது நாட்டை பொறுப்பேற்று ஆட்சி செய்ய அரசியல்வாதிகள் பலர் இருந்தும் இதனை ஏற்க ஒருவரும் முன்வரவில்லை. இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்று பல சவால்களுக்கு மத்தியில் நாட்டை பல்வேறு துறைகளில் முன்னேற்றமடைய செய்துவருகின்றார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்கியுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களில் அரசியல் சாணக்கியம் நிர்வாக திறமை கொண்டவரும் இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே காணப்படுகின்றார்.

கடந்த குறுகிய காலத்துக்குள் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார துறை மற்றும் அபிவிருத்திட்டத்தை நோக்கும் போது இவரது பெயர் இலங்கை வரலாற்றில் பதியப்பட வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெறுவார் எனவே நாட்டின் வளர்ச்சியை முன்னிட்டு இத்தேர்தலில் மக்கள் ஆழமாக சிந்தித்து தகுதியான தலைவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# நானுஓயாவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

நானுஓயாவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா பிரதேச சபை மற்றும் நுவரெலியா வைத்திய அதிகாரி காரியாலயம் என்பன இணைந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது,

நானுஓயாவிலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், குடியிருப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு சுகாதார திணைக்கள அதிகாரிகள் திடீர் விஜயம் செய்து பரிசோதனைகளை மேற்கொண்டனர்.



கொடிய டெங்கு நோய் குறித்தும், அதை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சுகாதாரத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

# சத்துணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் கைக்குழந்தைகள் உள்ள 400 தாய்மார்களுக்கு ரூ.15 ஆயிரம் பெறுமதி மிக்க சத்துணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இரத்தினபுரி பகுதியில் நடைபெற்றது.

இரத்தினபுரி பகுதியிலுள்ள பிரபல வியாபார நிலைய உரிமையாளரான சந்தியா டெக்ஸ்டைல் அதிபதி நிஷாந்த சேனாதிர தனது தனிப்பட்ட நிதியில் இந்த உதவியை வழங்கியுள்ளார்.

இரத்தினபுரி போதிராஜ ராம விகாரையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கர்ப்பிணி தாய்மார்கள் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் சத்துள்ள உணவுப்பொதிகளை வியாபார நிலைய உரிமையாளர் நிஷாந்த சேனாதிர மற்றும் அவரது மனைவி அனுஷா லட்சுமி ஆகியோர் வழங்கி வைத்தனர்.

# மனைவியை இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்த கணவனுக்கு மரணதண்டனை

## ஊவா மாகாண நீதிமன்றம் தீர்ப்பு

(ஊவா சுழற்சி நிருபர்)

தனது மனைவியை இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் அவரது கணவருக்கு ஊவா மாகாண நீதிமன்றம் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

பதுளை, கெந்தகொல்ல பிரதேசத்தில் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 திகதி டீ.எம்.சந்திராவதி (35) என்பவரை அவரது கணவரான சுலைமான் தர்மதாஸ என்பவர் இரும்புக் கம்பியால் தாக்கியிருந்தார்.

இந்நிலையில் படுகாயமடைந்த மனைவி பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பதுளை குற்றவியல் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை நேற்றுமுன்தினம் விசாரித்த ஊவா மாகாண உயர் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன அல்விஸ் இத்தீர்ப்பை வழங்கியிருந்தார்.

சந்தேகநபர் வேறு பெண்ணுடன் தகாத தொடர்பை ஏற்படுத்தியிருந்ததை தாங்கிக்கொள்ள முடியாத மனைவி அடிக்கடி அவருடன் முரண்பட்டு வந்துள்ளார்.

இறுதியில் வாய்த்தகராறு முற்றி இரும்புக் கம்பி கொண்டு தாக்கப்பட்டுள்ளார். கொலை நிரூபிக்கப்பட்டமையால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# பலாங்கொடை சமனலவெவ வாவி நீர்விநியோகத்திட்டத்தில் கோளாறு

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை சமனலவெவ குளத்தை அடிப்படையாக கொண்டு நிர்மாணிக்கப்பட்ட நீர் விநியோகத்திட்டத்தில் பிரதான இரண்டு நீர் சேகரிப்பு தாங்கிகளும் இயந்திரம் பொருத்தப்பட்ட கட்டடமும் சேதமடைந்து வருவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

நீர் விநியோகத்திட்டத்துக்கு ஒரு குடும்பத்திலிருந்து 5500 வீதம் பணம் சேகரிக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை பிரதேச செயலக பிரிவிலுள்ள முல்கம, வடவல, போவத்த, அல்தொர, படுகம்மன, ரஜவக, யஹலவெல, தொடுபலதன்ன ஆகிய கிராம சேவக பிரிவுகளிலுள்ள இருபது கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் இதன் மூலம் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இவ்வேலைத்திட்டம் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சமனலவெவ நீர் நிலைக்கு உட்பட்ட பலாங்கொடை விகிலிய தெகின்த பிரதேசத்தில் இந்த நீர்தாங்கி அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடகாலமாக நீர் விநியோகத்திட்டம் அமுல்படுத்தப்படாமை காரணமாக நீர் தாங்கிகள் பழுதடையும் நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அத்தோடு நீர் இயந்திரங்களை பொருத்துவதற்கு இருந்த கட்டடமும் பழுதடைந்துவருவதாக தெரிவிக்கின்றனர். இப்பிரதேசத்தில் நாளாந்தம் காட்டு யானைகள் நடமாடுவதால் கட்டடங்களும் பழுதடைந்துவருவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

நீர் விநியோகத்திட்டத்துக்காக கிராமங்களிலுள்ள ஒரு குடும்பத்திடம் ரூ.5500 சேகரிக்கப்பட்டுள்ளதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இதுவரை எந்தவொரு அபிவிருத்தித் திட்டமும் இடம் பெறவில்லையென பிரதேசமக்கள் மேலும் சுட்டிக்காட்டினர்.

எனவே இது சம்பந்தமாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து பிரதேசமக்களுக்கு குடிநீரை வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் தெரிவித்தனர்.

## நுவரெலியா மாவட்டத்தில்

# சுமுகமான முறையில் தபால் மூல வாக்களிப்பு; 19747 வாக்குகள் பதிவு

(பொகவந்தலாவ நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் 200 வாக்களிப்பு நிலையங்களில் தபால் மூல வாக்களிப்புகள் நடைபெற்றதாகவும் 19747 வாக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்தார்.



ஜனாதிபதி தேர்தல்களின் தற்போதைய நிலை குறித்து ஊடகங்களுக்கு அறிவிக்கும் விசேட ஊடக மாநாடு (04) நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தபால் கண்காணிப்புக்கு 120 அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நியாயமான மற்றும் அமைதியான தேர்தல் நிலைமையை பேணுவதற்கு தேவையான சகல ஏற்பாடுகளும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றன.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் நுவரெலியாவில் மிகக்குறைந்த அளவிலேயே பதிவாகியுள்ளன. இந்நிலையில் நுவரெலியா தேர்த ல் முறைப்பாடு பிரிவுக்கு ஏழு முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் கடுமையான முறைப்பாடுகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லையெனவும் அவர் கருத்து தெரிவித்தார்.

தற்போது கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மாத்தளை மாவட்ட இளைஞர் அணியை புதுப்பிப்பதற்கான வேலைத்திட்டம்

மாத்தளை மாவட்டத்திற்கான இளைஞர் அணியை மீண்டும் புதுப்பிப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதனால் [AYEVAC] அமைப்பில் இணைந்து கொள்ள விரும்பும் அனைத்து சமூக நலன் விரும்பிகளையும் அதில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

AYEVAC அமைப்பு இவ்வேலைத்திட்டத்தை (Child Fund Srilanka) 25 மாவட்டங்களிலும் செயற்படுத்தி வருகிறது.இதில் மாத்தளை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

## சட்டவிரோதமாக

# மரப்பலகைகளை ஏற்றிச் சென்ற லொறி சாரதிகள் கைது

(மஸ்கெலியா தினகரன் நிருபர்)

அனுமதிப்பத்திரமின்றி தேக்கு மற்றும் மஹோகனி மரப்பலகைகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் லொறிகளின் சாரதிகள் இருவர் சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்

மொறட்டுவையிலிருந்து மஸ்கெலியா பிரதேசத்திலுள்ள தேயிலை தொழிற்சாலைக்கு குறித்த மரப்பலகைகளை ஏற்றிச் சென்ற போதே ஹட்டன் கொழும்பு பிரதான வீதி ரொசெல்ல பிரதேசத்தில் வைத்து குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தே கபர்களுக்கு தலா 40,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், இரண்டு லொறிகளிலிருந்து மீட்கப்பட்ட 22 தொன் மரப்பலகைகள் பறிமுதல் செய்ய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# நுவரெலியாவில் ஊழியர்கள் தபால்மூலம் வாக்களிப்பு

( நானுஓயா நிருபர்)

இலங்கையின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூலமான வாக்களிப்புக்கள் நாடளாவியரீதியில் நேற்று புதன்கிழமை (04) ஆரம்பமாகியது.



நுவரெலியா தலைமையக. பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர்கள் மற்றும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் வாக்களித்தனர்.

குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கு தேவையான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டிருந்தன.



மாத்தளை கல்வி வலய காரியாலயத்தின் ஏற்பாட்டில் தரம் 5 மாணவர்களுக்கான கற்றல் விருத்தி செயற்றிட்ட கருத்தரங்கு நிக்க கொள்ள மின்ஹாஜ் மகா வித்யாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் செலகம தமிழ் வித்தியாலயம், யடவத்த தமிழ் வித்தியாலயம் , நிககொள்ள மின்ஹாஜ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 5 இல் கல்வி கற்கும் சுமார் 50 மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆசிரிய ஆலோசகர் மற்றும் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களால் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம்

நுவரெலியா பிராந்திய சுகாதார பணிமனை பிரிவுக்குட்பட்ட லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு பின்புறத்தில் பாரிய மண்மேட்டில் இருந்து கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இங்கு சிகிச்சைக்காக வரும் பொதுமக்கள் அச்சத்துடன் இருக்கின்றனர்.

தற்போது கட்டடத் தொகுதியிலும் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாக இங்கு பொதுமக்களுக்கு சிகிச்சை வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு இயற்கை அனர்த்த மத்திய நிலையத்தின் ஊடாக மண்சரிவு அபாயம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இங்கு வரும் நோயாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என கோரி 100ற்கும் மேற்பட்ட மக்கள் நேற்று காலை 10, மணி முதல் 11.30 மணி வரை குழந்தைகளை வைத்துக்கொண்டு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மாற்றுத்திறனாளி யுவதி பாலியல் துஷ்பிரயோகம்

## மூன்று பிள்ளைகளின் தந்தை கைது

(ஊவா சுழற்சி நிருபர்)

பசறை, வெல்கொல்ல, பொல்கஹவத்தை பிரதேசத்தில் மாற்றுத்திறனாளி யுவதியொருவரை படுக்கையறையிலிருந்து தூக்கிச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த 51வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையொருவரை பசறை பொலிஸார் அதிரடியாக கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி யுவதியின் நடத்தையில் சந்தேகம் கொண்ட அவரது சகோதரி என்ன நடந்தது என விசாரித்த போது நடந்தவற்றை யுவதி கூறியுள்ளார்.

உடனே இதுதொடர்பில் பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

மகளிர் மற்றும் சிறுவர் நன்நடத்தைப் பொலிஸார் சந்தேகநபரை அதிரடியாக கைது செய்துள்ளதோடு பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி யுவதியை பதுளை போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியல் வைத்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குற்றவியல் பொலிஸார் மேலும் தெரிவித்தனர் .




# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாணத்தில் அமைதியான முறையில் தபால் மூல வாக்களிப்பு





ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூலமான வாக்குப்பதிவு கிழக்கு மாகாணத்தில் முதலாம் நாளான நேற்று புதன்கிழமை ஆரம்பமானது.

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா மற்றும் மூதூர் பொலிஸ் நிலையங்களில் நடைபெறும் தபால் மூலமான வாக்குப்பதிவில் மூதூர் மற்றும் கிண்ணியா பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கிண்ணியா சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றி தமது வாக்குகளை அளித்து வருகின்றனர்.

கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை 8:30 மணிக்கு ஆரம்பமான தபால் மூலமான வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதாக, அப்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால் மூலமான வாக்குப்பதிவு மட்டக்களப்பு மாவட்டத்திலும் நேற்று காலை 8.30 மணிக்கு மிகவும் அமைதியான முறையில் ஆரம்பமானது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான ஜஸ்டினா முரளிதரனின் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் மேற்பார்வையின் கீழ் தபால் மூலமான வாக்களிப்பு ஆரம்பமானது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 13,116 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளதாக தெரிவித்த அம்மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ஜஸ்டினா முரளிதரன், தபால் மூலமான வாக்களிப்பு சுமுகமாக நடைபெறுவதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸ் திணைக்களத்தினர் செய்துள்ளதாகவும் கூறினார்.

தபால் மூல வாக்களிப்பு நிலையங்களுக்கு தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தேர்தல் மேற்பார்வை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் குறிப்பிட்டார். மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையம் உள்ளிட்ட பொலிஸ் அலுவலகங்கள், காத்தான்குடி பொலிஸ் நிலையம், மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் பணிமனை ஆகியவற்றில் கடமையாற்றும் பொலிஸார், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் தமது வாக்குகளை அளித்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் 290 உத்தியோகத்தர்களும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் 404 உத்தியோகத்தர்களும் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் 96 பொலிஸ் உத்தியோகத்தர்களும் தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

மாவட்ட செயலக அலுவலகங்கள், தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகங்கள், சிரேஷ்ட மற்றும் பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகங்கள், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், சிறப்பு அதிரடிப் படை முகாம்கள், சிறப்பு பொலிஸ் பிரிவுகள் மற்றும் உயரடுக்கு பாதுகாப்பு பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தபால் மூலம் தமது வாக்குகளை பதிவுசெய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

தபால் மூலமான வாக்களிப்பில் மாவட்ட செயலக மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடுவதை அவதானிக்க முடிவதாக, எமது செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**(கிண்ணியா மத்திய, மட்டக்களப்பு குறூப், தம்பலகாமம் குறூப், புதிய காத்தான்குடி தினகரன், கல்லடி குறூப், பெரியபோரதீவு தினகரன், மட்டக்களப்பு சுழற்சி, மட்டக்களப்பு விசேட, கந்தளாய் தினகரன் நிருபர்கள்)**

## நிந்தவூரில் பொலிஸ் தினம் அனுஷ்டிப்பு

**நிந்தவூர் குறூப் நிருபர்**



இலங்கை பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 158ஆவது வருட பூர்த்தியையிட்டு நிந்தவூர் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் அப்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீபின் வழிகாட்டலின் கீழ் பொலிஸ் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நிந்தவூர் பிர்தௌஸ் ஜும்மா பள்ளிவாசலில் விசேட துஆ பிரார்த்தனை நடைபெற்றதுடன், தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பொலிஸ் சார்ஜன் ஏ.எம்.எம்.பாரிஸ், பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி ஏ.பீ.எம்.ஷிம்லி (நஹ்ழி), பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகளாகிய பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வின் ஞாபகார்த்தமாக பயன்தரும் மரக் கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.

## மாணவர் ஆக்கத்திறன் பட்டறை

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

பட்டிருப்பு வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயத்தில் தொழில் கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களுக்கான தொழில் பயிற்சி ஆக்கத்திறன் பயிற்சி பட்டறை அண்மையில் நடைபெற்றது.

பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரனின் வழிகாட்டலின் கீழ் முறைசாரா கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சி பட்டறையில் முறைசாரா கல்விப் பிரிவு இணைப்பாளர் நீற்டா கலைச்செல்வன், கைத்தொழில் திணைக்களத்தின் என்.கோகுலதாஸ், என்.ரூபராஜ் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி பட்டறையில் தொழில் கல்விப் பிரிவில் கல்வி கற்கும் 20 மாணவர்கள் கலந்து கொண்டு தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்தினர். இதற்கான ஒத்துழைப்பை மேற்படி பாடசாலை அதிபர் ஜெயபிரதாபன், ஆசிரியர் சதீஸ்கரன் ஆகியோர் வழங்கினர்.

# மட்டக்களப்பில் வாக்காளர் அட்டை விநியோகம் ஆரம்பம்

**மட்டக்களப்பு விசேட, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கான வாக்கு அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நடவடிக்கை எதிர்வரும் 14ஆம் திகதிவரை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் உதவி ஆணையாளர் எம்.பி.எம். சுபியான் தெரிவித்தார்.

இந்நிலையில் வாக்காளர் அட்டை கிடைக்காத வாக்காளர்கள், மட்டக்களப்பு மாவட்ட தபால் திணைக்களத்துக்கு நேரடியாக சென்று வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ள முடியும். அல்லாவிடின் மாவட்டத்தின் பிரதான தேர்தல் திணைக்களத்துக்கு சென்று தமது அடையாளத்தை நிரூபித்து வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் கூறினார்.

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரதான பகுதிகளில் வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தலில் இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 49 ஆயிரத்து 686 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். கல்குடா தேர்தல் தொகுதியில் 134,104 வாக்காளர்களும் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் 210,293 வாக்காளர்களும் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் 105,289 வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் திணைக்களத்தால் வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்ட பின்னர் நாடளாவிய ரீதியில் வாக்காளர்களுக்கான வாக்கு அட்டை விநியோகம் தபால் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# தற்கொலைக்கு எதிராக விழிப்புணர்வு; சைக்கிளோட்டம் திருமலையை அடைந்தது

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



தற்கொலைக்கு எதிராக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருகோணமலையை சென்றடைந்தது.

தைரியம், இரக்கம், பொறுப்பேற்றல் என்ற பெயருடைய தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் றோட்டாரிக்கழக அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொடர் சைக்கிளோட்டத்தில் ஈடுபட்ட வீரர்களை திருகோணமலை றோட்டாரிக்கழக அங்கத்தவர்கள் வரவேற்றனர்.

இது தொடர்பாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் நிகழ்வொன்றும் திருகோணமலையில் நடத்தப்பட்டதுடன், தற்கொலை மனப்பாங்கை நீக்கக்கூடிய ஆலோசனைக்கு சிசிசி 1333 எனும் தொலைபேசி இலக்கம் அடங்கிய கையேடுகளும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தற்கொலை முயற்சியை தடுத்து, பொதுமக்களின் உளவள நலனை மேம்படுத்தி, தற்கொலை எண்ணத்துக்கு தூண்டப்படுபவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்கி, அதிலிருந்து விடுவிப்பதற்கான வழி வகைகளை ஏற்படுத்துவதற்காகவே இந்த விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிசிசி 1333 (CCC1333) எனும் இலவச ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்தை பொதுமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, இலங்கையின் 12 மாவட்டங்களை உள்ளடக்கியதாக தொடர் சைக்கிளோட்ட நிகழ்வு நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று தைக்கா ஜும்ஆ பள்ளிவாசல் வருடாந்த கந்தூரி



**அட்டாளைச்சேனை குறூப், அக்கரைப்பற்று தினகரன் நிருபர்கள்**

அக்கரைப்பற்று மஹ்ழரத்துல் காதிய்ரியா தைக்கா ஜும்ஆ பள்ளிவாசலின் வருடாந்த கந்தூரி நிகழ்வும் அன்னதானம் வழங்குதலும் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

அல்குத்ப் அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் ஷம்சுல் உலமா, பஹ்றுல் இல்ஹாம் அல்ஹாபிழ் முஹம்மது ஜலாலுதீன் ( றஹ்) காதிரி, ஜிஷ்தி, றிபா, நக்ஷபந்தியின் 58ஆவது கந்தூரி நிகழ்வாக நடைபெற்றது. இதன்போது நாட்டின் சாந்தி சமாதானத்துக்காக விசேட துஆ பிரார்த்தனையும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம அதிதியாக கலந்துகொண்டார். அத்துடன் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.எம்.நவாஸ் உட்பட பிரமுகர்கள், பெருந்தொகையான மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 58 வர்த்தகர்களுக்கு அபராதம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 58 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்தார்.

கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தகண்டி ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 104 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்களில் 58 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோதே, இவர்களுக்கு எதிராக ஒரு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டை அடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்கு பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலாவதியான மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதி காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்ததாகவும், அவர் மேலும் கூறினார்.

## தேர்தல் கடமை அதிகாரிகளுக்கு செயலமர்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

ஜனாதிபதி தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான விசேட பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான ஜஸ்டினா முரளிதரன் தலைமையிலும் மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியானின் ஒழுங்குபடுத்தலின் கீழும் இந்த செயலமர்வு பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது. இதன்போது தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடயங்கள் தொடர்பாகவும் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக தெளிவூட்டப்பட்டன.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு கூட்டம்



**கிண்ணியா தினகரன், கந்தளாய் தினகரன் நிருபர்கள்**

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள், வங்கிப் பணி குழுவினர் மற்றும் கள உத்தியோகத்தர்களுக்கான மூன்றாவது காலாண்டுக்கான கூட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனியின் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடுத்தீவு சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் இயங்கி வருகின்ற மூன்று சமுர்த்தி வங்கிகளின் செயற்பாடுகள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் சமுர்த்தி தலைமை முகாமையாளர், சமுர்த்தி கருத்திட்ட முகாமையளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவள அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்று வங்கி சங்க தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## தொழிற்பயிற்சி நிலைய மாணவ ஒருங்கிணைப்பாளர்கள் கௌரவிப்பு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



சாய்ந்தமருது இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தின் மாணவ ஒருங்கிணைப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி எம்.எச்.எம்.ஹாறூன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளர் எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். அத்துடன் தொழிற்பயிற்சி நிலையத்தின் விரிவுரையாளர்களும் இதில் கலந்து கொண்டனர். இதன்போது மாணவ ஒருங்கிணைப்பாளர்கள் சின்னம் சூட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# தொழில்நுட்பத்துறை மாணவரின் பயிற்சி முகாம்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் க.பொ.த. உயர்தர பிரிவு இறுதியாண்டு தொழில்நுட்பத்துறை மாணவர்களின் செயற்பாட்டு பயிற்சி முகாம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்த நடவடிக்கைக்கு அக்கரைப்பற்று வலய கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரிவு அனுசரணை வழங்கியது.

மேற்படி பாடசாலை அதிபர் ஏ.எல்.பாயிஸ் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் அக்கரைப்பற்று வலய கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் உபவேந்தரும் தொழில்நுட்ப பீட பீடாதிபதியுமான கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட், அக்கரைப்பற்று கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர்கள் எம்.எம். சித்தி பாத்திமா, ஏ.எல்.அப்துல் மஜீட், பீ.ஜிஹானா, எம்.மர்துரி ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர். தொழில்நுட்பத்துறையில் கற்று இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் அடைவை மேம்படுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட இம்முகாமை அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, திருக்கோவில் கல்வி வலய உயர்தர பிரிவு மாணவர்கள் பார்வையிட்டனர்.



# அநுரகுமார வெற்றி பெற்றால் இலங்கை தீவின் பிராந்திய அமைதிக்கு பங்கம் ஏற்படும்

கரவெட்டி தினகரன் நிருபர்



அநுரகுமார வெற்றி பெற்றால் இலங்கைத் தீவின் பிராந்திய அமைதிக்கு பங்கம் ஏற்படும். அவரால், நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி வேட்பாளர் அநுர ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டை திருடியவர்கள், சூறையாடியவர்களை பிடித்து சிறையில் அடைப்பார் என்பது உண்மையான விடயம். ஆனால், அவரால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான திட்டங்களோ அல்லது சர்வதேச ஒத்துழைப்பையோ பெற முடியாது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் அவர்கள் சீனாவின் உதவியை நாடவேண்டிய தேவை ஏற்படும். ஏற்கனவே, நாடு சீனாவின் கடன்பொறிக்குள் சிக்கியுள்ள நிலையில் நாட்டு மக்கள் அதனை விரும்ப மாட்டார்கள். அது மட்டுமல்ல தேசிய மக்கள் கட்சியினர் சீனாவின் கொள்கைகளுடன் ஒத்துப்போகும் நிலையில் அவர்கள் ஆட்சிக்கு வருவார்களானால் இலங்கைத் தீவின் பிராந்திய அமைதிக்கு பங்கம் ஏற்படும்.

என்னைப் பொறுத்தவரையில், அநுரவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஏனெனில், வடக்கு கிழக்கை பிரித்தவர்கள். 1983ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னணியில் பல தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தவர்கள் ஜே.வி.பியினர். இப்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் தேர்தலில் அவர்கள் களமிறங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைதான அரச அதிகாரிகளுக்கு விளக்கமறியல் உத்தரவு

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி, உருத்திரபுரம் சிவநகர் பகுதியில் அனுமதியற்ற கட்டடத்திற்கு இலஞ்சம் பெற்று அனுமதியை வழங்கிய இரு அதிகாரிகளை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட இருவரையும் நேற்றையதினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.



இதன்போது இலஞ்சமாக வாங்கியதாக கூறப்படும் ரூ.60000 பணத்தை சான்றுப்பொருட்களாக நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த இருவரையும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 10 வயது மகள் பாலியல் துஷ்பிரயோகம்; சந்தேகத்தின் பேரில் தந்தை கைது

யாழ். விசேட நிருபர்

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தனது 10 வயதான மகளை பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றச்சாட்டில் ஆசிரியரான தந்தை கைது செய்யப்பட்டுள்ளார். ஆசிரியரான அவரது தந்தை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வருவதாக இளவாலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் தந்தையை கைது செய்துள்ளனர்.

அதேவேளை மாணவியை பொலிஸார் மீட்டுள்ளதுடன் அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். தந்தையிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா

கரவெட்டி தினகரன் நிருபர்

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 7ஆம் திகதி முத்தேவியர் திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி தங்க ரதத் திருவிழாவும் அடுத்தநாள் 9ஆம் திகதி திருமஞ்சத் திருவிழாவும் நடைபெறும்.

தொடர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரதத் திருவிழாவும் அடுத்தநாள் 14ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

## தபால்மூல வாக்களிப்பு முல்லைத்தீவில் சுமுகம்

மாங்குளம் குருப் நிருபர்

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடளாவியரீதியில் நேற்றையதினம் ஆரம்பமாகியது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் தபால் மூல வாக்களிப்பு செயற்பாடுகள் சுமூகமாக ஆரம்பமாகி நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அரச உத்தியோகத்தர்கள் தமது தபால் வாக்குகளை அளித்தனர்.

இதேவேளை நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகம், விசேட அதிரடிப்படை முகாம் மற்றும் மாவட்டத்தின் நட்டாங்கண்டல், மல்லாவி, ஐயன்கன்குளம், மாங்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ,முள்ளியவளை, முல்லைத்தீவு, கொக்கிளாய், வெலிஓயா ஆகிய பத்து பொலிஸ் நிலையங்கள் என 13 வாக்கெடுப்பு நிலையங்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் 3566 பேர் தபால் மூல வாக்களிப்புக்கு தகுதிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருக்குறள் உரையும் விளக்கமும் நூல் வெளியீட்டு விழா

கோப்பாய் குறுப் நிருபர்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய திருக்குறள் உரையும் விளக்கமும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் சிறீல சிறீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையையும் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரையையும் வழங்குவர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும் நூல் வெளியீட்டு விழாவில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் பிரதம அதிதியாகவும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் சுஜீவா சிவதாசன், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலம்புரி நாளிதழ் ஆசிரியர் ந. விஜயசுந்தரம் வெளியீட்டுரையையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வை. விஜயபாஸ்கரன் அறிமுக உரையையும் ஆற்றுவர்.

## மன்னார் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்து தந்த வீரர்கள் கௌரவிப்பு

தலைமன்னார் விஷேட நிருபர்

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 13 கல்வி வலயங்களைச் சார்ந்த 1200 பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன.

இதில் மன்னார் கல்வி வலயம் மூன்றாவது தடவையாக முதலாம் இடத்தைப் பெற்று சாதனைப் படைத்துள்ளதாக மன்னார் கல்வி வலயம் தெரிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டு முதல் தடவையாக இவ்வாறான விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தையும் 2023 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக முதலாம் இடத்தையும். தற்பொழுது 2024 ஆம் ஆண்டு மூன்றாவது தடவையாக தொடர்ச்சியாக முதலாம் இடத்தையும் மன்னார் கல்வி வலயம் பெருமை சேர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதை முன்னிட்டு வெற்றியீட்டிய வீரர்களை மன்னார் கல்வி வலயம் கௌரவிக்கும் முகமாக இவர்களை மன்னார் நகரத்திலிருந்து மன்னார் கல்வி வலயம் வரை பேண்ட் வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் செல்வி ஜீ.டீ. தேவராஜா மன்னார் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் பி.ஞானராஜ். ஏ.பிரேம்தாஸ் கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப் பணிப்பாளர் கல்வி நிர்வாக அதிகாரிகள், நானாட்டான் மற்றும் மன்னார் கோட்டக் கல்வி அதிகாரிகளும் ஏனைய கல்வி திணைக்களத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## சஜித் பிரேமதாசவுடனான தமிழரசு கட்சியினரின் 'டீல்' என்ன?

### அங்கஜன் இராமநாதன் எம்.பி கேள்வி

யாழ். விசேட நிருபர்

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கும் தமிழரசுக் கட்சியினர் அவர்களுக்கிடையிலான 'டீல்' தொடர்பில் தெளிவாக கூற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசு கட்சியினர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு காரணமாக 13 ப்ளஸ் என சொல்கிறார்கள். இதனை நாம் கடந்த காலங்களிலும் கேள்விப்பட்டோம். ஆனால் அந்த 13 ப்ளஸ் என்றால் என்ன என எமக்கு தெரியாது.

என்னை பொறுத்தவரை ப்ளஸ் என்பதற்கு எல்லை இல்லை. நாங்கள் தனி நாடு கூட கோரினோம். இவர்கள் சொல்லும் அந்த ப்ளஸ் தனி நாடு வரை கூட போகலாம் இல்லாவிடின் சமஷ்டி வரையிலும் போகலாம். எனவே அந்த 13 ப்ளஸ் என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில் சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கையில் அவ்வாறான விடயங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தமிழரசு கட்சியினர், சஜித் பிரேமதாசவுடன் 'டீல்' பேசி, அந்த 13 ப்ளஸ் என்பதனை பெறுவதாக இருந்தால், அது என்ன என்பதை மக்களுக்கு தெளிவாக கூற வேண்டும். இல்லையென்றால் கடந்த காலங்கள் போன்று, நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி மக்களை ஏமாற்றும் செயலாகவே இதனை பார்க்க வேண்டும்.



அதேவேளை தமிழரசு கட்சியினரில் சிலர் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு என்கின்றார்கள். ஆனால் சிலர் ஆதரவு இல்லை என்கின்றனர். எனவே தமிழரசு கட்சியினர், தமக்கு சஜித் பிரேமதாசவுடனான 'டீல்' தொடர்பில், தமது நிலைப்பாட்டை தெளிவாக கூற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மாதகல் கடலில் படகு விபத்து மீனவரை காணவில்லை

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மாதகல் கடல் பகுதியில் படகு விபத்துக்குள்ளானதில், கடற்றொழிலாளியொருவர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன கடற்றொழிலாளியை, சக கடற்றொழிலாளர்கள், கடற்படையினர் இணைந்து கடலில் தேடி வருகின்றனர்.

மாதகல் பகுதியை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் படகொன்றில் நேற்றைய தினம் அதிகாலை கடலுக்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில் கடலில் படகு கவிழ்ந்து மூழ்கிய போது ஒருவர் கரையை நோக்கி நீந்தி வந்துள்ளார். இதன் போது சக கடற்றொழிலாளர்கள் இதனைக் கண்டு, அவரை மீட்டு கரை சேர்ந்தனர். மற்றையவர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளார். அவரை தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## புதுக்குடியிருப்பில் தேர்தல் விதிமுறைகளை மீறிய மூவர் கைது

ஓமந்தை விசேட நிருபர்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறி மக்களை ஓரிடத்தில் ஒன்றுதிரட்டி காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குவதாகவும், வேலைவாய்ப்புகள் பெற்றுக் கொடுப்பதாகவும் வாக்குறுதிகளை வழங்கி அவர்களிடமிருந்து ரூ.200 அறவிடப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் அவர்களிடமிருந்த படிவங்களை பறிமுதல் செய்ததுடன் மூவரை கைது செய்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் வரை அழைத்து சென்றுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னார் மாவட்ட வளத்தை பாதுகாக்க கோரி அமைதி பேரணி


மன்னார் குறூப் நிருபர்

'மன்னார் மாவட்டத்தின் வளத்தை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 10 ஆம் திகதி மன்னாரில் அமைதி பேரணியொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஏற்பாட்டில், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையில் வடமாகாண கடற்றொழிலாளர்கள், இலங்கையின் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் இணைந்து 'மன்னார் மாவட்டத்தின் வளத்தை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் குறித்த பேரணியை முன்னெடுக்கவுள்ளனர்.



குறித்த பேரணி ஊடாக இலங்கை ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர்,மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளோம்.மன்னார் வளத்தை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளோம்.

மன்னார் மக்களுக்கும் மீனவர்களுக்கும், பாதிப்பாக இருக்கின்ற கனிய மணல் அகழ்வு,காற்றாலை மின் உற்பத்தி, இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை போன்ற செயற்பாடுகளை நிறுத்தக் கோரியும் குறித்த அமைதி பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த பேரணிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு மீனவர்கள் ஆதரவு வழங்கவுள்ளனர். எனவே அன்றைய தினம் மன்னார் மாவட்ட மீனவர்கள், பொது அமைப்புக்களும் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என அன்னலிங்கம் அன்னராசா கோரிக்கை விடுத்தார்.



நாடளாவியரீதியில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு ஆதரவாக வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படம்: யாழ்.விசேட நிருபர்)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி வவுனியாவில் குடும்பஸ்தர் கொலை

வவுனியா விசேட நிருபர்

யாழ்ப்பாணம், சில்லாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்தமை தொடர்பில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

36 வயதுடைய மைந்தன் இரு தயராஜா எனும் யாழ் சில்லாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார். வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் பிரிவில் உள்ள கற்பகபுரம் கிராமத்தில் கடந்த 26 ஆம் திகதி அன்று கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதுதொடர்பான விசாரணைகளை பூவரசன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வந்த நிலையில் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார். இந்நிலையில், வவுனியா மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலுக்கமைவாக அப்பிரிவிற்கான பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் சுகந்த் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் குணதிலக்க ஆகிய குழுவினர் விசேட நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது மறைந்திருந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் வவுனியா, கற்பகபுரம் கிராமத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபராவார். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தனர்.

## மாதனை அருள்மிகு கற்பக பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம்

கரவெட்டி தினகரன் நிருபர்

பருத்தித்துறை மாதனை அருள்மிகு கற்பக பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா நாளை காலை 6.49 மணி முதல் 8.23 மணி வரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கர்மாரம்பம் கடந்த சனிக்கிழமை காலை 5.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை இடம்பெற்றது. பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் பி.ப.4.00 மணி வரை நடைபெறும்.

# நகர்வலம்



## பொலிஸ் திணைக்கள 158ஆவது வருட நிகழ்வு






இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 158ஆவது வருட நிகழ்வு நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதனையொட்டிய இஸ்லாமிய சமய நிகழ்வு டாம் வீதி பொலிஸ் நிலையத்தின் பங்கேற்புடன் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் பள்ளிவாசலின் தலைவர் தாஹிர் ரசீன் தலைமையில் (03) மாலை இடம்பெற்றது.

பெரிய பள்ளிவாசலின் மௌலவி அப்துல் ஹாபிழின் கிராஅத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

வரவேற்புரையை பள்ளிவாசலின் தலைவர் தாஹிர் ரசீன் வழங்கினார். பொலிஸ் திணைக்களத்தின் 158ஆவது ஆண்டு நிறைவு தொடர்பான உரையை பிரதம அதிதியான டாம் வீதி பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி அஜித் பேதுரு ஆராச்சி வழங்கினார்.

விசேட துஆப் பிரார்த்தனையை பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி றிஸ்வான் வழங்க கொழும்பு பெரிய பள்ளிவாசலின் அரபுக் கல்லூரி மாணவன் ஹாமிதின் கிராஅத்தும் இடம்பெற்றது.

## மஜ்மா நகர் கொரோனா மையவாடி பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்வு



**(பேருவளை விசேட நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி மஜ்மா நகர் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள கொரோனா மையவாடியில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி அஸர் தொழுகையுடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

2021ம் ஆண்டு கொரோனா (Covid 19) காலப்பகுதியில் (11.01.2022) காலமான பேருவளை, சீனங்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்ட மர்ஹூமா ஹாஜியானி சவாஹிர் இரீபதுல் ஹைரியாவின் ஞாபகார்த்தமாக இப்பள்ளிவாயல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சுமார் 17 ஏக்கர் விசாலமான காணியில் இம்மையவாடி அமையப்பெற்றுள்ளதுடன், கொரோனா காலப்பகுதியில் இலங்கை முழுவதிலும் மரணித்தவர்களில் 3,634 ஜனாஸாக்கள் இம்மஜ்மா நகரில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், அதில் 2,956 உடல்கள் முஸ்லிம்களுடையதாகும்.

அதில் ஜனாபா மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைரியா சவாஹிரும் ஒருவராவார். அன்னாரின் ஞாபகார்த்தமாக கணவர் மற்றும் பிள்ளைகளினால் "பைத்துல் ஹைராத்" என்ற நாமத்துடன், அழகிய தோற்றத்தோடு, அனைத்து வசதிகளுடனும் நிர்மாணிக்கப்பட்ட பல்தேவைக்கட்டடமாக (140'X40') மரணித்து அடக்கம் செய்யப்பட்டவர்களின் உறவுகளுக்கும் மக்கள் பாவனைக்குமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

### தொப்பி அணிந்தவரை மௌலவியாக்கி

## முஸ்லிம்களை ஏமாற்றுவதை அநுரகுமார கைவிட வேண்டும்

தொப்பி அணிந்த ஒருவரை மௌலவியாகக் காண்பித்து, முஸ்லிம்களை ஏமாற்றும் கபடத்தனங்களை அநுரகுமார திஸாநாயக்க கைவிட வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, வவுனியாவில் நேற்று முன்தினம் (03) நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், உரையாற்றும் போதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சாப்பாட்டுப் பார்சல்களுக்கும் சில்லறைச் சலுகைகளுக்கும் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்கும் கூட்டத்தினரிடம் எச்சரிக்கையாக இருங்கள். நாட்டின் பொருளாதாரத்தையும் இந்தக் கள்வர் கூட்டமே களவாடியது.



எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டு, சகல சமூகங்களையும் சமமாக நேசிக்கும் பண்பட்ட அரசியல்வாதி சஜித் பிரேமதாச. பாடசாலைகளுக்கு "ஸ்மார்ட்" வகுப்பறைகள், பஸ்வண்டிகளை வழங்குகிறார். அனுரகுமார திஸாநாயக்க கல்வி பயின்ற பாடசாலைக்கும் இவை வழங்கப்பட்டுள்ளன.

சஜித் பிரேமதாசவின் வெற்றிக்கு இன்னும் சொற்பகாலங்களே உள்ளன. பஸ் வண்டிகளில் மக்களைக் கொண்டுவந்து, மாயை காட்டும் அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்ப நாட்டு மக்கள் தயார். அரசியல் வாழ்வில் எதையுமே செய்யாத அனுரகுமார திஸாநாயக்க, ஆட்சிக்கு வந்தால், எதையும் செய்யுமளவுக்கு அனுபவம் இருக்காது. இவரது ஆட்சியைக் கற்பனை செய்யவே பயமாக உள்ளது.

சீனாவிலுள்ள உர்குர் இனத்து முஸ்லிம்களுக்கு நடப்பது என்ன? பள்ளிவாசலுக்குச் செல்ல முடியாது. நோன்பு நோற்க முடியாது. புனித ஹஜ்ஜுக்குச் செல்வதற்கு அனுமதியில்லை. இந்த அபாயகரமான நிலை இங்கும் வேண்டுமா?

மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழும் மாவட்டம் வவுனியா. இங்கு மூவாயிரம் வீடுகளை அமைத்தோம். தொழிலாளர்களை நேசித்தோம். விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு உதவினோம். இவை, எவற்றையும் செய்யாமல், வாக்குக் கேட்க வந்துள்ள ஏஜெண்டுகளை விரட்டிவிடுங்கள் என்றார்.

## ஜனாதிபதி ரணிலை ஆதரித்து மத்துகமையில் பொதுக்கூட்டம்

சுயேச்சை வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கமை ஆதரித்து இன்று 05ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு மத்துகமை நகரில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மத்துகமை தேர்தல் தொகுதி அமைப்பாளரும் கடற்றொழில் நீரியல்வளத்துறை இராஜாங்க அமைச்சருமான பியல் நிசாந்த தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்துவார்.

இக்கூட்டத்தில், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, முன்னாள் களுத்துறை மாவட்ட அமைச்சர்களான குமார வெல்கம, ரோஹித அபேகுணவர்த்தன, ராஜித சேனாரட்ன உட்பட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

### புத்தளம் மாவட்டத்தில்

## தபால் மூலம் வாக்களிக்க 14,967 பேர் தகுதி பெற்றுள்ளனர்

**புத்தளம் தினகரன் நிருபர்**

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று 04 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி செப்டெம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் இடம்பெறும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்றைய தினம் (4) மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தபால் மூல வாக்களிப்பு இடம்பெறும் தினங்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு செப்டெம்பர் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் மேலதிக நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இம்முறை புத்தளம் மாவட்டத்தில் 15,270 தபால் மூல வாக்கு விண்ணப்பங்களில் 303 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், 14,967 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.



இதன்படி, இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தபால் வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 712,319 ஆகும். தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரும் தபால் வாக்களிப்பில் கலந்துகொண்டு வாக்களிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

## புத்தளம் தள வைத்தியசாலையில் இரத்தம் தட்டுப்பாடு

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் தள வைத்தியசாலையில் இரத்தம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதனை தானமாக வழங்க பொதுமக்கள் முன்வருமாறு நிர்வாகம் கேட்டுள்ளது.

அவசரமாக இரத்தம் தேவைப்படுவதால் இரத்த தானம் செய்ய விரும்புகின்றவர்கள் புத்தளம் தள வைத்தியசாலையோடு 078 6662541 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## சகல இன மக்களின் கலாசாரத்தை பாதுகாக்க முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

### புத்தளத்தில் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

இலங்கையில் வாழும் சகல இன மக்களின் கலாசாரத்தை பாதுகாக்கவும், இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ புத்தளத்தில் தெரிவித்தார்.

புத்தளம், மதுரங்குளி கடையாமோட்டையில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் தொகுதி அமைப்பாளரும், முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினருமான ஏ.எச்.எம். ரியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆனமடுவ அமைப்பாளர் சட்டத்தரணி சமரி பெரேரா, பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட பொதுஜன பெரமுன பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மேலும் கூறியதாவது,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டபாய ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் புத்தளம் மாவட்டத்தில் பாரிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எமக்கு எதிராக வாக்களித்தவர்கள் அல்லது பிரதேச ரீதியாக , இன ரீதியாக பிரித்துப் பார்த்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தேசிய ரீதியில் செயற்படும் பிரதான அரசியல் கட்சி என்பதால் இன, மத பேதங்கள், கட்சி வேறுபாடுகள் இன்றி நாட்டில் பாரிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்திருந்தோம். இப்போதும் எவ்வித குறைவுமின்றி அதே பணிகளை முன்னெடுத்து வருகிறோம். எதிர்காலத்திலும் அவ்வாறான பணிகளையே முன்னெடுக்கவும் திட்டமிட்டிருக்கிறோம்.

புதிதாக அமையப் பெறும் எமது புதிய அரசாங்கத்தில் பாரிய திட்டங்களை வகுத்திருக்கிறோம். விவசாயிகள், மீனவர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள், வியாபாரிகள் என அனைவருக்கும் தொழில் ரீதியாக சிறந்த பாதுகாப்பை வழங்கவும், அவர்களை ஊக்குவிக்கவும், இளைஞர், யுவதிகளுக்கு நல்லதொரு எதிர்காலத்தை பெற்றுக்கொடுக்கவும் எண்ணியுள்ளோம்.

நாட்டின் பொருளாதாரத்தில் எழுச்சியை உண்டாக்கி, உற்பத்திகளை அதிகரித்து, தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றி அமைப்பதற்கும், இந்த நாட்டில் வாழும் மக்கள் எதிர்நோக்கி வரும் கஷ்டங்களை குறைத்து, நாட்டு மக்கள் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழும் ஒரு சிறந்த சூழலை எமது புதிய அரசாங்கத்தில் உருவாக்கவும் அதற்கு தேவையான திட்டமிடல்களையும் செய்துள்ளோம் என்றார்.

## குழு மோதல்; ஒருவர் பலி மூவர் படுகாயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் பரசன்கஸ்வெவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட காட்டுக்குளியங்குளம் பகுதியில் வீடொன்றில் இரு குழுக்களுக்கிடையில் (02) ஏற்பட்ட மோதலின் போது ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அநுராதபுரம் தானாயம்குளம் பகுதியைச் சேர்ந்த எச்.எம்.லொக்கா என்றழைக்கப்படும் ஹேரத் முதியன்சலாகே சுமேத ஹேரத் என்ற 37 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் நீண்டதனால் குறித்த பகுதியைச் சேர்ந்த இரு குழுக்கள் தடி மற்றும் கூரிய ஆயுதங்களை கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 37 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பான்கடவல பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 37 வயதுடைய மூவர் இந்த தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



## ஜனாதிபதி ரணிலுக்கு வாக்களிப்பதே புத்திசாலித்தனமான தெரிவு

ஜனாதிபதி தேர்தலில் இம்முறை சுயாதீன வேட்பாளராக களமிறங்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்து ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

நாட்டு நிர்வாகத்தில் முன் அனுபவம் இல்லாத கற்றுக்குட்டிகளை தெரிவு செய்வது முன்னர் கோட்டாபய காலத்தில் நாடு பொருளாதார சீரழிவுக்குள் சிக்கி மக்கள் பசியும் பட்டினியும் அனுபவித்த கையறு நிலைக்குள் தள்ளிவிடுமென்பது சத்தியமான உண்மையாகுமென்று ஸ்ரீலங்கா சமத்துவ முன்னணியின் செயலாளர் இப்ரான்ஷா பௌமி தெரிவித்தார்.

முன்னர் கோட்டாபய நாட்டை பொறுப்பேற்று தனது பொறுப்பற்ற, தாறுமாறான ஆட்சி மூலம் நாட்டை சீரழித்து விட்டு "அரகலய" மக்கள் போராட்டத்திற்கு அஞ்சி நாட்டை விட்டு தப்பியோடியபோது சஜித், அநுர உட்பட யாருமே நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை. ஆனால் நியமன எம்.பி என்ற ஓர் ஆசனத்தை மட்டும் வைத்துக் கொண்டு துணிச்சலாக நாட்டை பொறுப்பெடுத்து எம்மை வாழ வைத்தவர் ரணில் விக்கிரமசிங்க என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆட்சி செய்வதில் அவருக்கு இருந்த முன் அனுபவம், இந்தியா, சீனா உட்பட பல மேற்கத்திய நாடுகளுடனும் அவருக்கு இருந்த இராஜதந்திர உறவுகள், அந்நாடுகளில் கூட்டிணைவில் உருவான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவை தாராளமாக நிதி உதவி செய்தமை போன்றவைகளால் அவர் ஆட்சி செய்த ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் எம்மை மூன்று வேளையும் சாப்பிட்டு நிம்மதியாய் உறங்க வைத்தார். இனி வரும் ஐந்தாண்டுகளிலும் இந்த நிம்மதி தொடர வேண்டுமானால், நாடு கடன் அரசியலில் இருந்து நாளடைவில் மீண்டு, ஓர் அபிவிருத்தி அரசியலை முன்னெடுக்க வேண்டுமானால் இதே தொடரில் இன்னுமொரு ஐந்தாண்டுகளுக்கு ரணிலிடம் நாட்டை ஒப்படைத்து பார்க்க வேண்டும்.

சஜித் பிரேமதாசவோ, அனுரகுமார திசாநாயக்கவோ ஆட்சிக்கு வந்தால் ஆட்சியை சீர் செய்து நடத்த அவர்களுக்கு ஐந்தாண்டுகள் போதாது. தலைமை ஏற்கும் ஆட்சி இயலில் அவர்கள் இப்போதுதான் நடைவண்டியில் நடைபயிலும் பாப்பாக்கள்! எனவே மீண்டும் காசுக்கு, பணத்துக்கு, பொருட்களுக்கு பஞ்சம் ஏற்படாதிருக்க ரணிலிடமே நாட்டை பொறுப்புக் கொடுப்போம் என்று பௌமி மேலும் தெரிவித்துள்ளார்.

## தொடர் பயிலரங்குகள் அக்டோபரில் ஆரம்பம்

தலைநகரில் இளம் கலை, இலக்கிய ஆர்வலர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு கடந்த 44 ஆண்டுகளாக கலை, இலக்கியப் பணியாற்றிவரும் புதிய அலை கலை வட்டம் இவ்வாண்டில் பயிலரங்குகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வரும் அக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் நடிப்பு பயிலரங்கம் மற்றும் மேடை, தொலைக்காட்சி நாடகங்களில் நடிக்க விரும்பும் ஆர்வலர்களை தேர்வு செய்யும் நிகழ்வை நடத்த உள்ளது.

இந்த ஒரு நாள் கருத்தரங்கில் பங்கு கொண்டு தமது நடிப்பு திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் நடிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெறவும் விரும்புவோர் உடன் இல. 075 4880172 என்ற வட்சப் இலக்கத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்







உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு,புதன்கிழமை(04)காலை கும்பாபிஷேக கர்மாரம்பம் விஸ்வசேன கணபதி வழிபாடு புண்ணியாகவாசனம் இடம்பெற்றது.இதன் போது பக்தர்கள் பலர் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொண்டனர். (உடப்பு குறூப் நிருபர்)

## உடப்பு கும்பாபிஷேகம் 8ஆம் திகதி; எண்ணெய்க்காப்பு 6ஆம் திகதி

(உடப்பு குறூப் நிருபர்)

வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்திய பாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் (2024.09.08)ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதியும் சுவாதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 07.14மணி முதல்08.32 மணிவரையுள்ள சுப வேளையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது. இதன் முதல் நிகழ்வாக அம்பாளுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வுகள் நாளை (06.09.2024) வெள்ளிக்கிழமை காலை 08.30 மணி முதல் நாளை மறுதினம் (07.09.2024) சனிக்கிழமை பி.ப.3.00மணி வரையும் நடைபெறவுள்ளது. எனவே பக்தர்கள், எண்ணெய்க்காப்பு நிகழ்வில் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு இந்து ஆலய பரிபாலன சபையினரும், இந்து ஆலய திருப்பணிச் சபையினரும் வேண்டுகின்றனர்.

# சேவையாளர்கள் கௌரவிப்பு





















ருஸைக் பாரூக்

Grand Zenith Banquets மண்டவம் திறப்பு விழா மற்றும் கௌரவிப்பு, விருதுகள் வழங்கும் வைபவம் கொழும்பு 10, மாளிகாவத்தை பிரதீபா மாவத்தையில் அதன் தலைவர் மற்றும் நிர்வாக பணிப்பாளர் ஏ.எச்.எம். மாஹிர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

Grand Zenith Banquets மற்றும் Zeenath Trading ஆகிய நிறுவனத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியோர் இதன்போது விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

தலைவர் மற்றும் நிர்வாக பணிப்பாளர் மயாஸ் மாஹிர் ஆகியோர் விருதுகள் வழங்கி வைத்தனர்.

மேலும் ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எம்.எம்.ஏ. கபூர், Colombo Times பிரதம ஆசிரியரும் Arab News Colombo நிருபருமான மொஹமட் ரசூல்தீன், இலங்கை இஸ்லாமிய நிலையத்தின் தலைவரும் மற்றும் முன்னாள் சவுதி அரேபியா தூதுவருமான ஹுசைன் மொஹமட் மற்றும் மாளிகாவத்தை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பரிபாலன சபையின் தலைவர் டாக்டர் ரஸீன் அன்வர் ஆகியோர் இவ் விழாவில் விருதுகளை வழங்கி வைத்தனர்.

பெருந்திரளான வர்த்தக சமூகத்தினர், சமயப் பிரமுகர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்கள், குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## கேள்வி அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை அவிசாவளை

**அழுக்குத் துணிகளை சலவை செய்தல் - 2024**

மேல் மாகாண சபைக்குச் சொந்தமான அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையின் அழுக்குக் துணிகளை சலவை செய்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்களை 2024.09.06 முதல் 2024.09.26 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை காசாக ரூ. 1500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை அவிசாவளை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரின் பெயரில் செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளுடன் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென) வேறு வேறு உறைகளில் இட்டு பொறியிட்டு 2024.09.27 மு.ப. 10.00 இற்கு முன்பு இவ் வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத்தபாலில் "தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, அவிசாவளை" என்ற முகவரிக்கு அனுப்பலாம் கேள்வி உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அழுக்குத் துணிகளை சலவை செய்தல் - 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2024.09.27 மு.ப. 10.00 இற்கு முடிவடைவதுடன் அவற்றை திறத்தல் 2024.09.27 மு.ப. 10.00 இற்கு இவ் வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் இடம்பெறுவதுடன் மேற்படி நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**அவிசாவளை**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**இணைப்பாக்கம் உள்ளடங்களான அபிவிருத்தி செயற்றிட்டம்.**

**விலைமனுக்கோரல்**

| ஒப்பந்த இல. | ஒப்பந்த பெயர் |
|---|---|
| LK-RDA-446907-CW-RFB | மேல்மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் சீதாவக்க பிரதேச செயலகத்தின் கீழுள்ள 17.5 கி.மீ கிராமிய வீதிகளின் புனர்நிர்மாணம்/ மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு. |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 03 செப்டெம்பர் 2024 தொடக்கம் 03 ஒக்டோபர் 2024 வரை www.tda.gov.lk & www.mohsl.gov.lk என்ற RDA இன் இணையத்தளங்களைப் பார்வையிடுவதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை சார்பாக
அமைச்சக கொள்முதல் குழு.

## திருத்தம்

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

**பொதுநிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்
**PROJECT ID : P 163305**
**மட்டக்களப்பு மாவட்டம், கிழக்கு மாகாணம்**

மேலேயுள்ள செயற்றிட்டம் தொடர்பாக 2024 ஓகஸ்ட் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று டெயிலி நியுஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்விகளுக்கான அறிவித்தல் அழைத்தலுக்கான திருத்தமான ''காத்தான்குடி பொதுமக்களுக்கான விளையாட்டு மைதானத்திற்கு 1000w லெட் பேரொளி மின்விளக்குகளை கொள்வனவு செய்தல்'' தொடர்பான பின்வரும் திருத்தமானது இத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

01. கேள்வியின் பெறுகைத் திகதியானது 2024.09.06 ஆம் திகதியன்று பி.ப. 3 மணியிலிருந்து 2024.09.11 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
02. கேள்வியின் சமர்ப்பித்தல் திகதியானது 2024.09.06 ஆம் திகதியன்று பி.ப. 3 மணியிலிருந்து 2024.09.12 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.
03. கேள்வியின் செல்லுபடியாகும் கால எல்லையானது 2024.11.28 ஆம் திகதி வரையுமாகும்.
04. கேள்விப்பிணையின் செல்லுபடியாகும் கால எல்லையானது 2024.12.26 ஆம் திகதி வரையுமாகும்.

**2024.08.23 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட மேலேயுள்ள 'கேள்விகளுக்கான அழைத்தலிலுள்ள ஏனைய உறுப்புரைகள் மற்றும் தேவைப்படுத்தல்களில் எந்தவொரு மாற்றமுமில்லை.**

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு,**
**உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்,**
**மட்டக்களப்பு மாவட்டம்.**
**05.09.2024**

## இலங்கை புகையிரத சேவைகள்

### விலைமனுக்கோரல் (IFB)

**M வகுப்புபில் 57 புகையிரத இயந்திர ஓட்டுநர் சிற்றறை வசதியினை மேம்படுத்துவதற்கான கொள்முதல்**

**IFB No - SRS/F. 8027**

1. இலங்கை புகையிரத சேவை சார்பாக திணைக்கள கொள்முதல் குழு தலைவரினால் M வகுப்புபில் 57 புகையிரத இயந்திர ஓட்டுநர் சிற்றறை வசதியினை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)
3. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.09.05 ஆம் திகதி முதல் 2024.10.03 ஆம் திகதி வரை வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை செய்ய முடியும்.

பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),
புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,
ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி இல : +94 (11) 2438078, அல்லது +94 (11) 2436818
தொலைநகல் இல : +94 (11) 2432044
மின்னஞ்சல் : dgmp@railways.gov.lk , pot1@railway.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

4. ஏலதாரர், கனரக வாகனத்தின் உட்புற கட்டுமானத்தை நிரூபிக்கும் திறன் மற்றும் அவரது திறனை நிரூபிக்கும் ஆவண ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் ISO 9001:2008 தர சான்றிதழ் அல்லது அதற்கு சமமானவை ஏலத்திற்கு தகுதியானவை.
5. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஆங்கில மொழியிலான ஏல ஆவணங்களின் முழுமையான தொகுப்பை, பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்), ரயில்வே கொள்முதல் துணைத் திணைக்களம், ஓல்காட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை என்ற முகவரிக்கு எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது 2024.09.05 ஆம் திகதி முதல் 2024.10.03 ஆம் திகதி பி.ப.3.00 மணி வரை திருப்பிச் செலுத்தப்படாத கொள்முதல் கட்டணமாக ரூ.30,650.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக ரூ.1,000,000.00 இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. ஏலத்திற்கு முந்திய கூட்டம் 2024.09.19 ஆம் திகதி அன்று மு.ப.10.00 மணிக்கு தெமட்டகொடை பிரதான இயந்திர பொறியியலாளர் (Motive power) உப திணைக்களத்தில் நடைபெறும்.
8. மனுக்கள் 2024.10.04 ஆம் திகதி பி.ப.02.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கீழே உள்ள முகவரியில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,
இலங்கை புகையிரத சேவைகள்,
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்.
கொள்முதல் இல. **SRS/F.8027**

SELACINE

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## கேள்விகோரல்

### பதுளை பிரதேச சபை

பதுளை பிரதேச சபையின் பஸ்ஸர வீதி 2ம் கட்டை கிராமிய வர்த்தக கட்டிடத்தின் 02 கடை அறைகள் 25 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்படும்.

**கேள்வி ஆவணங்களை விநியோகித்தல் :**
2024.09.05 முதல் 2024.09.26 பி.ப. 3.00 வரை பதுளை பிரதேச சபையில்

**கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் :**
2024.09.27 பி.ப. 12.30 வரை

**கேள்விகள் திறத்தல்**
2024.09.27 பி.ப. 12.45 இற்கு

**தொடர்புகள் - பொது (055-2226273) / LDSP விடய அதிகாரி (077-8197972)**

**சபை செயலாளர், பிரதேச சபை, பதுளை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### பிரதேச சபை - பிபிலை

1. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பிபிலை பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. இந்தப் பெறுகை ''1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டம்'' விதிகள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. அதனால் விலைமனுதாரர்கள் மொத்தப் பெறுமதி ஐந்து மில்லியன் இலங்கை ரூபாவிற்கு (5,000,000.00 இல. ரூபா) மேற்பட்டால் மட்டும், கூறப்பட்ட சட்டத்தின் IIஆம் பிரிவின் விதியின் பிரகாரம் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழை (FORM PCA 03) சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk/)
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக இயைபுடைய துறையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் விலைமனு ஆவணத்தின் 04ஆம் பிரிவில் உள்ள தகுதித் தகவல்கள் மற்றும் 05ஆம் பிரிவிலுள்ள அட்டவணை (விலைக்கோரல் தரவு / ஒப்பந்தத் தரவு) என்பன உள்ளடங்கும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வார நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பிபிலை பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
7. மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 2024-09-05ஆம் திகதி முதல் 2024-09-25ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பிபிலை பிரதேச சபையிலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை 2024-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பிபிலை பிரதேச சபைக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடன் திறக்கப்படும்.
9. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-09-13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிபிலை பிரதேச சபையில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | வேலையின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (இல. ரூபா மில்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைமனுக்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| பிபிலை பிரதேச சபை | BBPS/W/ 2024/01 | பிபிலை வாரச் சந்தையில் மொத்த விற்பனையாளர்களுக்கான கடைகளை நிர்மாணித்தல் | 7.6 | 60 நாட்கள் | C6 மற்றும் C7 - கட்டிடம் | 76,000.00 | 2025-01-09ஆம் திகதி வரை | பிபிலை பிரதேச சபை |

**செயலாளர்,
பிபிலை பிரதேச சபை, பிபிலை.
2024-09-05.**

## காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தம்) சட்ட இல: 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல .: 2011/21
காணி அமைச்சின் குறிப்பு இல :
4-3/6/2011/HW/98

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 03 ஜீலை 2024 ஆம் திகதிய 2391/21 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111ஐப் பார்க்கவும்

**அட்டவணை**

மாவட்டம் : ஹம்பாந்தோட்டை

பிரதேச செயலாளர் : ஹம்பாந்தோட்டை

கிராம சேவகர் : இல. 96, கட்டன்வெவ

வரைபட இல : இறுதி ஸ்தல வரைபட இல. 4 , பிற்சேர்க்கை இல. 328, தாள் இல. 729

துண்டு இல : ஈ 4833 - ஈ4718 (175 துண்டுகள்)

**கௌசல்யா கலப்பதி
பிரதேச செயலாளர்
ஹம்பாந்தோட்டை**

**பிரதேச செயலகம்
ஹம்பாந்தோட்டை
03.09.2024**

## விலை மனுகோரல் (திருத்தம்)

### மாவட்ட செயலகம் - புத்தளம்

2024.09.03 அன்று தினகரன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட விலைமனு கோரல் சம்பந்தமாக அதன்படி, தொடர் இலக்கம் 1, 2, 4, 5 மற்றும் 6 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கருத் திட்டங்களுக்கான சீடா பதிவு C 6 மற்றும் C 5 மட்டும் எனவும், தொடர் இலக்கம் 3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டத்திற்கான சீடா பதிவு C 5 மற்றும் C 4 மட்டும் எனவும் திருத்தப்பட வேண்டுமென விநயமுடன் அறியத் தருகிறேன்.

**2024.09.03**

**எச்.எம்.எஸ்.பி. ஹேரத்
தவிசாளர் / மாவட்ட செயலாளர்
திணைக்கள பெறுகை சபை
நிர்வாக மாவட்டம், புத்தளம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### கல்வி அமைச்சு

**மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியில் கூரை மீது சூரிய ஒளி மின்னழுத்த அமைப்புகளின் (Solar PV Systems) வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்புக்கான பெறுகை**

**IFB : ED/07/101/15/SF/2023/SP-02**

1. குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட அனுபவம் ஒன்றை பெற்றுள்ள பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மொரட்டுவை, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியில் கூரை மீது சூரிய ஒளி மின்னழுத்த அமைப்புகளின் (Solar PV Systems) வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்புக்கான பெறுகைக்காக கல்வி அமைச்சு, செயலாளர் சார்பில் அமைச்சு பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அங்கீகார கடிதத்தின் திகதியில் இருந்து 4 வார காலத்தில் விநியோகிக்க எதிர்பார்க்கப்படுகிறது. வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்பு வழங்குநரால் மேற்கொள்ளல் வேண்டும். பின்வரும் உருப்படிக்காக விலைமனுதாரர்கள் கூறுவிலையிடல் வேண்டும் என்பதோடு அனைத்து விலைமனுக்களும் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

| கூறு | கூரை மீது சூரிய ஒளி மின்னழுத்த அமைப்புகளின் (Solar PV Systems) வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்புக்கான பெறுகை | |
|---|---|---|
| | பாடசாலை பெயர்/ இடம் | விலைமனு பிணை தொகை (ரூபா) |
| கூறு A | மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி | 225,000.00 |
| கூறு B | கொழும்பு றோயல் கல்லூரி | 225,000.00 |

விலைமனுதாரர்கள் விலைமனுவுடன் சேர்த்து தரப்பட்ட வடிவத்திற்காக விலைமனு பிணைகளை வழங்குதல் வேண்டும்.

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கல்வி அமைச்சு, “இசுருபாய”, 05ஆவது மாடி, பெறுகை பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொலைபேசி: 011-2785573 அல்லது 0112785141 - 50 நீடிப்பு 1530) என்பதோடு 2024 செப்டெம்பர் 25 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. மேலுள்ள பெறுகை தொடர்பில் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 செப்டெம்பர் 12 ஆம் திகதி பி.ப. 1.00க்கு கல்வி அமைச்சின் 05 ஆவது மாடி, பெறுகை பிரிவில் இடம்பெறும்.
5. ஆவணம் ஒன்றுக்காக 8,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024 செப்டெம்பர் 25 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து பெறுகைப் பிரிவில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். (கட்டணம் செலுத்தும் முறை ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்).
6. விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 26ஆம் திகதி மு.ப. 11.30 அல்லது அதற்கு முன்னர் பெறுகை பிரிவு, 05ஆவது மாடி, கல்வி அமைச்சு, “இசுருபாய”, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பித் தரப்படும். விலைமனுக்கள் மூடப்பட்ட பின் மேல் தரப்பட்டுள்ள முகவரியில் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியில் கூரை மீது சூரிய ஒளி மின்னழுத்த அமைப்புகளின் (Solar PV Systems) வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்புக்கான பெறுகை IFB: ED/07/101/15/SF/2023/SP-02” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகார இராஜாங்க அமைச்சு

### உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்
### செயற்றிட்ட அடையாளம்: P 163305
### கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொருள் வழங்கல்களின் கொடுப்பனவைச் செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. கிண்ணியா நகர சபையின் சார்பில் உள்ளூராட்சி அதிகாரசபையின் பெறுகைக் குழு தலைவர் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
4. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் IIIஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு தரவுத் தாளில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கிண்ணியா நகர சபையின் செயலாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்கள் அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கிண்ணியா நகர சபைக்கு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-09-05ஆம் திகதி முதல் 2024-09-25ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. 2024-09-26ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் செயலாளர், கிண்ணியா நகர சபை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக ஏற்படும் ஏதேனும் கிரயம் அல்லது செலவுகளுக்கு கொள்வனவாளர் பொறுப்பேற்கமாட்டார்.
10. ஒப்பந்தத்தைக் கையளித்தல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரங்கள் மற்றும் விலைக்கோரல் இல. | பெறுகை நிறுவனத்தின் பெயர் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ. பே. இலக்கம் | விலை மனு ஆவணத்தின் விலை (ரூபா) | தேவையான விலைமனுப் பிணை முறி | | விலை மனு செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | விலை மனுப் பிணை முறி தொகை (ரூபா) | செல்லுபடிக் காலம் | |
| கிண்ணியா நகர சபை | கிண்ணியா நகர சபையில் திண்மக் கழிவு முகாமைத்துவ பிரிவை மேம்படுத்துதல் - டிராக்டர் வழங்குதல் EP/TR/KIUC/LDSP/ BT4/2024/G/01 | கிண்ணியா நகர சபை, கிண்ணியா, திருகோண மலை | கிண்ணியா நகர சபை, கிண்ணியா, திருகோணமலை 026-2236172/ 026-2236233 | 2,500.00 | 48,000.00 | 2024-12-26 வரை | 2024-11-28 வரை |
| கிண்ணியா நகர சபை | கிண்ணியா நகர சபையில் திண்மக் கழிவு முகாமைத்துவ பிரிவை மேம்படுத்துதல் - டிரெய்லர் வழங்குதல் EP/TR/KIUC/LDSP/ BT4/2024/G/02 | கிண்ணியா நகர சபை | கிண்ணியா நகர சபை, கிண்ணியா, திருகோணமலை 026-2236172/ 026-2236233 | 1,500.00 | 10,000.00 | 2024-12-26 வரை | 2024-11-28 வரை |

**உள்ளூராட்சி நிறுவனம்,
பெறுகைக் குழு,
கிண்ணியா நகர சபை,
கிண்ணியா.**

# afc தங்கக் கடன் சேவை தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 30.06.2024 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் திகதியில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

## தங்கக் கடன் சேவை நிலையங்கள்

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 26-09-2024 | அளுத்கம, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், அதுருகிரிய, அவிசாவளை, பதுளை, பலாங்கொடை, மட்டக்களப்பு, பொகவந்தலாவ, பொரளை சுப்பர், சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், தம்புள்ளை, தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய, கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா, கம்பளை, கணேமுல்ல, ஹட்டன், ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரக் கிளை, கடவத்தை, கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, களுத்துறை, களுவாஞ்சிகுடி, கேகாலை, களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட, கிரிந்திவெல, கொஹுவல, குளியாப்பிட்டிய, குருமன்காடு, மஹரகம, மஹியங்கனை, மாலபே, மன்னார், மாத்தளை, மாத்தறை, மதவாச்சி, மொனராகலை, முழங்காவில், நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ, நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர, பசறை, பிலியந்தலை, பருத்தித்துறை, பூகொடை, புதுக்குடியிருப்பு, புத்தளம், புத்தளம் 2, ராகலை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, தலவாக்கலே, தம்புத்தேகம, திருநெல்வேலி, திருகோணமலை, திருகோணமலை-2, உடப்புவ, வவுனியா, வார்ட் பிளேஸ், வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ, கல்முனை, சிலாபம் | இந்த ஏலம் ராஜகிரியவில் உள்ள அலையன்ஸ் ஃபைனான்ஸ் பிஎல்சி எண். 722 கோட்டே வீதியின் வளாகத்திலும் அந்தந்த கிளை வளாகத்திலும் தனித்தனியாக நடைபெறும். |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டுவர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோபி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றினைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

## படிவம் மூன்று (விதி-7)
## மனுவின் விளம்பரம்

வழக்கு இல- CHC 56/2024/CO
தன்மை - முடிவுறுத்தல்
நடபடிமுறை - வழமை

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் குடியியல் நியாயாதிக்கத்திற்கு உட்பட்டது.

இலக்கம் 65 லலானி கட்டிடம், நீர்கொழும்பு வீதி ஜாஎல என முகவரியில் அமையப்பெற்றுள்ள டைல்ஸ் கலெக்சன் (தனியார்) நிறுவனத்தினை முடிவுறுத்தல் தொடர்பான விண்ணப்பம்.

**திரு யோகேந்திர மாலு ராஜ் அண்ட் கம்பெனி**

எனும் நாமத்திலும் வடிவத்திலும் இடம்பெறுகின்ற வர்த்தகத்தின் கூட்டுடமையாளர்
இலக்கம் 15-16 கலக்சி வர்த்தக நிலையம், முதலாம் மாடி ஜவகர் வீதி ராஜ்கோட்,
360001, குஜராத் இந்தியா
தனது பதிவு பெற்ற அட்டோனி தத்துவக்கார் மூலம்தோன்றுகிறார் முஹம்மது மர்சூக் றிகாஸ்,
இலக்கம் 65/39 பீரிஸ் வீதி
கல்கிசை

**மனுதாரர்**

**எதிர்**

**டைல் கலெக்சன் (தனியார்) நிறுவனம்**

இலக்கம் 65 லலானி கட்டிடம்
நீர்கொழும்பு வீதி, ஜாஎல.
முடிவுறுத்தப்பட முனையும் நிறுவனம்

டைல்ஸ் கலெக்சன் (தனியார்) நிறுவனம் இலக்கம் 65 லலானி வீதி நீர்கொழும்பு எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ள இந் நிறுவனத்தினை முடிவுறுத்துவதற்கான மனு ஒன்று கொழும்பு மாகாண மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்குறித்த மனுவினை 28.09.2024 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார். ஆகவே மேற்படி நிறுவனத்தின் ஏதேனும் கடனாளி அல்லது பங்களிப்பாளர் மேற்குறிப்பிட்ட மனு தொடர்பாக கட்டளை ஒன்று வழங்கப்படுவதனை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பினால் இம்மனு தொடர்பான விசாரணையின் போது தானாகவோ அல்லது தனது சட்டப் பிரதிநிதி ஊடாகவோ தோன்ற முடியும்.

அதேவேளை மனுவின் பிரதியானது விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பான விதிமுறைகளுக்கு உட்பட்ட வகையில் அனைத்து கடனாளி மற்றும் பங்காளர்களுக்கு வழங்கப்படும்.

நீத்திக்க பாட்னர்ஸ் (சட்டத்தரணிகள்)
இல.21, பெல்மன்ட் வீதி
கொழும்பு-12

**குறிப்பு** - எவரேனும் ஒருவர் மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக மன்றில் தோன்ற விருப்பம் கொண்டிருந்தால் அத்தகைய விருப்பத்தினை நீத்திக்க பாட்னர்ஸ் (சட்டத்தரணிகள்) எனும் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்க வேண்டும் அவ் அறிவித்தலானது அத்தகைய நபரின் பெயர் விலாசம் அல்லது சட்ட நிறுவனம் எனின் அதன் பெயர் விலாசம் என்பனவற்றினை குறிப்பிட்டு நேரடியாக அல்லது பிரதிநிதி மூலமாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். தபால் மூலம் அனுப்புவதாயின் 27.09.2024ம் திகதி மாலை 6.00 மணிக்கு முன்னர் சேர்ப்பிக்கப்படும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

## பெறுகை அறிவித்தல்

### 65kW நிகர மானி முறையின் கீழ் சூரிய சக்தி அமைப்பை வழங்கல்

**பெறுகை இலக்கம்: GPS/DS/06**

1. கம்பஹா பிரதேச சபைக்காக என்னால் வலைப்பின்னல் நிகர கணக்கியல் சூரிய சக்தி அமைப்பை திட்டமிட்டு எடுத்து வந்து வழங்கி, நிலைப்படுத்தி, பராமரிப்புடன் நடத்திச் செல்வதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேல் சூரிய சக்தி அமைப்பை திட்டமிட்டு, எடுத்து வந்து வழங்கி, நிலைப்படுத்தி, செயற்படுத்தி, பராமரிப்புடன் நடத்திச் செல்வது தொடர்பில் அனுபவம் பெற்ற நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
3. தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
4. அனைத்து விலைமனுதாரர்களும் 2024.09.27 ஆம் திகதி தொடக்கம் 2024.11.01 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கை வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட, நிபந்தனையற்ற, உடன் பணம் பெற முடியுமான 50,000 ரூபா பெறுமதியான விலைமனு பிணை ஒன்றை "செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட, பணிகள், செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட" என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
5. பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் அபிவிருத்தி பிரிவுக்கு வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00க்கு இடையே வருகைதந்து விலைமனு ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும் என்பதோடு மேலதிக விபரங்கள் அல்லது தெளிவினை பெறுவதற்காக பணி அதிகாரியுடன் 0332220145 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடே தொடர்புகொண்டு அல்லது Gampahapradeshiyasabha@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
6. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கு பணமாக மீளளிக்கப்படாத 1,000 ரூபா கட்டணத்தை செலுத்தி ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான ஒரு விலைமனு அழைப்பு ஆவணத்தை செயலாளர், பிரதேச சபை, கம்பஹா என்ற முகவரிக்கு வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுதப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்து 2024.09.06 ஆம் திகதி தொடக்கம் 2024.09.26 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
7. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024.09.27 ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு "விலைமனு ஆவணத்தை" கடித உறையில் இட்டு அந்தக் கடித உறையின் மேல் மூலையில் "பெறுகை இலக்கம் மற்றும் வலைப்பின்னல் நிகர கணக்கியல் சூரிய சக்தி அமைப்பு" என்று குறிப்பிட்டு முத்திரையிட்டு "செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட, பணிகள், செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கம்பஹா பிரதேச சபை, தலைமை அலுவலகத்தின், செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும்.
8. விலைமனுக்கள், அந்த விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் வருகை தந்திருக்கும் விலைமனுதாரர்கள்/ பிரதிநிதிகள் முன்னிலையில் கம்பஹா பிரதேச சபையில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு இந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும்.
9. முழுமைபெறாத மற்றும் தாமதித்து கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு, விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச சபை பெறுகைக் குழு வசமானது.

**பிரதேச சபை செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரம், பணி, செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட.**
**2024.09.04**
**தொ. இலக்கம்: 0332220145 தொலைநகல்: 0332220144**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## சுகாதார சேவைகள் திணைக்களம்
## மகளிர்கான ஜேர்மன் இலங்கை நட்புறவு வைத்தியசாலை

### மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்கான கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள மருத்துவ உபகரணங்களுக்காக தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை குறியிடப்பட்ட கேள்விகளை காலி, கராப்பிட்டிய மகளிர்கான ஜேர்மன் இலங்கை நட்புறவு வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| Name of Item | Qty | Equipment | Date and Time of issuing Tender forms | Closing date and Time |
|---|---|---|---|---|
| CTG Machine | 29 | Medical | From **2024.09.06** to **2024.09.26** between 9 am & 3 pm | **2024.09.27 at 10 am** |
| Hand Doppler | 05 | | | |
| Sphygmomanometer | 20 | | | |
| Examination Lamp | 05 | | | |
| Spot Lamp | 20 | | | |
| Nebulizer | 02 | | | |
| Liquid Nitrogen Gun | 01 | | | |
| Incubator Infant | 05 | | | |
| Phototherapy Units D/S | 08 | | | |
| Phototherapy Units S/S | 08 | | | |

01. காலி, கராப்பிட்டிய மகளிர்கான ஜேர்மன் இலங்கை நட்புறவு வைத்தியசாலையின் கணக்காளரினால் 2024.09.06 ஆம் திகதியிலிருந்து 2024.09.26 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் செயற்பாட்டின் மூலமாக நடத்தப்படும்.

02. மேலே குறிப்பிட்டுள்ள உபகரணங்களின் உற்பத்தியாளர்களின் நியமிக்கப்பட்ட உள்ளூர் முகவர்கள் மாத்திரமே கேள்விகளை சமர்ப்பிப்பதற்கான தகைமையை பெற்றுக் கொள்வர்.

03. கேள்விப் படிவங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு இரு பிரதிகளில் கீழே குறிப்பிட்டுள்ளவற்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    - o வியாபார பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதி.
    - o விண்ணப்பதாரி உள்ளூர் முகவரென நியமனம் பெற்றுள்ளாரென வெளிநாட்டு வியாபார அதிகாரமுள்ளவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது ஆவணம்.
    - o ஒவ்வொரு மருத்துவ உபகரணத்திற்கும் NMRA இனால் வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதி.
    - o காலி, கராப்பிட்டிய மகளிர்க்கான ஜேர்மன் இலங்கை நட்புறவு வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமான 3000 ரூபாவை ரொக்கப் பணத்தில் அல்லது ஒவ்வொரு கேள்விக்குமான தொகையை செலுத்தியதற்கான ஆவணத்தின் பிரதி.
    - o கேள்விப்பிணையின் 2% ஐ வங்கி உத்தரவாதமாக உரிமமுள்ள வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொண்டதும் கேள்விகளை மூடும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

04. கேள்விக்கோரல்கள் 2024.09.27 ஆம் திகதியன்று மு.ப.10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் பதிவுத் தபால் மூலமாக அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான சமர்ப்பித்தல்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. காலி, கராப்பிட்டிய மகளிர்கான ஜேர்மன் இலங்கை நட்புறவு வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் 2024.09.27 ஆம் திகதியன்று மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கேள்விகளை திறத்தல் நடைபெறும்.

05. மேலதிக விபரங்களை காலி, கராப்பிட்டிய, மகளிர்கான ஜேர்மன் இலங்கை நட்புறவு வைத்தியசாலை பணிப்பாளர்/கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல.: 0912222261
தொலைநகல்: 0912232088

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மகளிர்கான ஜேர்மன் இலங்கை நட்புறவு வைத்தியசாலை,**
**கராப்பிட்டிய,**
**காலி.**

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

பின்வரும் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். பின்வரும் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் 2024-09-05ஆம் திகதி முதல் 2024-09-25ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு (மூலதன வேலைகள்) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024-09-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

விலைமனு ஆவணங்களை மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் (மூலதன வேலைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| தொ. இல. | திட்டம் | அண்ணளவான திட்டச் செலவு (ரூபா) | ஆகக் குறைந்த தகைமை மற்றும் விசேடத்துவம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | கடந்த ஐந்து வருடங்களில் செய்துள்ள நிர்மாணப் பணிகளின் வருடாந்த சராசரி அளவு | இதனை யொத்த வேலைகளில் அனுபவம் (கடந்த 10 வருடங்களில்) | கடன் வசதிகள் | விலைக்கோரல் பிணை முறி மற்றும் செல்லுபடிக் காலம் | நிர்மாணக் காலம் (நாட்கள்) | விலைக் கோரல் முன்னோடிக் கூட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், சமூக விஞ்ஞானம் மற்றும் மானுடவியல் பீடம், மாணவர் நிலையத்தின் 2ஆம் மாடியில் PGDE நிகழ்ச்சித் திட்டத்திற்கான பட்டப் பின்படிப்பு பிரிவை நிர்மாணித்தல். (RJT/CW/2024/14) | 19.50 மில். | C5 அல்லது C6 கட்டிட நிர்மாணங்கள் | 5,000.00 | 30.0 மில். | 16.0 மில். | 6.0 மில். | *விலைக்கோரல் பிணை முறி வங்கி- 195,000.00 காசு - 97,500.00 09.01.2025 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுவின் செல்லுபடிக் காலம் 12.12.2024 | 180 | 19.09.2024 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| 02 | மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் ரம்பேவ வளவில் 02 எண்ணிக்கையான இரட்டை விடுதிகளின் (Block 01 & 02) மிகுதி வேலைகள் (RJT/CW/2024/09) | 32.0 மில். | C5 அல்லது C4 கட்டிட நிர்மாணங்கள் | 7,500.00 | 48.0 மில். | 25.0 மில். | 10.0 மில். | *விலைக்கோரல் பிணை முறி வங்கி- 320,000.00 காசு - 160,000.00 23.01.2025ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுவின் செல்லுபடிக் காலம் 26.12.2024 | 180 | 19.09.2024 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |

* விலைக்கோரல் பிணை முறியை இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம்.

நகல் பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக 2024-09-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடத்திலுள்ள 2ஆம் மாடி, பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம்'' என்பன தலைப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடன் திறக்கப்படும்.

மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களுக்கு விலைமனுதாரர்கள் **025 - 2266311** எனும் தொலைபேசி ஊடாக சிரேஷ்ட உதவிப் பதிவாளரை (மூலதன வேலைகள்) அல்லது **025 - 2266787** எனும் தொலைபேசி ஊடாக பல்கலைக்கழகத்தின் வேலை பொறியியலாளரைத் தொடர்புகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**
**2024-09-05.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# பெறுகை அறிவித்தல்

பன்னல பிரதேச சபைக்குச் சொந்தமான வார சந்தைகள், மீன் கடை, இறைச்சிக்கடை, பொது மலசலக்கூடம் மற்றும் ஏனைய சொத்துக்களை 2025.01.01 முதல் 2025.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் -**
**2024.09.06 முதல் 2024.09.30 பி.ப. 2.00 வரை**

**கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் -**
**2024.10.01ம் திகதி பி.ப. 2.00 வரை**

**கேள்விப் பத்திரங்கள் திறத்தல் -**
**2024.10.01 பி.ப. 2.30 இற்கு**

கேள்வி விண்ணப்பங்கள் பன்னல பிரதேச சபை தலைமையகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அதனுடன் பெற்றுத் தரப்படும் கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக குறித்த கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டியதுடன். இதுபற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் தொ.பே. இலக்கங்களில் விசாரித்து அறிந்துகொள்ளலாம்.

**தொ. பே. இலக்கம் : 037-2246069 / 037-2246442**

**ஜே.ஏ.எஸ். ஜயசிங்க**
**செயலாளர்,**
**பிரதேச சபை - பன்னல**

## பிழை திருத்தம்

பிஸ்கல் ஏலத்தில் விற்றல் பற்றிய அறிவித்தல் அத்தனகல்ல மாவட்ட நீதிமன்றத்தில் சிவில் வழக்கு விதிமுறைக் கோவையின் 703 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

மேற்படி தலையில் கடந்த 2024 செப்டெம்பர் 4 புதன்கிழமை தினகரன் நாளிதழில் 20ம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் கீழ்க்காணும் பகுதி திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

**எதிராக**
இத்தமல்கொட அப்புஹாமிலாகே பிரபாத்
பாரமீ சமரசிங்ஹ,
இல. 68/சீ
மல்லேஹெவ,
கல்எளிய

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்**
**அத்தனகல்ல**

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவிற்கமைவாக கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயரானது மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.
கம்பனியின் முன்னைய பெயர் : நயிவ் ப்ளான்டேஷன் (பீவீடி) எல்டிட
கூட்டிணைப்புத் திகதி : 2018.03.23
கம்பனி இலக்கம் : PV131031
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 05, பிரிவன வீதி, பின்வத்த, பாணந்துறை
கம்பனியின் புதிய பெயர்: நயிவ் ப்ளான்டேஷன் (பீவீடி) எல்டிட
**கம்பனி செயலாளர்**

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவிற்கமைவாக கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயரானது மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.
கம்பனியின் முன்னைய பெயர் : வேநொக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
கூட்டிணைப்புத் திகதி : 2023.08.07
கம்பனி இலக்கம் : PV00281871
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 127, கிறீன் பார்க், வவுலுகல, மூணகம, ஹொரண
கம்பனியின் புதிய பெயர்: ஒடிசி ட்ரெயில்ஸ் டுவர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனி செயலாளர்**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## ஏல விற்பனை அறிவித்தல்

## இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு விற்பனை ஏல விற்பனைத் திகதி: 2024.09.06

**எனது இல.: LD/S/CICT/2024/08/PC-04**

கொழும்புத் துறைமுக பண்டாரநாயக்க உட்செல்லும் வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2024.09.06 ஆம் திகதியன்று மதியம் 2.30 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக CICT திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ள **Fresh Potato** ஐ அடக்கியுள்ள தடையகற்றப்படாத இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு அடைக்கப்பட்ட நான்கு கொள்கலன்கள் மேற்குறிப்பிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

2024.09.05 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பெசேவ மற்றும் **SSCL** உடனான 1,000 ரூபாவையும் மீளளிக்கப்படும் கட்டணமான 200,000,00 ரூபாவையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி 15 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏல விற்பனை ஆவணங்கள் மற்றும் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

2024.09.05 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் உரித்தான திறந்த வெளிகளில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகளை பரீட்சிக்கலாம்.

**www.slpa.lk** என்ற இணையத்தை மேலதிக விபரங்களுக்காக பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
**05.09.2024**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

# பெறுகை அறிவித்தல்

## முல்கிரிகல புராண ரஜமகா விகாரையில் நவீன வசதிகளுடன் கூடிய மலசலகூட முறைமையொன்றை நிறுவுதல்

**வீரகெட்டிய பிரதேச சபை**

**பெறுகை இலக்கம்: WPS/03/02/21/2024**

1. வீரகெட்டிய பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் முல்கிரிகல புராண விகாரையில் நவீன வசதிகளுடன் கூடிய மலசலகூட முறைமையொன்றை நிறுவுவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. இந்த விலைக்கோரல், தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
3. 2024 செப்டெம்பர் 05ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 24ஆம் திகதி வரையான காலத்தினுள் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் இதில் ஆர்வம் காட்டும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களை வீரகெட்டிய பிரதான அலுவலகத்தின் 0472246375 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு அல்லது weeraprasa@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு கடிதமொன்றை அனுப்புவதன் மூலம் அல்லது www.weeraketiya.ps.gov.lk எனும் வீரகெட்டிய பிரதேச சபையின் இணையதளப் பக்கத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | செயற்றிட்டத்தின் பெயர் | கிராம சேவகர் பிரிவு | விண்ணப்பிக்கக் கூடிய CIDA தரம் | பெறுமதி சேர் வரியின்றி மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (எதிர்பாராத செலவுகள் சகிதம்) | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | முல்கிரிகல புராண விகாரையில் நவீன வசதிகளுடன் கூடிய மலசலகூட முறைமையொன்றை நிறுவுதல் | முல்கிரிகல | C7 | 9330132.57 | 95000.00 | 2500.00 |

**டப். கே. சுரங்க,**
**செயலாளர்,**
**வீரகெட்டிய பிரதேச சபை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் (KMTTDP)**

## கண்டி தபால் நிலையத்திற்கு அருகில் உள்ள கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் (KMTT) நுழைவாயிலில் ரயில் பாதையின் மேல் மேம்பாலம் நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுக்கான ஆலோசனை சேவைகளைத் தேர்ந்தெடுப்பதற்காக (ஒட்டுமொத்தத் தொகை)

**முன்மொழிவிற்கான வேண்டுகோள் (RFP)**
**RFP இல. RDA /KMTT/FO/GOSL/FS/01**

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டத்தின் சார்பாக அமைச்சின் ஆலோசகர் கொள்வனவுக் குழுவின் (CPCM) தலைவர் மேற்கண்ட ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கான முன்மொழிவுகளை அழைக்கிறார். ஆர்வமுள்ள ஆலோசகர்கள், சேவையைச் செய்வதற்குத் தேவையான தகுதிகள் மற்றும் பொருத்தமான அனுபவத்தைப் பெற்றிருப்பதை நிரூபிக்கும் தகவலை வழங்க வேண்டும்.

ஆய்வின் நோக்கமானது மாற்று வழிகளுடன் முன்மொழியப்பட்ட மேம்பாலத்திற்கான வாகனத் தேவையுடன் பாதை உட்கட்டமைப்பு உட்பட விரிவான சாத்தியக்கூறு ஆய்வை நடத்தி வருகிறது. மேலும், சாத்தியக்கூறு ஆய்வுக்கான பொறியியல், போக்குவரத்து மற்றும் வாகன நெரிசல், பொருளாதாரம், தொல்பொருள், சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு அம்சங்களை இது உள்ளடக்கும். சேவைகள் பற்றிய மேலதிக விவரங்கள் குறிப்பு விதிமுறைகளில் (TOR) வழங்கப்பட்டுள்ளன.

**ஆலோசனை நிறுவனங்களின் தகுதி மூலப்பிரமாணங்கள்:**

1. 2014ஆம் ஆண்டிலிருந்து இலங்கை கம்பனிகள் பதிவாளரிடம் பதிவுசெய்து, கடந்த பத்து (10) ஆண்டுகளில் செயலில் உள்ள பலதரப்பட்ட தேசிய ஆலோசனை நிறுவனமாக இருக்க வேண்டும்.
2. 50 மில்லியன் இலங்கை ரூபாவிற்கும் அதிகமான மதிப்புள்ள இதனையொத்த சிக்கலான ஆலோசனை உட்பட கடந்த பத்து (10) ஆண்டுகளில் போக்குவரத்து அல்லது நெடுஞ்சாலைத் துறை திட்டங்களில் சாத்தியக்கூறு ஆய்வுகளில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் 90 மில்லியன் இலங்கை ரூபாவிற்கும் அதிகமான வருடாந்த ஆலோசனை புரள்வைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒரு ஆலோசனை நிறுவனமானது தரம் மற்றும் செலவு அடிப்படையில் முறையின் (QCBS) கீழ் தெரிவு செய்யப்படும் என்பதுடன் குறிப்பு விதிமுறைகளில் (TOR) நடைமுறைகள் விபரிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய நிலைமையில் தகுதி மூலப்பிரமாணங்களைக் கொண்டுள்ள ஆலோசனை நிறுவனங்கள் பிலிமத்தலாவ, எம்பிலிமீகம, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து RFP ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகின்றனர்.

2024 செப்டெம்பர் 05ஆம் திகதி முதல் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் பிலிமத்தலாவ, எம்பிலிமீகம, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம், செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றையும் சமர்ப்பிப்பதன் பேரில் RFP ஆவணங்கள் வழங்கப்படும்.

முன்மொழிவு முன்னோடிக் கூட்டமொன்று 2024 செப்டெம்பர் 12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.

மேலதிக தகவல்களை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையான வேலை நேரங்களில் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனத்திற்கு :** பொறி. R.M.S.J.B. ரத்நாயக்க, செயற்றிட்டப் பணிப்பாளர்,
கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
எம்பிலிமீக,
பிலிமத்தலாவ, இலங்கை.
தொலைபேசி: +94 81 2056362 தொலைநகல்: +94 81 2056360
மின்னஞ்சல்: pdkmttrda@yahoo.com

முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரமான 2024 செப்டெம்பர் 24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பிந்தாமல் பின்வரும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. RFP ஆவணம் கையொப்பமிடப்பட்ட வன் பிரதியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு (CPCM),**
**மே/பா செயலாளர், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,**
**பெறுகைப் பிரிவு,**
**07ஆம் தளம், ''மகநெகும மஹமெதுர'',**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**இலங்கை.**

**உங்கள் உண்மையுள்ள,**

**தலைவர்,**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு (CPCM),**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,**
**''மகநெகும மஹமெதுர'',**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**இலங்கை.**

# விலைமனு அழைத்தல்

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான கீழ்க் காணப்படும் அலகுகளிற்கு குறித்த கொள்வனவுகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E | F |
|---|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | கருமங்களின் விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் செல்லுபடிக் காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் | ICTAD பதிவுத் தரம் |
| | | | காசாக எனின் | வங்கி வரைவு ஒன்றெனின் | பிணையம் செல்லுபடிக் காலம் | | |
| 01 | பட்ட அத்த அரச விதை உற்பத்திப் பண்ணையில் PUMP House ஒன்றை நிர்மாணித்தல் | SPD/2/5/4/ 25 (2024) | 30,050/- | 60,100/- | 2024.12.27 | ரூ. 2,000.00 | C8&C7 |
| 02 | பெல்வெஹர அரச விதை உற்பத்திப் பண்ணையின் IIIB இல.55 உத்தியோகபூர்வ இல்லம் பழுதுபார்த்தல் | SPD/2/5/4/ 29 (2024) | 56,750/- | 113,500/- | 2025.01.11 | ரூ. 3,000.00 | C7&C6 |
| 03 | பொலன்னறுவை பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் வாகன நிறுத்துமிடத்தைப் பழுதுபார்த்தல் | SPD/2/5/4/ 31 (2024) | 52,150/- | 104,300/- | 2025.01.11 | ரூ. 3,000.00 | C7&C6 |
| 04 | அளுத்கம பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைககள்) பணியகத்தின் அலுவலக கட்டிடம் பழுதுபார்த்தல் நான்காம் கட்டம் | SPD/2/5/4/ 32 (2024) | 234,200/- | 468,400/- | 2025.01.25 | ரூ. 10,000.00 | C6&C5 |
| 05 | பெல்வெஹர பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணியகத்தின் அலுவலகக் கட்டிடம் பழுதுபார்த்தல் | SPD/2/5/4/ 33 (2024) | 294,760/- | 589,520/- | 2025.01.25 | ரூ. 10,000.00 | C5&C4 |
| 06 | பொலன்னறுவை பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணியகத்தின், அலுவலக கட்டிடம் பழுதுபார்த்தல் | SPD/2/5/4/ 36 (2024) | 322,250/- | 644,500/- | 2025.01.25 | ரூ. 10,000.00 | C5&C4 |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காகப் பெற்றுக் கொள்ளும் விலைமனுப் படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிர்வாக அலுவலகரிடம் சமர்ப்பித்து 2024.09.06 முதல் 2024.09.26 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர் இல.2,3,4,5,6 இற்கான சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களுக்காக விலைமனு சமர்ப்பிக்கும், விலைமனுதாரர்கள் 1987 இல. 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேற்படி அட்டவணையில் D இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் வங்கி வரைவு ஒன்றாக பிணை வைப்புச் செய்வதாயின் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024.09.27 அன்று பி.ப. 2.00 இற்கு முடிவுறுவதுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதனை.**
2024.09.05

**081-2388106/122**

# கேள்விக்கான அழைப்பு

## ஊவா மாகாண கல்வி அமைச்சு - பதுளை

## கேள்வி இல. 9/கி/9/3/3 மற்றும் 9/கி/9/3/6

01. ஊவா மாகாண கல்வியமைச்சின் செயலாளர் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் ஒப்பீட்டு அடிப்படையிலான வழங்கல் மற்றும் மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கலின் கீழ் கீழ்க்காணும் உபகரணங்களை வழங்குதல், கொண்டு வந்து ஒப்படைத்தல் மற்றும் பொருத்தி, செயற்படுத்தி, ஒப்படைத்தல் மற்றும் மரத் தளபாடங்களை கொண்டுவந்து ஒப்படைப்பதற்காக தகைமை கொண்ட தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | விபரம் | உருப்படி இலக்கம் | பொருள் வகை | அளவு | கேள்விப் பிணை (இ.ரு) | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஊவா சமூக வானொலிக்குத் தேவையான, உபகரணங்களை வழங்குதல் | 1 | CON SOLE WITH TALK BOX, SURGE PROTECTORS, EXTERNAL BLUE TOOTH TX/RX MODULE | 1 | 30,000.00 | 3500.00 |
| 2 | பாடசாலைகளுக்குத் தேவையான சிறுவர் கதிரை (பெரியது) மற்றும் சிறுவர் மேசை (பெரியது) வழங்குதல் | 2 | சிறுவர் கதிரை (பெரியது) | 1100 | 39,000.00 | 3500.00 |
| 3 | | 3 | சிறுவர் மேசை (பெரியது) | 1100 | 61,000.00 | 3500.00 |

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை பதுளை, ஊவா மாகாண கல்வியமைச்சின் பிரதம கணக்காளரிடம் (தொ.பே.இல.: 055 - 2222814, பெக்ஸ்.: 055 - 2230962) பெற்றுக்கொள்ள முடிவதுடன் 2024 செப்டெம்பர் 05 முதல் செப்டெம்பர் 27 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) மேற்படி முகவரியில் கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத கட்டணத்தை நிதி உதவியாளரிடம் செலுத்திய பின்னர் 2024 செப்டெம்பர் 05 முதல் 2024 செப்டெம்பர் 27 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கிடையில் மேற்படி (3ஆம் பந்தியில்) முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

05. நகல் பிரதியுடனான கேள்விகள் 2024 செப்டெம்பர் 30ஆம் திகதி பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, ஊவா மாகாண கல்வி அமைச்சு, ஊவா மாகாண சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கல்வியமைச்சின் கணக்குக் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நகல்பிரதி, மூலப்பிரதியின் சகல பக்கங்களிலும் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதியாக இருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் 2024 செப்டெம்பர் 30ம் திகதி பி.ப. 2.00 இற்கு கீழ்க்காணும் முகவரியில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

06. பெறுகைபற்றிய தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண கல்வி அமைச்சு,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை,**
**திகதி: 2024.09.05**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர்/ கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ME/ME/ML/72/2024 | காக்கைத் தீவு கடற்கரை பூங்காவில் இரண்டு மலசலகூடங்கள், சிறுவர் கழிவறைகள் மற்றும் வசதிகள் நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு | 5,900.00 | 12,000.00 ரூபா நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் சகிதம் ஜெனிட்டோரியல் சேவைகள் வழங்குதல், சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளில் அனுபவத்தைக் கொண்ட தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் | பொறியியல் பணிப்பாளர் (காணி) தொலைபேசி: 011-2695475 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- ➢ வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.
- ➢ வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2024-09-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2024-09-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2025.04.23ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2025.03.24ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2024-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

## கமத்தொழில் அமைச்சு

## கமத்தொழில் திணைக்களம்

பேராதனை, கமத்தொழில் திணைக்கள உரித்தான நிர்மாண வேலையை பூர்த்தி செய்வதற்காக கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ICTAD (CIDA) பதிவைக் கொண்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

பெறுகை வழிகாட்டி 8(1) (அநுபந்தம்-13) இன் பிரகாரம் முகவரொருவராக,

பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிட்டவராக செயற்படும் எந்தவொரு விண்ணப்பதாரியும் 1987-03 ஆம் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரியானவர் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை முன்வைத்தல் வேண்டும்.

கீழே கூறப்பட்டவாறான மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவை செய்த பின்னர் 2024.09.05ஆம் திகதியிலிருந்து 2024.09.25 ஆம் திகதி வரையும் பேராதனை, கமத்தொழில் திணைக்கள பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யலாம்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவலை பேராதனை, கமத்தொழில் திணைக்கள பொறியியல் பிரிவிலிருந்து பெற்று எந்தவொரு வேலை நாளிலும் அதே முகவரியில் எந்தவொரு பணக்கொடுப்பனவுமின்றி கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

2024.09.26 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கேள்விக்கோரல்கள் கேள்வி பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்த பின்னர் பொறியியல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, பொறியியல் பிரிவு, கமத்தொழில் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் கேள்விகள் அதே நாளில் மு.ப. 10.30 மணிக்கு பேராதனை, கமத்தொழில் திணைக்கள பொறியியல் பிரிவில் கேள்விதாரரின் அல்லது அவரது சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் முன்னிலையில் திறக்கப்படும்.

கேள்விப் பெயர் (வேலையின் தன்மை), திறத்தல் திகதி மற்றும் நேரம் உறையின் இடது பக்க மேல் மூலையில் காட்டப்படல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

உரித்தான விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2024.09.18 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கமத்தொழில் திணைக்களம், பேராதனையில் நடைபெறும். விலைமனுக்களை சமர்ப்பிக்க விரும்பும் அனைத்து கேள்விதாரர்களும் இந்த கூட்டத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

| வேலையின் தன்மை | பதிவு வகுதி (ICTAD) (CIDA) (கட்டிட நிர்மாணங்கள்) | கேள்விப் பிணை கமத் தொழில் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப்படாதது (ரூபாவில்) | மீளளிக்கப்படுவது | |
| | | | ரொக்கப் பணத்தில் (ரூ) | வங்கி உத்தரவாதத்தின் மூலமாக (ரூ) |
| பேராதனை சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை இல. 1092 இல் உள்ள விடுதிகளின் கூரை பழுதுபார்த்தல் (ரூபா 16,297,939.66) | சி-04 சி-05 | 7,000.00 | 162,950.00 | 325,900.00 |
| மஹாஇலுப்பள்ளம விதை உறுதிப்படுத்தல் சேவை ஆய்வுகூட கட்டிட நிர்மாணம் (ரூபா 30,623,121.08) | சி-05 சி-06 | 7,000.00 | 306,200.00 | 612,400.00 |

**பிரதான பொறியியலாளர்,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**பொறியியல் பிரிவு, கமத்தொழில் திணைக்களம், பேராதனை.**
**தொலைபேசி இல.: 081-2388006/081-2388126 தொலைநகல்: 081-2384308**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/ PT/02/056 | Spares for Cummins NTA 855 Engines of Mitsui Paceco RTG Cranes | 300,000.00 | 3,500.00 | 26-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/10/059 | 49,000 Nos of Bar Soap ( Local ) 650 Grams | 22,000.00 | 1,000.00 | 26-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/07/059 | Spares for BombasItur Sea Water Cooling Pump of Tug Barana II & Tug Vijayabahu | 35,000.00 | 1,000.00 | 26-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/23/001 | 01 No. Electric Rider Stacker | 30,000.00 | 1,000.00 | 27-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/02/057 | 30 Nos. of Cabin Fans for UD Nissan Prime Movers & Terberg Yard Tractors | 20,000.00 | 1,000.00 | 27-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/03/059 | 05 Nos. Actuator ELC Governer 3408326 | 35,000.00 | 1,000.00 | 27-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/01/060 | 06 Nos. 1400 X24 – 24PR Tyre Sets with Tube and Flap for the TCM 25 Ton Lifters | 19,500.00 | 1,000.00 | 30-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/07/060 | Marine Quality Paint & Thinner for Tug Therapuththabahaya | 12,000.00 | 1,000.00 | 30-09-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/ PT/18/053 | Rubber Fenders for Pilot Launches | 22,000.00 | 1,000.00 | 30-09-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 செப்டெம்பர் 06ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

* Trusted Marketplace of Classified Advertisers...
OBSERVER adz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
Lake House Branch Acc. No. 000000377

## சம்பியனானது யூனிலீவர்




*MCA* மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற *Mercantile G* பிரிவு கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில், *Amazon Trading English Tea Shop* அணியை வீழ்த்தி, யூனிலீவர் ஸ்ரீ லங்கா அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அனுஷ்க பண்டாரவின் தலைமையிலான, யூனிலீவர் அணி லீக் சுற்றில் சோபித்து நொக் அவுட் சுற்றில் *Singer Sri Lanka, Star Garments, South Asian Technologies* அணிகளை வீழ்த்தியே இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப் போட்டியில், சச்சிர விஜேசிங்க (51 ஓட்டங்கள்) மற்றும் ஹரிஷாந்த் ராஜேந்திரன் (29 பந்துகளில் 75 ஓட்டங்கள்) ஆகியோரின் துடுப்பாட்டம் வெற்றிக்கு வழிவகுத்தது.

தொடர் முழுவதும் துலான் அபேநாயக்க மொத்தமாக 202 ஓட்டங்களுடன் துடுப்பாட்டத்தில் முன்னிலை பெற்றதோடு, தசித நிர்மல பந்துவீச்சில் அதிக விக்கெட்டுகளை (15) கைப்பற்றினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹரிஷாந்த் ராஜேந்திரனுக்கு போட்டியின் சிறந்த வீரருக்கான விருது வழங்கப்பட்டது.

## ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் அசித்த அதிரடி முன்னேற்றம்



இங்கிலாந்துக்கு எதிராக லோட்ஸில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சோபித்த இலங்கை வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் தரவரிசையில் அதிரடியாக ஒன்பது இடங்கள் முன்னேற்றம் கண்டு 8 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இலங்கை அணி இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மேலும ஒரு போட்டி எஞ்சி இருக்கும் நிலையில் தொடரை 0–2 என இழந்தது. எனினும் நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மொத்தமாக 14 விக்கெட்டுகளை வீழ்த்திய அசித்த பெர்னாண்டோ தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியோர் வரிசையிலும் முதல் இடத்தில் காணப்படுகிறார்.

குறிப்பாக அவர் இரண்டாவது டெஸ்டில் மொத்தம் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதனை அடுத்தே அவர் டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் முன்னேற்றம் கண்டுள்ளார்.

டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்தர் அஷ்வின் முதல் இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று லோட்ஸ் டெஸ்டில் அரைச்சதம் பெற்ற கமிந்து மெண்டிஸ் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் 11 இடங்கள் முன்னேறி 25 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

## தங்கச் சமர் கிண்ணம் சிவானந்தா அணி வசம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்



திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணிக்கு எதிரான தங்கச் சமர் கிரிக்கெட் போட்டியில் கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி அணி 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ கோணேஸ்வரா அணி 32.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது. பதிலெடுத்தாடிய சிவானந்தா தேசிய கல்லூரி அணி 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை எட்டியது. ஆட்ட நாயகனாக சிவானந்தா தேசிய கல்லூரி அணித் தலைவர் நிரூபன் தெரிவானார்.

## ஜீரீ.சீ சலேஞ்சஸ் வெற்றி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை பிறிமியர் லீக் ஏ.பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஜீரீ.சீ சலேஞ்சஸ் அணி சம்பியனானது.

ஆறு அணிகளுடன் மூன்று நாட்களாக நடந்த இந்தத் தொடரின் இறுதிப் போட்டி அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (01) இரவு நடைபெற்றது. இதில் கப்பலடி கிங்ஸ் அணியை எதிர்கொண்ட ஜீரீ.சீ சலேஞ்சஸ், நிர்ணயித்த 42 ஓட்ட வெற்றி இலக்கை 7 விக்கெட்டுகளை இழந்து எட்டியது.

# சர்வதேச செய்திகள்

## உக்ரைனிய நகரங்களில் ரஷ்யா சரமாரி தாக்குதல்

### பலரும் உயிரிழப்பு



உக்ரைனின் பொல்டாவா நகரில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 51 பேர் கொல்லப்பட்ட நிலையில் ரஷ்யாவின் புதிய தாக்குதல்கள் காரணமாக ஒட்டுமொத்த உக்ரைனிலும் வான் எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கு நகரான லிவிவில் இடம்பெற்ற புதிய தாக்குதல் ஒன்றில் எழுவர் கொல்லப்பட்டதோடு தலைநகர் கீவில் ரஷ்ய ஏவுகணைகளை வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்த நிலையில் அங்கு வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. லிவிவில் கொல்லப்பட்டவர்களில் தாய் மற்றும் அவரது மூன்று மகள்கள் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இங்கு ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகள் கொண்டு ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக லிவிவ் நகர மேயர் அன்ட்ரி சடோவி குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம் கரிவிரி நகரில் தொடர்மாடி குடியிருப்பு ஒன்று தாக்கப்பட்டதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

பொல்டாவா நகரின் இராணுவ கல்லூரி மற்றும் அருகில் உள்ள மருத்துவமனை ஒன்றின் மீது ரஷ்யா கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய ஏவுகணை தாக்குதல்களில் 51 பேர் கொல்லப்பட்டு மேலும் 271 பேர் காயமடைந்துள்ளனர். உக்ரைன் போர் ஆரம்பித்தது தொடக்கம் ரஷ்யாவின் மிகப்பெரிய தாக்குதல்களில் ஒன்றாக இது உள்ளது.

இந்நிலையில் முழு நாடும் வான் எச்சரிக்கையின் கீழ் வைக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவின் உள் பகுதியை தாக்கும் ஏவுகணைகளையும், தனது வான் பாதுகாப்பை மேம்படுத்த கூடுதல் வான் பாதுகாப்பு அமைப்புகளையும் தருமாறு மேற்கத்திய நாடுகளிடம் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி மீண்டும் ஒருமுறை கோரிக்கை விடுத்துள்ளார்.

## தாய்வானை முழு உறுப்பு நாடாக ஐ.நாவில் இணைக்க வலியுறுத்து




தாய்வானை முழுமையாக அங்கீகரித்து உறுப்பு நாடாக ஐக்கிய நாடுகள் சபையில் இணைத்துக் கொள்ளுமாறு அமெரிக்காவின் ஐ.நாவுக்கான முன்னாள் தூதுவர் நிக்கி ஹேலி வலியுறுத்தியுள்ளார். தாய்வான் அரசாங்கத்தின் அனுசரணையில் தைப்பேயில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தோ பசுபிக் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், ஜனநாயக நாடுகள் தீர்க்கமாகச் செயற்பட தேவை காணப்படுகிறது. நாம் தாய்வானை ஆதரிப்பது அவசியம். இச்சந்தரப்பத்தில் அமெரிக்காவும், ஐரோப்பாவும் ஆசியாவிலுள்ள அதன் நட்பு நாடுகளும் தங்கள் இராணுவப் பலத்தை விரைவாக வலுப்படுத்த வேண்டும். தாய்வானை உலகளாவிய சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்த இடமளிக்க முடியாது என்றார்.

## காசாவில் போர் நிறுத்தத்திற்காக அமெரிக்கா இறுதி முயற்சி: இஸ்ரேலின் தாக்குதல் நீடிப்பு

### மேற்குக் கரையிலும் 'போர் பாணியில்' சுற்றிவளைப்பு

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்வதோடு மேற்குக் கரையில் சுற்றிவளைப்புகள் நீடிக்கும் சூழலில் இறுதி போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றுக்கான சக மத்தியஸ்தர்களான எகிப்து மற்றும் கட்டாருடன் இணைந்து பணியாற்றப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் மத்தியு மில்லர் இதனை உறுதி செய்திருப்பதோடு 'உடன்படிக்கையை இறுதி செய்யும் நேரமாக இது உள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த பல மாதங்களாக நீடிக்கும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் போர் தரப்புகளான இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே சமரசம் ஒன்றை எட்டுவதற்கு மத்தியஸ்தர்களால் முடியாமல்போயுள்ளது. இந்நிலையில் இறுதியாக போர் நிறுத்த முன்மொழிவு ஒன்றை அமெரிக்கா சமர்ப்பிக்கவிருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் இருந்து அண்மையில் ஆறு பணயக்கைதிகள் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் எஞ்சியுள்ள பணயக்கைதிகளை மீட்டுவரும் உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வதற்கு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்கு அழுத்தம் கொடுத்து இஸ்ரேலில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வந்தபோதும் நெதன்யாகு தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்.

'பணயக்கைதிகளை உயிருடன் மீட்பதற்கு ஹமாஸுடன் உடன்படிக்கை ஒன்றை பெறும் வாய்ப்பை இஸ்ரேல் பிரதமர் அழித்துவிட்டார்' என்று டெல் அவிவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடு ஜொனதன் ஈடன் என்பவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டுள்ளார்.

'அவர் தனது அரசியல் வாழ்வு மற்றும் தனது கூட்டணியை காப்பது பற்றி மாத்திரமே சிந்திக்கிறார்' என்று 26 வயதான அந்த இளைஞன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 334 ஆவது தினமாகவும் காசாவில் இஸ்ரேலியப் படைகள் நேற்று நடத்திய தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு காசாவின் ஷெய்க் செயித் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் குறைந்து ஆறு பேர் கொல்லப்பட்டு மற்றும் காயமடைந்ததாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.



முன்னதாக காசா நகரில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு குறைந்தது நால்வர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமாக வபா தெரிவித்தது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் 42 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு 107 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைப்பு நேற்று தெரிவித்தது. காசாவில் 11 மாதங்களை தொடும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 40,861 அதிகரித்திருப்பதோடு மேலும் 94,398 பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலின் கடும் தாக்குதல்கள் மற்றும் மோதல்களுக்கு மத்தியிலும் காசாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் நான்காவது நாலாக நேற்றும் இடம்பெற்றது. இந்தத் தடுப்பு மருந்து வழங்கும் பணியில் நல்ல முன்னேற்றம் இருப்பதாக குறிப்பிட்டிருக்கும் பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மத்திய காசாவில் முதல் மூன்று நாட்கள் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தில் சுமார் 187,000 சிறுவர்களுக்கு தடுப்பு மருந்து வழங்கப்பட்டிருப்பதாக அந்த ஐ.நா. நிறுவனம் குறிப்பிட்டது. இந்தத் திட்டம் இரண்டாவது கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

காசாவில் 25 ஆண்டுகளில் முதல் முறையாக கடந்த மாதம் போலியோ தொற்றிய குழந்தை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே இந்தத் தடுப்பு மருந்து வழங்கும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தடுப்பு மருந்து வழங்குவதற்காக முன்னர் வகுக்கப்பட்ட இடங்களில் எட்டு மணி நேர போர் நிறுத்தம் ஒன்றை கடைப்பிடிக்க இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இணங்கின. இந்தப் போர் நிறுத்தம் மீறப்பட்டதாக இதுவரை எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை.

காசாவில் சுகாதார கட்டமைப்பு வீழ்ச்சி கண்டு அங்குள்ள பெரும்பாலான மருத்துவமனைகள் தகர்க்கப்பட்டதே போலியோ தொற்று ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது.

மறுபுறம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் இஸ்ரேலியப் படையின் முற்றுகை எட்டாவது நாளாகவும் தொடர்ந்ததோடு அங்கு இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது. இதில் மேலும் பலர் காயமடைந்து மற்றும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜெனினின் மேற்காக உள்ள கபிர் தான் கிராமத்தில் இஸ்ரேலியப் படையினர் நேற்று முன்தினம் நடத்திய சுற்றிவளைப்பு ஒன்றில் 16 வயது அப்துல் ரவுப் என்ற சிறுவன் கொல்லப்பட்டிருப்பதோடு நான்கு ஊடகவியலாளர்கள் காயமடைந்ததாக வபா செய்தி நிறுனம் குறிப்பிட்டது.

கடந்த இரண்டு தசாப்தங்களில் இல்லாத அளவு பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை இஸ்ரேலியப் படை கடந்த ஒகஸ்ட் 28 ஆம் திகதி ஆரம்பித்தது. அது தொடக்கம் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது. இதன்போது இஸ்ரேலியப் படை புல்டோசர் கொண்டு வீதிகள், உட்கட்டமைப்புகள் மற்றும் உடைமைகளை தகர்த்து வருவதோடு வான் தாக்குதல்களையும் நடத்தி வருகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படை போரின்போது பயன்படுத்தும் உயிரிழப்புகளை ஏற்படுத்தக் கூடிய மூலோபாயங்களை செயற்படுத்துவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அமைப்பு தெரிவித்துள்ளது.

## இரண்டாவது பணயக்கைதியின் வீடியோவை ஹமாஸ் வெளியீடு



காசாவில் இருந்து இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட ஆறு பணயக்கைதிகளில் இரண்டாவது நபரின் 'இறுதிச் செய்தி' அடங்கிய வீடியோவை ஹமாஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

ரபா சுரங்கப்பாதையில் இருந்து மீட்கப்பட்ட இந்தப் பணயக்கைதிகளை இஸ்ரேலியப் படை நெருங்கியபோது அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேல் குறிப்பிட்டிருப்பதோடு இவர்களின் மரணத்திற்கு இஸ்ரேலே பொறுப்பு என்று ஹமாஸ் குற்றம்சாட்டியுள்ளது.

கொல்லப்பட்ட பணயக்கைதிகளில் ஒருவரான ஒரியோ டனினோவின் இறுதிச் செய்தி அடங்கிய வீடியோவையே ஹமாஸ் நேற்று முன்தினம் (03) வெளியிட்டது. இதில் இஸ்ரேல் பிரதமர் மற்றும் போர்க்கால அமைச்சரவையை விழித்துப் பேசி இருக்கும் அவர், 'எம்மையும் குடிமக்களையும் பாதுகாக்கும் உங்களது நடவடிக்கையில் நீங்கள் தோல்விடைந்துள்ளீர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலிய மக்களிடம் பேசிய அவர், 'எங்களை அலட்சியப்படுத்த வேண்டாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முந்தைய தினம் எடன் யெரூஷமில் என்ற பணயக்கைதியின் வீடியோவை ஹமாஸ் வெளியிட்டிருந்தது. அதில் அவர், 'பணயக்கைதிகளை மீட்டு வருவதற்கு வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்துங்கள்' என்று இஸ்ரேலியர்களிடம் கேட்டுள்ளார்.

## ஹமாஸ் தலைவர்கள் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு



தெற்கு இஸ்ரேலில் ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் ஹமாஸ் அமைப்பின் முன்னணி தலைவர்களுக்கு எதிராக அமெரிக்க நீதித் திணைக்களம் குற்றவியல் குற்றச்சாட்டை பதிவு செய்துள்ளது.

பலஸ்தீன அமைப்புக்கு எதிரான ஓர் அடையாள நடவடிக்கையாக பார்க்கப்படும் இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கும் ஆறு பேரில் மூவர் உயிரிழந்துள்ளனர். ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே கடந்த ஜூலையில் டெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்டதோடு, ஆயுதப் பிரிவு தலைவர் முஹமது தெயிப் கடந்த ஜூலையில் வான் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டார். மர்வான் இஸ்ஸா மார்ச்சில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறியது.

இதில் ஹமாஸ் தலைவர் யெஹ்யா சின்வார், கட்டாரை தளமாகக் கொண்டு இயங்கும் காலித் மெஷால் மற்றும் லெபனானைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஹமாஸ் மூத்த அதிகாரி அலி பரகா ஆகியோரே ஏனைய பிரதிவாதிகளாவர்.

தாக்குதலைத் திட்டமிட்டது, ஆதரித்தது, நடத்தியது ஆகியவற்றில் அவர்கள் பங்காற்றியதாகக் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 5ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.